Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 13/50

දිනමුරසු වාරමලර්

ஜூன்.24-30, 2001

வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

முரசு 413

தீவிரமடையும் அரசியல் நெருக்கடி சந்திரிகாவின் முத்தரப்பு வியூகம்

புறப்படுவீட்டு ஆயுதக் கப்பல்

டெண்டுல்கர் இரசிகர் மன்றம்

அசத்தல் போஸ்டர்

முரசம்

முஸ்லிம் காங்கிரஸ் விரிசல்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும்
அதன் உடன்பிறப்புக் கட்சியான
தேசிய ஐக்கிய முன்னிக்கும்
இடையிலான விரிசல்
முன்னெப்போதும் இல்லாத அளவு
அதிகரித்துள்ளது.

இன்னொரு வகையில் சொல்லப்போனால்
அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும்
அமைச்சர் திருமதி பேரியல்
அஷ்ரப்புக்கும் இடையிலான
தலைமைத்துவப்போட்டி
தீவிரமடைந்துள்ளது.

ஹெலிகொப்டர் விபத்தில்
உயிரிழந்த அமைச்சர்
எம்.எச்.எம்.அஷ்ரபின்
மறைவோடு ஆரம்பித்த இந்த
தலைமைத்துவ முரண்பாடு
கடந்த ஒரு வருடமாக
கட்சிக்குள் புகைந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பிரச்சனை அவ்வப்போது
'தாருஸ்ஸலாமுக்கு' வெளியே
தலைகாட்டி அரசியல்
அரங்கில் கூடான விவாதங்களை
கிளப்பி விட்டு பின்னர்
மங்கிப்போவதுண்டு.

ஆனாலும் இது நீறு பூத்த
நெருப்பாக தொடரும்
ஒன்றென்பதை யாவரும்
அறிவர்.
இந்த இரண்டு கட்சியிலும்
இருப்பவர்கள் ஒரே
குழுவினர்தான்.
தத்தமது அதிகாரங்களை
பங்கிட்டுக் கொள்வதில்தான்
பிரச்சனை!

இவர்களில் யார் பக்கம்
நியாயமிருக்கிறது என்பதை
நாம் ஆராயவரவில்லை.

ஒவ்வொருவர் பக்கமுமுள்ள
நியாய அநியாயங்களுக்கு
அப்பால் இந்த நாட்டில் உள்ள
முஸ்லிம் மக்களின் பெரும்பான்மை
யானவர்களை பிரதிநிதித்துவப்
படுத்தும் ஒரே
வகையான கருத்தைக்கொண்ட
இரு அமைச்சர்களும்
தலைமைத்துவத்திற்காக
சண்டையிட்டுக் கொள்வது
முஸ்லிம்களை
பொறுத்தவரையென்றால்
சுபமான நிகழ்வல்ல!

பலதிசை
நெருக்குவாரங்களுக்கு
மத்தியில் அகப்பட்டுக்கிடக்கும்
முஸ்லிம்களுக்கு காத்திரமானதொரு
அரசியல் தலைமைத்துவம்
இல்லாதுபோனால் அவர்களது
நிலமை மேலும் மோசமாவதை
தவிர்க்க முடியாது!

அண்மைக்காலங்களாக
பேரினவாதத்தின் பிடி
முஸ்லிம்களை வேகமாக அழுத்தத்
தொடங்கியிருப்பதை தெளிவாக
அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில் முஸ்லிம் சமூகத்தின்
பலமான இரண்டு கரங்கள்
ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்பது
துரதிஷ்ட வசமானது.

இந்த தலைமைத்துவ நெருக்கடி
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும்
தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய
கட்சிகள் என்ன நோக்கத்துக்காக
அமைக்கப்பட்டனவோ
அந்த இலட்சிய சிந்தனையிலிருந்து
தலைவர்களை முற்றாக திசை
திருப்பி, ஒருவருக்கொருவர்
அதிகாரத்துக்காக பகைமை
பாராட்டும் நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது.

முஸ்லிம்களுக்கு தீர்க்கப்பட
வேண்டிய பிரச்சனைகள்
ஏராளமாக குவிந்து கிடக்கையில்
அவற்றுக்குத் தீர்வுகாண வேண்டிய
தலைவர்கள் தங்களுக்குள்
பிரச்சனை பட்டுக்கொள்வது
புத்திசாலித்தனமானதல்ல.

ஆதலால் இந்த நெருக்கடிக்கு
நிரந்தரமான தீர்வொன்று விரைவாக
காணப்படவேண்டும்.

விட்டுக்கொடுப்பதை
இஸ்லாம் வரவேற்கிறது.
பகிர்ந்துகொள்வதை
நேரிய வழியென ஆமோதிக்கிறது!

எனவே இருதலைவர்களும்
தாம் சார்ந்து நிற்கும்
சமூகத்தின் விமோசனம் கருதி
அல்லாஹ்வின் பெயரால்
ஒற்றுமையடைவார்களாக!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

ஆன்மீகம்

படித்தவனிலும் பெயரிவன்

ஒருவன் பகவத்கீதையை வாய் விட்டுப் படித்துக் கொண்டிருந்ததை சைதன்யர் ஒரு முறை பார்த்தார். அதே நேரத்தில் மற்றொரு மனிதன் எட்ட அமர்ந்து கொண்டு கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி தந்து கொண்டு இருப்பதையும் கண்டார். அந்த இரண்டாம் மனிதனிடம் "கீதை விளங்குகிறதா?" என்று கேட்டார். "இல்லை பிரபு! எனக்கு அதில் ஒரு பதமும் விளங்கவில்லை..." என்றான் அம்மனிதன். "அப்படியாயின் உன் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகுவானேன்?" என்று கேட்டார் சைதன்யர். அதற்கு அந்த மனிதன் சொன்னான். "கீதை ஓதுவது என் காதில் படும்பொழுது கண்ணன் தேர்த்தட்டில் அமர்ந்து கொண்டு, குந்தி மைந்தனுக்கு ஞான உபதேசம் செய்வது என் அகக்கண்களில் ஒளிர்கிறது. எனவே நான் ஆனந்தப் பரவசமடைந்து கண்ணீர் சிந்துகிறேன்!" படித்தவனிலும் பெரியவன் அன்றோ இத்தகைய பக்தியையும், ஞானக் கண்ணையும் அடையப் பெற்றவன் என்று மகிழ்ந்தார் சைதன்யர்.

ரீ.குணவர்த்தன- களுவாஞ்சிக்குடி.

பாவச் செயல்களின் வழிகாட்டி பார்வை

விழிப் பார்வை மூலமாகவே பாவச் செயல்கள் பல்வேறு விஸ்வரூபம் எடுக்கின்றன. ஆகவேதான் அல்லாஹ் அதனைக் கட்டுப்படுத்த தனது அருள் மறையாம் திரு மறையில் பின்வருமாறு கூறுகின்றான்:

"நபியே! விசுவாசம் கொண்டுள்ள பெண்களுக்கு நீர் கூறுவீராக-அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ் நோக்கியே வைத்து தங்கள் கற்பையும் காப்பாற்றிக் கொள்ளவும்!

மேலும் தங்கள் மேனி அழகையும் ஆடை ஆபரணங்களின் அலங்காரத்தையும் மறைத்து முந்தானைகளால் மார்பகத்தையும் மறைத்து வைத்திருக்கவும்.

அல்குர் ஆன் 24:31

இன்னும் "நபியே! விசுவாசிகளான ஆண்களுக்கு நீர் கூறுவீராக-அவர்கள் தங்கள் பார்வைகளை என்றும் கீழ் நோக்கியே வைத்திருக்கவும் தங்கள் (மர்மஸ்தலங்களை) கற்பைக் காப்பாற்றிக் கொண்டிருக்கவும்.

நிச்சயமாக அவர்களை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கிறான்."

அல்குர் ஆன் 24: 30

எம்.சி.கலீல்-கல்முனை-05.

கைவிடாதவர்

"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை"

யோசுவா 1:5

பெற்றெடுத்த குழந்தையை குப்பைத் தொட்டியிலே வீசி அக் குழந்தையை தாய் கைவிடுவதையும் பெற்று தாலாட்டி, சீராட்டி வளர்த்த தாய் தந்தையை வீட்டை விட்டு விரட்டி, பெற்றோரை கைவிடும் பிள்ளைகளையும் குறித்து நாம் அநேகம் கேள்விப்பட்டிருக்கிறோம். "ஸ்திரியானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை" **ஏசாயா-49:15**

என்று வாக்குரைத்த தேவன், தனக்கிருந்த ஒரேயொரு வாலிப மகனையும் இழந்து கைவிடப்பட்ட விதவையின் மரித்த மகனை உயிர்ப்பித்துக் கொடுத்து கைவிடாதவர் என்பதை நிரூபித்தார்.

லூக்கா-7:11-15

அவர் தாமே இன்றும் நாம் எந்த நிலையில் இருந்தாலும் ஒருபோதும் நம்மை கைவிடாமல் காத்துக்கொள்வார்.

சகோ.டேவிட் எஸ்.சந்திரதாஸ்-நாவலப்பிட்டி.

கவிதைப் போட்டி இல.413

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 30.06.2001

கவிதைப் போட்டி இல.413
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

பரிசுக்குரிய கவிதை

கவிதைப் போட்டி இல.410

சொல்லுங்கள்!

ஊரிழந்து உறவிழந்து,
நாடிழந்து நகரிழந்து,
சொத்து சுகம் தானிழந்து,
பெற்றபிள்ளை பறிகொடுத்து
வீதியிலே தலைவனவன்
கைமடித்து தானுறங்க
காத்திருக்கும் தாய் குலங்கள்
எந்த நாட்டு அகதிகளோ!!!

ஹப்புத்தளையூர் மனோ
கோபாலன்.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

அகதி(கள்) குறை

தென்றல் புயலாக
தேடல் திசைமாற
வீடு வாசல் இழந்தோம்!
காடே வீடாக, கழிப்பறையே
படுக்கையாக
கூடி வாழ்கின்றோம்,
குறை தீர்க்க யாருமில்லை!

நா. ஜெயபாலன்-பிபிலை.

சமாதானக் கனவு

சமாதானத்தைப் பற்றி
சிந்தித்த எனக்கு
என் எண்ணத்தில் தோன்றிய
கனவுக் காட்சி இது...
நனவாகுமோ என்னவோ...!
எனக்குத் தெரியாது,
பொறுத்திருந்து பார்ப்போம்...!

தேவராசா ஸர்மிகா-செங்கலடி.

சமாதானம் நோக்கி....?

ஏறிவிட்டதே விலைவாசி- அதனால்
தெருவில் கிடக்கும் நாம்-இலங்கை வாசி!
எங்களை எல்லாம் அநாதையாக்கிய-பின்...,
தான் போகப் போறீரோ சமாதானம் நோக்கி...!

சுகுமாரன் சுபா-தலவாக்கலை.

உலகமே விழித்துக்கொள்!

தட்டிப் பார்த்தேன்
தலைப்பு செய்தியில் தமிழர் பிரச்சனை
தேடிப்பார்த்தேன் தெருவெங்கும்
தேம்பும் அகதி முகங்கள்;
தடுக்கி விழுந்தேன் தரையில்
தமிழர் பிணங்கள்;
உலகமே உற்றுப்பார்- நாளை
உன் கதவையும் இது தட்டும்!

சீனிராசா எடிசன்-கொழும்பு-12.

நாங்கள்

வயிற்றுக்கு உரமில்லாமலும்
வாழ்வதற்கு வழியில்லாமலும்,
கண்ணீர்ச் சிறையுள் ஆயுழ்கைதியாய்
அங்கலாய்க்கிறோம் நாங்கள்!
எங்களை ஏழைகள் என்றா?
அநாதைகள் என்றா?
ஒளிந்திருந்து பார்க்கின்றீர்கள்?

பி.ஹ.சு.ஷிப்லி-நிந்தவூர்-18.

விழித்தெழு...

துயரம் நிலையில்லை,
துவண்டிடல் நியாயமில்லை
விடிவும் தொலைவில்லை
முடிவும் எமக்கில்லை....
விழித்தெழு தெரிகிறது விடிவு...!

சி.சிறிதர்-திக்கம்.

காத்திருக்கின்றோம்

கடற்கரையோர உறக்கத்தை-விட்டு
அகதிகள் எனும் பட்டத்தை-அகற்றி
எங்களுடைய உறவுகளை-
எதிர்பார்த்து
விடுதலை எனும் கதவு-
திறக்கப்படும்வரை
எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்!

லோ.சந்திரிக்கா-மஸ்கெலியா.

பொய்மை

ஓ மனிதனே,
பாவிகளின் ராச்சியத்தில் போலிகள்
ஏராளமடா...!

எம்.ஸ்டான்லி அன்டன்-உப்புவெளி.

எதிர்பார்ப்பு

ஓதுங்குவதற்கோ இடமில்லை;
ஒருக்களிப்போம் கொஞ்சநேரம்
பயணத்தை தொடர்வதற்கு
படகுதனை காணவில்லை!

ம.நிவேந்தா-மட்டக்களப்பு.

வாசக[ர்] சாலை

என் இனிய தினமுரசுக்கு,

வயது ஒன்பதானது குறித்து மகிழ்ச்சி அடைகின்றோம். இவ்வுலகமெல்லாம் தமிழ் பரப்பி அரிய தொண்டு ஆற்றுகிறது. அரசியல், பொருளாதாரம், 'அண்டை மண்டலம்' ஆகியன அரசியல் தெளிவு தருகின்றன. என்போன்ற இளம் வயதினர் 'ஹிட்லர்' வரலாறு படித்து அறிகிறோம். 'எஸ்.ரி.எஸ்.' தொடர் கட்டுரை பிரமிக்க தக்க அனுபவங்களை எமக்கு ஊட்டுகிறது. இராஜகுமாரனின் 'மன்னாதி மன்னன்' விக்கிரமாதித்தனின் கதை, சின்ன திரையில் பார்ப்பது போல் இருக்கிறது. 'காதிலை பூ கந்தசாமி' நன்றாக பூ சுற்றுகிறார். இப்படி எல்லா வகையிலும் எங்கள் தினமுரசு சிறப்புற்று விளங்குகிறது. 410வது முரசில் பகுத்தறிவுச் செம்மல் பதுளை அ. தங்கராசன் எழுதிய 'அவளின் இறுதித்தீர்வு' எனும் சிறுகதை தமிழ் பெண்மையின் சிறப்பை தெளிவாக விளக்குகிறது. அற்புதன் இல்லாத தினமுரசு என்றுமே அற்புதமாக விளங்கும். வாழ்த்துகிறேன்.

ஓ.ஜோதிமலர்,புல்வத்தை, பசறை.

உனது வரவு....

ஒவ்வொரு வாரமும் இனிதே சுமந்து வரும் உனது வரவுக்காக.... காத்திருந்து பெற்றுக் கொள்வதில் மட்டில்லா மகிழ்ச்சிதான், அந்த வகையில்..

முரசு இதழ் 409 தாங்கி வந்த அம்சங்களில்... 'சமாதானமா? உயர் ரக யுத்தமா?' தலைப்பிலான சத்தியனின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', சாவித்திரி கண்ணனின் 'அண்டை மண்டல'த்தில், ஜெயலலிதாவின் அமைச்சரவை, 'அலசுவது இராஜதந்திரி' போன்றவைகள் பிரமாதமாக இருந்தது.

அத்துடன்... 'மதி'யின் 'இதற்குத்தானா இந்த அவசரம்' தலைப்பிலான அம்சத்தில் சில அரசியல் சம்பந்தப்பட்ட விடயங்களை அறிய முடிந்தது. மதிக்கு பாராட்டுக்கள். 'சுதந்திரம் தேடிய யுவதிகள்' உண்மைக்கதையை பார்த்தபோது, நரீனா, சமீனா, ரைஸா மீது தவறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. முற்றிலும் இவர்களது தாய், தந்தையர்களே இதற்கு காரணமானவர்கள் என்பதை உணர முடிந்தது.

முரசின் சிறுகதைகளான, 'கொள்ளை போனதே', 'தண்டனை', 'மௌனம்' போன்றவைகள் பிரமாதமாக இருந்தன பாராட்டுக்கள். அதுபோல இனிதான அம்சங்களை எம் மனம் மகிழ தாங்கிவரும் முரசுக்கு எனது பாராட்டுக்கள்.

புதிய காத்தான்குடி-முஸம்மில்,குவைத்.

விரைவாக வா...!

உலகம் சுற்றும் முரசே!

உன் கருத்துக்களும் கணிப்புக்களும் உறுதியாகவும் உண்மையாகவும் இருப்பதுதான் உனது பெரும் பலம்.

அதனால் தான் 400 முரசுகளைத் தாண்டி இன்னமும் வெற்றி நடைபோட்டு வருகிறாய்.

தகவல்களை முந்தித் தரும் நீ, சில காலமாக எமக்குப் பிந்தியே கிடைக்கிறாய். நாமும் உன்னைச் சூட்டோடு சூடாக பார்ப்பதற்கு வழி ஏற்படுத்தித் தருவாயா?

கடைசியாக எமது கையில் கிடைத்த முரசு 410ன் அனைத்து அம்சங்களும் அருமை. அதிலும் குறிப்பாக அரசியல் கட்டுரைகள் (இலங்கை, இந்தியா) சினிமாச் செய்திகள், சிறுகதைகள், தொடர்கதைகள் அத்தனையும் சூப்பர்.

புலம்பெயர்ந்து வாழும் எம்போன்றவர்களுக்கு எமது தாயகத்திலிருந்து வந்து மகிழ்வூட்டும் நீ, கொஞ்சம் விரைவாக வர வழி செய்வாய் என எதிர்பார்க்கும்,

முரசு வாசகிகளான- ரஜினி-ஜீவா,
ஸ்காபுரோ, கனடா.

கனம் தினமுரசு பத்திரிகை ஆசிரியர் அவர்கட்கு. நான் தினமுரசின் 1994ம் ஆண்டுமுதல் அபிமான வாசகன்.

மேலும் முரசில் எல்லா அம்சங்களும் இருந்தாலும், ஒரு குறை இருப்பதுபோல எனக்குத் தோன்றுகின்றது; என்னவென்றால் கருத்துப்படம் இல்லாமல் வெளிவருவது எனது நீண்டநாள் மனக்கவலை. இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பீர்களா?

அதோடு இங்கு பத்திரிகைகளில் வரும் சிறந்த படங்களை வெட்டி அனுப்பினால் பிரசுரிப்பீர்களா? அதற்கு ஒரு உதம் எழுதுகிறேன். நாங்கள் இங்கு அரபுப் பேப்பரில் பார்த்த (நீண்ட மீசையுள்ள ஒருவரின் படம்) படம் உங்களது தகவல் பெட்டியில் பார்த்து வியந்தோம். மேலும் இதற்கு நல்ல பதில் அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுகொள்கிறேன்.

முரசின் அபிமான வாசகன்
வி.மனிவண்ணன்-தோஹா-கட்டார்.

குறிப்பு:
தகவல் பெட்டிக்கு ஏற்ற படங்களையும் கருத்துக்களையும் அனுப்புங்கள். தகுதி கண்டு பயன்படுத்துவோம்.

(ஆசிரியர்)

நடவடிக்கை எடுப்பார்களா?

வடக்கு கிழக்கில் ஒரு முக்கிய கேந்திர நகரமாக விளங்கும் வவுனியா நகரத்தில் மார்க்கட் ரோட்உள்வட்ட வீதியில், அமைந்துள்ள மலசலகூடம் கவனிப்பார் அற்று துர் நாற்றம் வீசுகிறது.. சலம் கழிப்பவர்கள் வெளியில் சுவரை அசிங்கம் செய்கிறார்கள். இதனால் வீதியில் செல்லும் மக்கள் மூக்கை பிடித்துக் கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதைப்பற்றி உரிய அதிகாரிகள் (மாநகர சபை) நடவடிக்கை எடுப்பார்களா? இதனுடன் பெண்கள் மலசல கூடமும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா காந்தன்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282

அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபடுவதைத் தடுக்க பலத்த முயற்சி!

தலைமைக்கு கட்டுப்பட்டால் பேரியலுக்கு கட்சியில் இடம் என ஹகீம் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹகீமுக்கும் அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி (நு.ஆ)வுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைக்கு மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டு விடக் கூடாதென்ற கோரிக்கை நாடுமுழுவதிலும் உள்ள அந்தக் கட்சிக் கிளைகளில் இருந்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரசுக்குள் ஏற்பட்டுள்ள பிணக்குகள் மற்றும் சவால்கள் என்பவற்றை சமாளிக்க அல்லாஹ்வின் உதவி தேடி பிரார்த்திக்குமாறு அமைச்சர் ரவூப் ஹகீம் விடுத்த கோரிக்கைக்கு புத்தளம் உட்பட நாட்டின் சில பகுதிகளிலிருந்து சாதகமான பிரதிபலிப்பு கிடைத்த அதே வேளை கிழக்கில் எதிர்மறையான நிலமை காணப்பட்டது. அங்கு பேரியல் அஷ்ரப் குழுவுக்கு ஆதரவு தெரிவித்து அன்றைய தினம் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் முழு அளவிலான ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில் தேசிய ஐக்கிய முன்னணி சார்பாக முஸ்லிம் காங்கிரசுக்குள் முக்கிய பதவியொன்றை கோரும் முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வுக்கு எக்காரணம் கொண்டும் மீண்டும் இடமளிக்கப் போவதில்லை என்று அமைச்சர் ஹகீம் தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லாவை துரோகி என வெளிப்படையாக வர்ணித்திருக்கும் ரவூப்ஹகீம் கையெழுத்துப் பத்திரங்களுக்கோ வேறு எந்தவிதமான புற அழுத்தங்களுக்கோ அடிபணிந்து "துரோகிகளுக்கு கட்சியில் இடமளிக்கமாட்டேன்" என திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

திருமதி பேரியல் அஷ்ரப் எந்த நேரத்திலும் தங்களுடன் இணைந்து செயற்படலாம் என்று அழைப்பு விடுத்திருக்கும் ஹகீம், அவர் தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும் பட்சத்தில் அவருக்கு சுதவு தாராளமாகத் திறந்தே இருக்கிறது எனக் கூறியுள்ளார்.

திங்களன்று மருதானையில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா தலைமையகத்தில் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சியில் உணர்ச்சி பொங்கும் உரையாற்றிய ஹகீம் "தேசிய ஐக்கிய முன்னணி தனிமையான அரசியல் பாதையில் போகலாம் என்று நினைப்பதைப் போன்ற முட்டாள் தனம் வேறெதுவும் இல்லை" என குறிப்பிட்டார். ■

மூன்றாண்டு காலத்தில் வடக்கில் மாத்திரம்

2123 சிறுவர்கள் யுத்தத்திற்கு பலி!

இலங்கையில் யுத்தத்தினால் வடபகுதியில் மாத்திரம் கடந்த 3 ஆண்டு காலத்தில் குறைந்தபட்சம் 2123 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக ஆய்வொன்றிலிருந்து தெரிய வந்துள்ளது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உயிரிழந்த இந்த சிறுவர்கள் அனைவரும் ஒன்று முதல் 13 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என அந்த ஆய்வு மேலும் தெரிவிக்கின்றது.

யுத்தத்தில் ஈடுபடுகின்றமை, யுத்தத்திற்கு இடையில் சிக்கியமை, மோட்டார் மற்றும் செல் தாக்குதல்களுக்கு உள்ளாகி கடும் காயமடைந்து சிகிச்சை பெற முடியாமை, மிதிவெடிகள், அமுக்க வெடிகள் போன்றவற்றில் சிக்குண்டமையால் இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதில் 894 பேர் கிளிநொச்சியிலும் 543 பேர் முல்லைத்தீவிலும் 411 பேர் யாழ்ப்பாணத்திலும் மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் 275 சிறுவர்களும் உயிரிழந்துள்ளனர்.

1998ம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டு வரை இடம்பெற்ற இந்த மரணங்களுக்கு மேலதிகமாக மேலும் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் காயங்களுக்குள்ளாகி, ஆயுற்கால அங்கவீனர்களாக இருப்பதாகவும் அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

வடபகுதியில் குடிசன மதிப்பீடு இல்லையென ஜனாதிபதி உறுதியளிப்பு

அடுத்தமாதம் 17ம் திகதி நடைபெறவிருக்கும் குடிசன மதிப்பீடு வடபகுதியில் நடத்தப்பட மாட்டாது என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

குடிசன மதிப்பீடு வடபகுதியில் நடத்தப்படுவதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகள் குறித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கே.என்டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் சுவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்து இம்முறை குடிசன மதிப்பீட்டை வடபகுதியில் நடத்தாமல் விடுவதற்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளார். ■

ஜானக பெரேராவின் நியமனத்தை எதிர்த்து

அவுஸ்திரேலியாவில் ஆர்ப்பாட்டம்

அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவராக முன்னாள் இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திங்கட்கிழமை காலை நாற்றுக்கணக்கான தமிழர்கள் கன்பராவிலுள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ததுடன், அந்நாட்டுப் பாராளுமன்றம் நோக்கியும் பேரணி நடத்தியுள்ளனர்.

இதேநேரம், இலங்கை உள்நாட்டுப் போரில் மனித உரிமை மீறல்கள் மற்றும் சித்திரவதைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஜானக பெரேராவை இலங்கைத் தூதராக அவுஸ்திரேலியாவிற்கு நியமித்ததற்கு சர்வதேச மன்னிப்புச் சபையும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதராக ஜானக பெரேராவை இலங்கை அரசு நியமித்ததற்கெதிராக அவுஸ்திரேலியாவிலுள்ள பல தமிழ் அமைப்புகள் எதிர்ப்புக் குரல் கொடுத்திருந்தன.

இதையடுத்து இவரது நியமனத்தை அவுஸ்திரேலிய அரசு தாமதப்படுத்திய வேளையில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டவுணருடன் தொடர்புகொண்டு இந்த நியமனத்தை ஏற்குமாறு வற்புறுத்தி கேட்டுக்கொண்டார்.

அடுத்த சில தினங்களில் ஜானக பெரேரா அவுஸ்திரேலியா செல்லலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இவரது நியமனத்தை ஏற்க அவுஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது.

சுட்டுக்கொலை

யாழ் குடாநாட்டின் திருநெல்வேலியைச் சேர்ந்த தம்பு சந்திரசேகரம் (வயது 47) என்ற 5 பிள்ளைகளின் தந்தை கடந்த செவ்வாய்க் கிழமை காலை பிள்ளையார் கோவில் வீதியில் வைத்து புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் மேஜர் ஆனந்தன் என்ற புலிகள் இயக்க உறுப்பினர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த புலி உறுப்பினர் குறித்து இவரே படையினருக்கு தகவல் கொடுத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. ■

புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் கிழக்கில் பலி

புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு இராணுவப் புலனாய்வுப் பொறுப்பாளர் நிசாம், கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கொக்கட்டிச்சோலை-பாவற்கொடிச்சேனையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

கடந்த வியாழக்கிழமை நண்பகல் இடம்பெற்ற இந்த கிளைமோர் தாக்குதலின் மர்மம் பற்றிப் பல்வேறு ஊகங்கள் வெளியாகியுள்ளன.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் இராணுவத்தினருடனான பல்வேறு தாக்குதல்களில் தலைமை தாங்கி நடத்தியவர் நிசாம். இப்பகுதிப் புலி உறுப்பினர்களில் சிரேஷ்ட தரத்திலுள்ளவர்.

கொக்கட்டிச்சோலையிலுள்ள நாகேஷ் முகாமில் இவரும் சுகுணா எனப்படும் மற்றொரு புலி உறுப்பினரும் பகலுணவை முடித்துக்கொண்டு கரடியனாறு பகுதியை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

அப்போது வாதகல் மடு எனுமிடத்தில் வைத்து மரத்தில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோர் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளது. கூடச் சென்ற நிசாமின் மெய்ப் பாதுகாவலர் சுகுணாவும் படுகாயமடைந்துள்ளார். ■

வவுனியாவில் நீதிபதி, பிரிகேடியரின் அறிவித்தல்கள் நடைமுறைக்கு வருமா?

இயக்கங்களின் வரித் தொல்லையில் இருந்து மீள வவுனியா மாவட்ட நீதவான் இளஞ்செழியன் மற்றும் வவுனியா பிரிகேடியர் ஆகியோர் கடும் நடவடிக்கை எடுப்பார்கள் என அறிவிக்கப்பட்டது.

ஆயினும் வரி, கப்பம் இன்னும் குறைந்தபாடில்லை. வவுனியா தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்க (P.D.C.S) பொதுக் கூட்டத்தில் புளொட் அமைப்பு 1 போத்தல் கள்ளுக்கு 1 ரூபா வீதம் தர வேண்டும் எனக் கோரியுள்ளது. கூட்டுறவுச் சங்கத்திற்கே இக் கதியென்றால் ஏனைய தனியாட்களினதும் வர்த்தகர்களினதும் நிலையைச் சொல்ல வேண்டியதில்லை.

மாநகர சபையாக தரமுயர்வு

கல்முனை நகர சபை மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. இந்த மாநகர சபையில் 17 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர்

இதேவேளை அக்கரைப்பற்று பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்துமாறு அமைச்சர் பேரியல் அஷ்ரஃப் அவர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏறாவூர் பிரதேச சபையையும் நகர சபையாகத் தரமுயர்த்துவதற்குரிய முன் முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. விரைவில் ஏறாவூர் நகர சபையாகத் தர முயர்த்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. ■

சமாதானக் கதவுகள் எப்போதும் திறந்திருக்காது என்கிறார் பிரதமர்

"தற்போது கிடைத்திருக்கும் சமாதானத்திற்கான அரிய வாய்ப்பைப் பொறுப்பற்ற விதத்தில் புறந்தள்ளி விடாது இதனை புலிகள் உச்சக் கட்டத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் சமாதானத்தின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும் என்று கூறமுடியாது" என பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய அவர் "புலிகள் எதுவித முன்நிபந்தனைகளையும் விதிக்காது அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்ள வேண்டும்.

சமாதானத்திற்கான கதவுகள் நீண்ட காலம் திறந்திருக்க மாட்டாது என்பதையும் அவர்கள் நினைவிற்கொள்ள வேண்டும்" என்று கூறினார். ■

குளோபல் ஸ்பை வெப்தளத்தின்

'புலிகள் இயக்க உளவாளிகள்'

சர்வதேச உளவாளிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய 'த.குளோபல் ஸ்பை' என்ற வெப் தளம் புலிகளின் உளவாளிகளென சிலரது பெயர் விவரங்களை வெளியிட்டுள்ளது.

ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன, டி.சிவராம் (தராகி), வசந்தராஜா ஆகியோரது பெயர்கள் உட்பட பலரின் பெயர்கள் புலிகளின் உளவுத்துறை ஆய்வாளர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பாக டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன வெப்தளத்திற்கு மறுப்பு அனுப்பியிருந்தார். அதற்கு ரண்டினல் என்பவர் பதிலளித்துள்ளார். "இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களை புலிகளின் உளவாளிகள், அல்லது புலிகளுக்கு நெருக்கமானவர்கள் அல்லது புலிகளின் ஆதரவாளர்களாகக் கொள்ளலாம்" என அவர் அனுப்பியுள்ள பதிலில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் கூறப்பட்டுள்ள டி.சிவராம் 'தராகி' என்ற பெயரில் ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதி வருகிறார்.

'தமிழ் நெற்' சேவைக்கு இலங்கை முகவராகச் செயற்பட்டு வரும் திரு.சிவராம் முன்னர் புளொட் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருந்தவர்.

இந்த வெப் தளத்தில் உள்ள விவரங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்க புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ■

'ஊதாரி மைந்தன்' தெரிவு

யாழ். குடாநாட்டின் மிகவும் பின் தங்கிய நிலையில் இயங்கும் மெலிஞ்சமுனை றோமன் கத்தோலிக்க வித்தியாலய மாணவர்களின் 'ஊதாரி மைந்தன்' என்ற மேடை நாடகம் தமிழ்தின போட்டிகளின் மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தீவக கல்வி வலயத்தில் இருந்து பங்கு பற்றிய 46 பாடசாலைகளில் இந்த ஒரு பாடசாலை மட்டுமே மாகாண மட்ட போட்டிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் எதிர்வரும் 6ம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

ரேடாரில் தோன்றிய

மர்மவிமானம் குறித்த விசாரணை

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய 'ரேடார்' திரையில் தென்பட்ட இனந்தெரியாத மர்மமான விமானம் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கட்டுநாயக்க விமான நிலைய விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறையில் ரேடார் திரையில் விமானமொன்று பறந்துசெல்லும் சமிக்ஞை தென்பட்டது.

இலங்கை வான்பரப்பினுள் முன் அறிவித்தலின்றி பறக்கும் இந்த விமானம் பற்றி உடனடித் தகவல் பெற அதிகாரிகள் முயற்சித்துள்ளனர்.

தமது தொடர்பாடல் கருவிகள் மூலம் இவர்கள் அந்த விமானத்தின் விமானியுடன் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் மறுமுனையிலிருந்து எதுவித பதிலும் வரவில்லை.

இதையடுத்து விமான நிலைய கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் விமானப் படையினருக்கு அறிவித்து அவர்களை உஷார்படுத்தினர்.

விமானப்படையின் தாக்குதல் ஜெற் விமானங்களும், தாக்குதல் ஹெலிகொப்டர்களும் மேற்படி மர்ம விமானம் தென்பட்ட, விமான நிலையத்தின் வடபகுதி நோக்கி உடனடியாக விரைந்து சென்று தேடுதல் நடத்தியபோதிலும் எதுவித தடயங்களும் தென்படவில்லை. ■

அமைச்சரிடம் கோரிக்கை

வடக்கு கிழக்கு மாகாண நிருவாக சேவைக்கு ஆள்சேர்ப்பதற்காக 25.05.2001ம் திகதியிடப்பட்ட விசேட வர்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள போட்டிப் பரீட்சையில் தோற்றுவோருக்கான வயதெல்லையை 30ல் இருந்து 34 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்க இந்த பரீட்சைக்கு தோற்றுவதற்கான வயதெல்லை, சார்ந்த மற்றும் சேவை அனுபவம் விதிகளால் இந்தப்பகுதியில் பலர் விண்ணப்பிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டியே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கூறியுள்ளார். ■

வதந்திகள் குறித்து எச்சரிக்கை!

"கிழக்கு மாகாணத்தில் சில இடங்களில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் கடந்த சில நாட்களாக நிலவும் பதற்றத்தை அடுத்து வதந்திகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடந்து சமாதானம் ஏற்படும்-நிம்மதியாக, சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று எதிர்பார்த்திருந்த எமது மக்கள் மீண்டும் ஒரு யுத்த சூழலைச் சந்திப்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

இந்நிலையில் ஆயுதம் தாங்கியவர்களுக்கிடையே நடக்கும் சண்டையை இனங்களுக்கிடையிலான பகையாகமாற இடமளிக்கக்கூடாது. சிறிய சம்பவங்களை அல்லது நடக்காத விடயங்களை திரிவுபடுத்தி மக்களுக்கு மத்தியில் பீதிகொள்ளும் வகையில் உண்மைக்கு மாறான வதந்திகள் பரப்பப்படுகின்றன. இந்த விடயத்தில் மிகவும் கவனமாக நடந்து கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்." என்று மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா எச்சரிக்கை விடுத்துள்ளார். ■

நீலாவணனின் 'ஒத்திகை'

கிழக்கிலங்கையின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்த அமரர் நீலாவணனின் எண்பது கவிதைகள் கொண்ட 'ஒத்திகை' என்ற தொகுப்பு 24ம் திகதி ஞாயிறு மாலை 5.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் வெளியிடப்படவிருக்கிறது.

இந்நூலை கவிஞர் நீலாவணனின் மகனும் சக்தி தொலைக்காட்சி வானொலி இயக்குநருமான திரு.எழில்வேந்தன் தொகுத்து வெளியிடுகிறார். ■

ரெலோ முகாம்கள் இரண்டுக்கு மூடுவிழா

மட்டக்களப்பில் செங்கலடி, ஆரையம்பதி ஆகிய இடங்களில் இயங்கி வந்த ரெலோ இயக்க முகாம்கள் இரண்டு கடந்த வாரம் முதல் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு விட்டன.

செங்கலடியில் இருந்த ரெலோ உறுப்பினர்கள் கொம்மாதுறை இராணுவ முகாமுக்குள்ளும், ஆரையம்பதியிலிருந்த ரெலோ குழுவினர் அங்கிருக்கும் விஷேட அதிரடிப்படை முகாமுக்குள்ளும் இருந்து செயற்பட்டனர்.

தமது இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டவர்கள் இந்தப் பகுதிகளில் வசித்துக் கொண்டு வேண்டத் தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாலேயே தமது முகாமை அப்புறப்படுத்த வேண்டியதாகி விட்டதென ரெலோ இயக்க முக்கியஸ்தர்கள் கூறியுள்ளனர்.

இப்பகுதிகளில் ரெலோ இயக்கத்தினரின் செயற்பாடுகள் குறித்து மக்கள் நீண்ட காலமாகவே அதிருப்தி கொண்டு வந்துள்ளனர்.

ரெலோவிலிருந்து விலக்கப்பட்டவர்களின் நடவடிக்கைகள் தமது அமைப்புக்கு அவப்பெயரைத் தேடித் தந்ததால்தான் தாம் இந்த முகாம்களை மூடிவிட்டதாக செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கூறியுள்ளார். ■

மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

கொழும்பில் ஜூன் 17 முதல் 23 வரை

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

கண்டியில் ஜூன் 24 - 27 திகதிகளில்

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

கல்முனையில் ஜூன் 30, ஜூலை 01 திகதிகள்.

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

வவுனியாவில் ஜூலை 07, 08 திகதிகள்.

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,

Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON) நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 21.06.2001-26.06.2001

இடம் : ஹோட்டல் கிறீன் லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.

தொலைபேசி : 585592, 581986.

HOTLINE : 077-602513.

31ம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பிதழும், நன்றி நவிலலும்.

மலர்வு 11-09-1984

உதிர்வு 29-05-2001

செல்வி துஷ்யந்தி இலங்கநாயகம் (துர்க்கா)
(வசாவிளான்)
(ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி,
திருகோணமலை.
க.பொ.த உயர்தரம் 1ம் ஆண்டு உயிரியல்)

அன்புச் செல்வம் துர்க்காவே!
செவ்வாய் தனிலே தாயின் மடியில் தவழ்ந்தாயே-அச்
செவ்வாய் நாளன்று பெண்மை அடைந்த தவச்செல்வமே
ஈற்றில் செவ்வாயன்றே பெற்றோர்கள் பரிதவிக்க
உடன் பிறப்புக்கள் துடிதுடிக்க
உற்றார் உறவினர், நண்பர்கள் ஏங்கி நிற்க
எமை விட்டு விண்ணகம் சென்றதேனோ?
எம் தவப்புதல்வியே எம்மை விட்டு விண்ணகம் சென்றாலும்
உம் நினைவுகள் என்றும் எம் அனைவரினதும் கண்முன்னே
நீங்காத நினைவுகளாய் நிற்குதம்மா!
எம் தவப்புதல்வியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

எங்கள் ஏக புதல்வியின் துயரச் செய்தி கேட்டு கொழும்பு மலர்ச்சாலையிலும், திருமலை வீட்டிலும் நடைபெற்ற ஈமக்கிரியைகளில் நேரில் வந்து அனுதாபங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், திருகோணமலை கணேசா அச்சக உரிமையாளருக்கும் அங்கு பணிபுரியும் உத்தியோகஸ்தர்களுக்கும், திருமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோருக்கும் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கும், உள்நாட்டிலும், வெளி நாடுகளில் இருந்தும் கடிதம், தொலைபேசி, ஈமெயில் மூலம் தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் எங்கள் அனைவரினதும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் 28.06.2001 வியாழக்கிழமை திருமலை வீட்டில் நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் பங்குபெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரர்கள், அம்மம்மா
தகவல்: திரு.சுப்பிரமணியம் இலங்கநாயகம் (தந்தை)
(இளைப்பாறிய ஆசிரியர்)
26, இராஜவரோதய வீதி,
திருகோணமலை.
தொலைபேசி: 026 - 22397

1வது பிறந்த நாள் வாழ்த்து

ஜெயப்பிரியன்
26.06.2001

சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் ஜெயக்குமார்-விஜிதா தம்பதியின் செல்வப் புதல்வன் **ஜெயப்பிரியன்** 26.06.2001 அன்று தனது முதலாவது பிறந்தநாளை சுவிற்ஸர்லாந்திலுள்ள RHEIN STR-81, 4402 FRENKEN DORE ல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா அம்மா, இலங்கை-ஏறாவூர் அம்மப்பா திரு/திருமதி தருமலிங்கம் தம்பதி (முன்னாள் உபதபாலதிபர்) ஏறாவூர் மாமாமார் சுதாகரன், தனுகரன், லதாகரன் (கட்டார்) அஜந்தா மாமி குடும்பத்தினர், பெரியப்பாமாரான ஜெயராஜா (ஜெர்மனி) ஜெயரஞ்சனி மாமி (இலங்கை), திரு/திருமதி ஜெயசீலன் (ஜெர்மனி) திரு/திருமதி ஜெயஜோதி (அவுஸ்திரேலியா) திரு/திருமதி ஜோன் (ஜெர்மனி) செங்கலடி சாந்திதியேட்டர் திருமதி கணபதிப்பிள்ளை பாட்டி ஆகியோர் ஜெயப்பிரியனை நல்லாரோக்கியத்துடன் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல்: திரு/திருமதி தருமலிங்கம்.
405/4, அம்பலவாணர் வீதி, ஏறாவூர்-05.

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30-11-1934

மறைவு 15-06-1999

அமரர் திரு.கோபாலசுந்தரம்
திருத்தணிகாசலம்.

திதி: 23.06.2001

அன்பின் உறைவிடமே எம்
குடும்பத்தின் ஒளி விளக்கே
துன்பம் சூழ்ந்த போதும்-எம்மை
கலங்காமல் காத்த தெய்வமே
கண்களுக்குள் கனவாகி-எம்
உயிருக்குள் உறைந்துவிட்ட தெய்வமே
காலனவன் பாசக் கயிற்றுக்குள் சிக்குண்டு
உமது அன்பு மனைவியையும்
பாசமிகு பிள்ளைகளையும் தவிக்கவிட்டு
சென்றுவிட்டீரே. என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி. சாந்தி. சாந்தி.
உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மகன்மார், மகள், மருமகள், பேரப்பிள்ளை.
தகவல்: பாபு (மகன்)
சந்தை வீதி, உடுப்பிட்டி.

1வது பிறந்த நாள் வாழ்த்து

செல்வி. ரகிஸ்ஷா 28-06-2001

காங்கேசன் துறையைச் சேர்ந்த செல்வம் வவுனியாவைச் சேர்ந்த லலிதா தம்பதியினரின் செல்வப் புதல்வி ரகிஸ்ஷா தனது 1வது பிறந்த தினத்தை 28.06.2001 அன்று SWITZERLAND BURN நகரில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாட உள்ளார். இவரை அன்பு அப்பா அம்மா இந்தியாவிலிருக்கும் அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாக்களான மூர்த்தி, விக்கி கோபால். மாமியான மாலினி, இலங்கையிலிருக்கும் அம்மப்பா, அம்மம்மா, சித்திமார் சாந்தா, விஜியா, ரேக்கா மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் சீரும் சிறப்புடனும் நீடுழி வாழ்க வாழ்க என செல்வி ரகிஸ்ஷாவை வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: G.K.செல்வம். BATTERKINDEN, SWITZERLAND

காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S.Mani

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

சந்தைக்கு எதிர்பக்கமாக

Tel: 074-519754

மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளி நாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளி நாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளி நாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.

Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளி நாட்டார் தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463,
00941 431137,
00941 470615.
FAX : 00941 344831

உள்நாட்டார் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-431137, 470615, 342463.
FAX: 344831.
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

தியான யோகசக்தி! வசிய வைத்தியம்

1945ம் ஆண்டு ஆரம்பித்த புனித சேவை, சமய கலாசார அமைச்சின் பதிவு இல-HA14/ BT/ 176

சுகாதார அமைச்சினால் பதிவுசெய்யப்பட்ட பதிவு இல:061 ஹோமியோபதி.அக்குப்பங்சர்,சித்த ஆயுர்வேத, மாந்திரீக, மனோவசிய, யோகசிகிச்சையாளர்

டாக்டர்-"மந்திரயோகி"

R.P.H.M-D.Ac-(இலங்கை) P.I.S.M, (இந்தியா)



(YOGA) MY GURU

காதல் பிரச்சனைகளைத் தீர்த்து விரும்பியவர்களை சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்துடன் திருமணம் செய்ய, கணவன்-மனைவி கருத்துவேறுபாடுகள் சந்தேகங்களை தீர்த்து பிரியாமலிருக்க, பிரிந்தவர்கள் வெறுப்ப வர்கள், வேண்டியவர்கள் வந்து உறவாக, தகாத ஆண்-பெண் உறவைபோதை வஸ்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராதநோய், எதிரி தொல்லைகளிலிருந்து விடுபட-கண்ணூறு நாலூறு, சர்வதோஷ நிவர்த்தி சாந்தி பரிகாரங்கள் செய்ய, எத்துன்பங்களும் அணுகாமல் உடல் வீடு வளவு வியாபார இடங்களைக் காவல்செய்ய, திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், பொருளாதாரம், வெளி நாட்டுப்பிரயாணம் வேறுகாரிய வெற்றிக்கு "சகலகாரிய சித்தி இராயவசியங்கள்" செய்துகொள்ள தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள், மனநோய், மருந்தீடு, பயம், பலவீனம், தாழ்வு மனப்பான்மை, கவலை, ரென்ஷன், இவைகளுக்கு சிறப்புச் சிகிச்சைபெற மட்டக்களப்பு கல்லடி குருசக்தி நிலையத்துக்கு (இந்தியன் வைத்தியசாலை) வரமுடியாதவர்கள் தபால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விஷேட தபாலில் எல்லா மதத்தினர்களுக்குமேற்ற தீங்கற்ற தெய்வீக புனித பரிகாரப்பொருட்களைப் பெற்று நியாயமான கோரிக்கைகளை உடன்நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC) KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)

உள்நாட்டு தொ.பே: 065-24872
வெளிநாட்டு தொ.பே: 0094 65 24872

(சர்வதேச) கடல்கடந்து செல்லும் அற்புத ஆன்மீக ஆகர்ஷண வசிய, தியான யோகசக்தி வெளிநாட்டவர்களுக்கு விஷேட செயல்முறைகள் முன்றுநாட்களுக்குள் கையில் கிடைக்கக்கூடிய துரித சேவை.

சிறுபான்மைக் கட்சிகளுக்கு விடுக்கப்பட்ட தேசிய அரசாங்க எச்சரிக்கை!

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னரான அரை நூற்றாண்டு அரசியல் வரலாற்றில் தேசிய அரசாங்கம் ஒன்று ஒருபோதும் அமையப் பெற்றதில்லை. ஆனால் ஒவ்வொரு பொதுத் தேர்தல் முடிவிலும் புதிய அரசாங்கமொன்று உருவாகும் நேரத்தில் இந்த தேசிய அரசாங்க ரெகோட் சூழல்வதுண்டு.

இப்போது மீண்டும் இந்தக் கதை அரசியல் அரங்குகளில் பேசப்படுகின்றது. அரசாங்க உயர் மட்டத்திலிருந்து தேசிய அரசாங்கம் தொடர்பான கருத்துக்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவரத் தொடங்கின. பிரதமர் இரட்ணசிறி விக்கிரம நாயக அண்மையில் ஹொரணையில் வைத்து இது குறித்துப் பேசினார். ஆனால் கடந்த வாரம் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக குருணாகலையில் ஆற்றிய உரை இந்த விடயத்தில் சில சூடான விவாதங்களையும், வதந்திகளையும்கூட பரப்பிவிட காரணமாயிற்று.

சிறுபான்மை கட்சிகளில் சில நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை முன்வைப்பதால் நாட்டை வளப்படுத்த பிரதான கட்சிகள் ஒன்று சேர்ந்து தேசிய அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் என்று அமைச்சர் திஸாநாயக வலியுறுத்தினார்.

இந்த வேண்டுகோளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உடனடியாகவே நிராகரித்திருந்தது. பின்னர் அவ்வாறான எண்ணம் எதுவும் தமக்குக்கிடையாதென ஜனாதிபதியும் தெரிவித்திருந்தார்.



எப்படியிருந்தாலும் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்ட தேசிய அரசாங்கம் தொடர்பான கருத்துக்களையும் அவ்வப்போதைய அரசியல் சூழ்நிலையையும் ஆராய்ந்து பார்க்கும்போது தமது அரசியல் பயணத்தை பிரச்சனை மீன்றித் தொடருவதற்காக ஆளும்தரப்புக்கள் எதிர்க்கட்சிகளுக்கு காட்டிய ஒரு 'கரட் கிழங்காக'வே இதனை கருத வேண்டியுள்ளது.

இப்போது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அரசியல், பொருளாதார, நீதித்துறைகளில் பல தரப்பட்ட நெருக்கடிகளுக்குள் சிக்கித் தவிப்பது ஒன்றும் இரகசியமானதல்ல. அதனால் அந்தப் பிரச்சனைகளில் இருந்து மீள இத்தகையதொரு தேசிய அரசாங்க கரட் கிழங்கை காண்பிக்க நினைத்திருக்கலாம்.

உண்மையில் இந்த நாட்டின் இனப் பிரச்சனைத் தீர்வுக்கு சகல கட்சிகளினதும் கருத்தொருமிப்பு அவசியம். இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து முன்வைக்கும் ஒரு தீர்வே முக்கியமானதென புலிகளும் கூறி வருகின்றனர்.

ஆனால் இலங்கையை பொறுத்த வரையில் தேசிய அரசாங்கம் என்பது இனப்பிரச்சனை தீர்வுக்கானதல்ல. யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதற்கான ஒரு ஆக்கபூர்வமான ஆலோசனையுமல்ல. அது முற்றிலும் ஆட்சியிலிருப்போரின் நலன் சார்ந்த ஒரு தேவையாக முன்வைக்கப்பட்டதையே அவதானிக்க முடிகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியைப் போல நெருக்கடியில் இருந்து கொண்டு அன்றி மிகவும் பலமான ஒரு பாராளுமன்றத்தில் ஆட்சி செய்த ஜே.ஆர்.ஜயவர்த்தனகூட தேசிய அரசாங்கம் குறித்த கருத்தை முன்வைத்தார். அவரது அந்த 'நல்லெண்ணத்தில்' இருந்த உள்நோக்கம், அப்போது மிகவும் பலவீனமாக இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக உடைத்து அநுரா தலைமையிலான ஒரு பிரிவை தன்னுடன் இணைத்துக் கொண்டு தன்னை யாரும் அசைக்க முடியாதபடி ஆட்சி நடத்துவது.

தற்போதைய தேசிய அரசாங்க ஆசையின் மறுபக்கம் முஸ்லிம் காங்கிரஸ் உட்பட அரசாங்கத்துக்கு பிரச்சனை கொடுத்துக் கொண்டிருக்கும் சிறுபான்மைக் கட்சிகளுக்கு ஒரு எச்சரிக்கை விடுப்பது.

அடுத்து நம்பிக்கையில்லா பிரேரணைகள் அடங்களான சிக்கல்களுக்கு ஒரு இலகுவான தீர்வைக் காண்பது.

ஆனால் அரச தரப்பின் இந்த வியூகம் ஐ.தே.க.வுக்குத் தெரியாததல்ல. அதனாலேயே அமைச்சர் திஸாநாயகவின் உரைக்கு உடனடியாக மறுப்பு தெரிவிக்க அந்த கட்சி நடவடிக்கை எடுத்தது. தனது அரசாங்கத்தை கொண்டு நடத்துவதில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்பதை காட்ட ஜனாதிபதியும் தன் பங்குக்கு தமது அமைச்சராலேயே முன்வைக்கப்பட்ட தேசிய அரசாங்க கோரிக்கையை நிராகரித்திருந்தார்.

நாட்டில் உள்ள பிரதான பிரச்சனையை தீர்ப்பதற்காக எதிர்க்கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைப்பதில் சர்வதேச ரீதியில் பல முன்னுதாரணங்கள் இருக்கின்றன. மிகச்சிறந்த அண்மைக்கால உதாரணத்தை இஸ்ரேலில் காணலாம். தீவிர போக்குடைய ஏரியல்ஷெரோன் தேர்தலில் வெற்றி பெற்றதும் பாலஸ்தீனர்களின் எழுச்சிப்போராட்டத்தை முறியடிக்கும் நோக்குடன் உள்நாட்டு அரசியலில் ஸ்திரத்தன்மையை பேணுவதற்காக தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க தோல்வியடைந்த எகுட் பராக்கிற்கு அழைப்பு விடுத்தார். தற்போது எதிர்க் கட்சியை சேர்ந்த பலர் ஏரியல் ஷெரோனின் அரசாங்கத்தில் வெளிநாட்டமைச்சர் உட்பட பல முக்கிய பதவிகளை வகிக்கின்றனர்.

ஆனால் இலங்கை வரலாற்றில் தேசிய அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்த எந்தக் கட்சியிடமும் நாட்டின் தேசிய பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்ற தூய்மையான நோக்கம் இருந்ததாகக் கூறமுடியாது.

பிரச்சனையில் இருப்பவர்கள் அதிலிருந்து மீள்வதற்காக தேசிய அரசாங்கத்தைப் பற்றிப் பேசினார்கள். பிரச்சனையில்லாமல் இருந்தவர்கள் தங்கள் பலத்தை மேலும் அதிகரித்துக் கொள்வதற்காக இந்த திட்டத்தை முன்வைத்தார்கள். ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்படியொரு அரசாங்கம் அமையவேயில்லை.

உண்மையில் பிரதான இரண்டு கட்சிகளினதும் நடவடிக்கைகளை பார்க்கும்போது அப்படியொரு தேசிய அரசாங்கம் அமைந்தால்கூட இந்த நாட்டுக்கு விடிவு வருமா என்பது சந்தேகம் தான்!

ரவூப்ஹகீமின் நோன்பும் பேரியல் அஷ்ரபின் ஹர்த்தாலும்

கடந்த இருவார காலத்துக்குள் அரசியல் வட்டாரங்களில் ஏராளமான சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டு ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்றில்லாமல் சகலரது கவனத்தையும் தன்பக்கம் ஈர்த்தவர் அமைச்சர் ரவூப் ஹகீம்தான்.

இன்னொரு வகையில் சொன்னால் ஆட்சியாளர்களின் நெருக்குதல்களில் இருந்தும் உட்கட்சிப் பூசல்களில் இருந்தும் தன்னை பாதுகாத்துக்கொள்ள ஒரு ஜீவ மரணப் போராட்டம் நடத்தும் அரசியல் வாதியாகவும் அமைச்சர் ஹகீம் விளங்குகின்றார்.

அமைச்சர் எம்.எச்.எம் அஷ்ரபின் திடீர் மறைவிலிருந்தே நெருக்கடிகளை சந்தித்து வரும் ரவூப் ஹகீமுக்கு கடந்த ஒரு மாத காலமும் மோசமான சோதனைகள்!

அமைச்சராக இருந்துகொண்டு அரசாங்கத்தை சங்கடத்துக்கு உள்ளாக்கும் வகையில் நடந்து கொள்வதாக நீண்ட நாட்களாகவே ஹகீம் மீது அரச தரப்பு குற்றஞ்சாட்டி வருகிறது.

அவர் உள்ளே ஒன்றைச் சொல்லி வெளியில் இன்னொன்றைக் கூறுவதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக அண்மையில் பத்திரிகைப்பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார். அத்தோடு நின்று விடாமல் கடந்த வாரம் குருநாகலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அமைச்சர் திஸாநாயக, ரவூப் ஹகீமை பகிரங்கமாகவே திட்டித் தீர்த்துவிட்டார்.

"சாதி, சமய அடிப்படையில் அமைந்துள்ள சிறிய கட்சிகள் தேசிய பிரச்சனையை மறந்து அரசாங்கத்துக்கு நெருக்குதல் தர ஆரம்பித்துள்ளன. அமைச்சர் பதவிகள், பிரதி அமைச்சர் பதவிகள் மட்டுமல்ல வெளிநாட்டு தூதுவர் பதவிகள், வானம் பூமி என்று ஏதேதோவெல்லாம் அரசாங்கத்திடம் கேட்கிறார்கள். அதுமாத்திரமல்ல, தங்களுக்கென்று தனியான நிருவாக மாவட்டங்களையும் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். எதிர்காலத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்று தனித்தனி மாவட்டங்களை கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்வாறான அடிப்படைவாதிகளை அரசாங்கத்தில் இருந்து விரட்ட வேண்டும். நாட்டின் எதிர்கால நலன் கருதி பலம் வாய்ந்த பொருளாதாரத்துடன் கூடிய தேசிய அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும்" என திஸாநாயக தெரிவித்திருந்தார்.

எம்.பீ.எம். பர்ஸான்

ஆனால் இதற்கு உடனடியாக பதில் எதனையும் ஹகீம் சொல்லவில்லை. ஏனெனில் அவரது கொடுக்கல் வாங்கல்கள் ஜனாதிபதியோடன்றி அமைச்சர் திஸாநாயகவோடு அல்ல.

அரசாங்கத்தில் இருந்து விலகப் போவதாக எச்சரிக்கை விடுப்பதில் அமைச்சர் ஹகீம் மிகவும் பிரபலமானவர். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் இரண்டாவது ஆட்சி காலத்தில் அதற்கு ஆதரவு வழங்க ஆரம்பித்ததிலிருந்து அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதாக ரவூப் ஹகீம் கடைசியாக சொன்னது எத்தனையாவது தடவை என்று சரியாக ஞாபகமில்லை!

இவற்றை விடவும் தனது கட்சிக்கு உள்ளே இருக்கும் சிக்கல்களை அவிழ்ப்பதுதான் ஹகீமுக்கு இப்போதிருக்கும் மிகப் பெரும் சவால்.

கடைசியில் அமைச்சர் பேரியல் அஷ்ரபுடன் நேரடியாக மோதிக் கொள்ளும் அளவு நிலமை மோசமாகி விட்டது.

இனிமேல் இவர்கள் இருவராலும் ஒன்றாக, ஒரே கட்சியில் பணியாற்ற முடியுமா என்று சந்தேகிக்கும் அளவு இருவரும் எதிர் திசைகளில் நிற்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸை இரண்டாக உடைத்து விடுவதில் பொதுஜன ஐக்கிய முன்னணி தலைமைக்கு மட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இலாபமிருக்கிறது.

தற்போதைய பிரச்சனையில் அரச தரப்பு அமைச்சர் பேரியல் அஷ்ரபின் பக்கம் கூடுதலாக சாய்ந்துள்ளது.

அரசாங்கத்தை பொறுத்த வரையில் பேரியல் அஷ்ரப் பிரச்சனையில்லாதவர். கொடுப்பதை எடுத்துக்கொண்டு நல்ல பிள்ளையாட்டம் இருந்துவிடுவார். ஹகீம் ஆரம்பத்தில் நல்ல பிள்ளையாக நடந்து கொண்டாலும் போகப்போக தலைவலியாக மாறிவிட்டார்!

யார் என்ன சொன்னாலும் இந்த இரண்டு பேரும் அரசாங்கத்தை விட்டு விலகப்போவதில்லை என்று அடித்துச் சொல்கிறார் அமைச்சர் பௌஸி. முஸ்லிம் காங்கரஸுக்குள் பிளவு என்றதும் அதிகமாக சந்தோஷப்படும் நபர்களில் பௌஸியும் ஒருவர்.

எப்படியிருந்தாலும் அரசுக்கான ஆதரவை விலக்கும் பேச்சை ஒதுபோதும் பேரியல் அஷ்ரப் தரப்பினர் சொன்னதில்லை. அடிக்கடி சொல்லி வந்தாலும் அரசுக்கான ஆதரவை உடனடியாக விலக்கிக்கொள்ளும் நிலையில் ஹகீமும் இல்லை. ஹகீமை நம்பி அரசாங்கதை விட்டு விலக முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.மாரில் எத்தனை பேர் தயாராக இருக்கிறார்கள் என்ற பிரச்சனை ஒரு பக்கம் இருக்கிறது.

தற்போதைய முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.மாரில் ஒரு குழு பேரியல் அஷ்ரபை நம்பியிருக்கிறது. அவர்களின் ஆதரவு ஹகீமுக்கு கிடைக்கப்போவதில்லை.

அதைவிட பெரும் பிரச்சனை, தான் அமைச்சராக வந்தவுடன் தனது அமைச்சின் கீழும் வேறு பல அரசாங்க நிறுவனங்களிலும் தனக்கு வேண்டிய பலரை முக்கிய பதவிகளில் நியமித்தார் ஹகீம். இப்போதுதான் அவர்களில் பலர் ஆண்டவன் புண்ணியத்தில் 'வேலையை' ஆரம்பித்திருக்கிறார்கள். உடனே கவிழ்த்தால் அவர்கள் அத்தனை பேரினதும் நிலமை என்ன ஆவது? அத்துடன் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பலர் வெளிநாடுகளில் தூதுவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரது எதிர்காலமும் ஹகீமின் முடிவில்தான் தங்கியிருக்கிறது. பேரியல் அஷ்ரப்புக்கும் இதே பிரச்சனைகள் உண்டு. ஹகீமை விடவும் இந்த பிரச்சனை திருமதி அஷ்ரபுக்கு உக்கிரமாக இருக்கிறது. மறைந்த அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரபின் காலத்தில் அவருக்கு வேண்டப்பட்ட பலர் அரசாங்க உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டார்கள். பேரியல் அஷ்ரப் அமைச்சராக இருப்பதால்தான் அந்தப் பதவிகளில் அவர்களால் தொடர்ந்து நிலைக்க முடியுமாகி உள்ளது.

தற்போது கட்சிக்குள் நிலவும் தலைமைத்துவப் போட்டியை இந்தப் பின்னணியில் இருந்துதான் பார்க்க வேண்டுமே தவிர, இவர்கள் இருவரதும் சண்டையால் ஒட்டுமொத்தமான முஸ்லிம் சமூகத்திற்கு பெரிதாக எந்த இலாபமும் இல்லை. ஆக கட்சி இரண்டாக உடைந்து வெவ்வேறு பக்கம் கயிறிழுக்கத் தொடங்கினால், முஸ்லிம்களின் அரசியல் பலம் மேலும் குன்றிப்போவதைத்தவிர வேறு பிரதிபலன் எதுவும் இருக்கப்போவதில்லை. இதைத்தான் பேரினவாத கட்சிகள் எதிர்பார்த்திருக்கின்றன. நமது புத்திசாலித்தனமான தலைவர்களும் அதையேதான் செய்வார்கள் போல் இருக்கிறது.

என்ன இருந்தாலும் ரவூப் ஹகீம் மேல் அரசு தரப்புக்கு ஒரு பயம் இருக்கிறது. எதற்கெடுத்தாலும் "ஆதரவை விலக்கிக் கொள்வேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் அவர் பொறுத்த நேரத்தில் கவிழ்த்து விடக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது. ஆனால் இன்னும் 6 வருடங்கள் இதே பல்லவியை பாடிகொண்டு எங்களுடேனேயே இருப்பார்கள் என்று அரச தரப்பில் சிலர் உறுதியாகச் சொல்கிறார்கள்.

எப்படியிருந்தாலும் ரவூப் ஹகீமின் பேச்சை கேட்பவர்கள் யாரும் அவரை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சர் என்று சொன்னால் நம்பமாட்டார்கள். கடந்த வாரம் கூட அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தார்.

"இந்த நாட்டு முஸ்லிம்களின் நலன் காக்கவென்று ஆரம்பித்து பல சவால்களுக்கு மத்தியில் வளர்க்கப்பட்ட கட்சியை காப்பாற்ற நோன்பு பிடித்து துஆ கேளுங்கள்" என்று கோரிக்கை விட வேண்டிய அளவு நிலைமை மோசமாகியுள்ளது நெருக்கடி ஒன்றின் போது நோன்பு நோற்பது நல்ல விடயமாக இருந்தாலும் கட்சிக்கு இந்த நிலையா என்பது கவலைக்குரியது.

நோயாளிக்கு முடியுமான வரை சிகிச்சை அளித்து கடைசிக் கட்டத்தில் இனிமேல் அல்லாஹ்விடம் கேளுங்கள் என்று சொல்லும் 'சகாராத்' கட்டத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் வந்துவிட்டதா என்று நினைக்கத் தோன்றுகிறது.

ரவூப் ஹகீம் "பிரார்த்தனை புரியுங்கள்" என்று வேண்டுகோள் விடுக்க கிழக்கின் பல பகுதிகளில் கடந்த திங்களன்று ஹர்த்தால் அனுஷ்டித்துப் போட்டார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் அதியுயர் பீடத்துக்கு எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட பேரியலுக்கு நெருக்கமான சிலரை நியமிக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. ஹிஸ்புல்லாஹ் மிகுந்த உற்சாகத்துடன் வேலை செய்கிறார். பேரியல் தரப்பில் தன்னை விட்டால் ஆளில்லை என்பது ஹிஸ்புல்லாஹ்வுக்குத் தெரியும். அதனால் ஏதேனும் ஒரு வழியில் ஹகீமை மடக்கி பேரியல் தரப்பு சார்பாக கட்சிக்குள் ஒரு முக்கிய பொறுப்பை பெறுவது ஹிஸ்புல்லாஹ்வின் குறிக்கோள்.

இதற்காக இவர் முடியுமான அளவு நெருக்குதல்களை பிரயோகித்து வருகிறார். தனது ஆதரவாளர்களை கொழும்புக்கு அழைத்து வந்து தனக்கும் "பெருத்தலைவி பேரியலுக்கும்" கட்சியில் முக்கிய இடம் தரவேண்டும் என்று 'தாருஸ்ஸலாம்' முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திக் காட்டினார்.

இப்படியாக முஸ்லிம் காங்கிரஸுக்குள் முரண்பாடு, கட்சி இரண்டாக பிளவு படப் போதுமான அளவு வலுப்பெற்றுள்ளது.

ஆனால் என்னதானிருந்தாலும் இனிமேல் ஹிஸ்புல்லாவுக்கு கட்சிக்குள் இடமளிப்பதில்லை என்பதில் ரவூப்ஹகீம் உறுதியாக இருப்பதாகவே தெரிகிறது.

அவரை துரோகி என்று வாய்கூசாமல் சாடும் ஹகீம் இனிமேல் எந்தவொரு கட்டத்திலும் ஹிஸ்புல்லாவுடன் சேர்ந்து செயற்படக்கூடிய வகையில் வார்த்தைகளை பிரயோகிப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் அரசியல் வாதிகளுக்கு இதுவெல்லாம் பெரிய பிரச்சினை இல்லை. இதற்கு முன்னர் தாங்கள் சொன்னவற்றுக்காக கவலைப்படப்போவதில்லை.



ஹிஸ்புல்லாஹ்வும் தனக்கு முக்கிய பதவியொன்றை பெறவேண்டும் என்பதில் மிகவும் ஆர்வமாக இருக்கின்றார்.

ரவூப்ஹகீமை ஓரம்கட்ட வேண்டும் என்று நினைக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்கள் சிலரது ஆசீர்வாதம் ஹிஸ்புல்லாஹ்வுக்கு இருக்கிறது. ஒரு சபையின் தலைவராக இருக்கும் ஹிஸ்புல்லாவின் பெயர் பத்திரிகைகளில் வரும் அளவுக்கு சில அமைச்சர்மார்களின் பெயர்கள் கூட வருவதில்லை.

தேர்தலில் தோல்வியடைந்த ஹிஸ்புல்லா மக்கள் பலத்தை விடவும் அரச உயர்மட்டத்தின் அரவணைப்படனேயே இத்தனை தைரியமாக காய் நகர்த்துகிறார் என்பது இரகசியமானதல்ல.

ரவூப்ஹகீமைப் பொறுத்தவரையில் தனது தலைமைப் பொறுப்பை பேரியலுடன் பங்கிட்டுக்கொள்ள அவர் தயாராக இல்லை என்றே தெரிகிறது. பேரியல் அஷ்ரபும் முஸ்லிம் காங்கிரஸில் வெறுமனே ஒரு பெயரளவிலான பதவியை ஏற்க மறுத்து வருகிறார்.

இந்தக் கயிறிழுப்பின் பிரதிபலன் இப்போதைக்கு பெரிதாக தெரியாவிட்டாலும் கூட ஐ.தே.க. கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் இறுதி விளைவாக தப்பித்தவறி விரைவில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் ஒன்று வருமானால் அதற்கு முகங்கொடுக்கும் போதுதான் முஸ்லிம் காங்கிரஸ் உன்மையான பிரச்சினையை எதிர்கொள்ளும்.

இப்போது இருப்பது கிடைத்திருக்கும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களுக்கு யார் தலைமை தாங்குவது என்பதும் தமது சகாக்களுக்கு 'சந்தோசங்களை' எப்படி பிரித்துக் கொடுப்பது என்பதிலும்தான்.

இலங்கையின் தேசிய அரசியல் ஒரு சோதனையான கட்டத்தை கடந்து கொண்டிருக்கையில்தான் இந்த உட்கட்சி முரண்பாடும் தீவிரமாகியுள்ளது.

ஒருவேளை ஐ.தே.க. அரசாங்கத்துக்கு எதிராக கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது அமைச்சர் ஹகீமின் குழுவும் பேரியலின் குழுவும் வெவ்வேறான விதத்தில் வாக்களிக்க முடிவு செய்தால், கட்சி மேலும் மோசமான நிலைக்கு உள்ளாகும்.

ரவூப்ஹகீமைப் பொறுத்தவரையில் இப்போத பேரியலை நம்பமுடியாது, அரசாங்கத்தையும் நம்பமுடியாது ஐ.தே.க.வையும் முழுமையாக நம்பும் நிலையில் அவர் இல்லை. இந்தத் தரப்புக்களும் ஹகீம் விடயத்தில் அப்படித்தான்!

அண்டை மண்டலத்தில்....

சாவித்ரி கண்ணன்

ஜெயலலிதா அரியணை ஏறியதும் தொடுத்த பிரம்மாஸ்திரங்கள்...

அ.இ.அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததில் இருந்து பல அதிரடியான காரியங்களைச் செய்த வண்ணம் உள்ளது. "எந்த நேரத்தில் எந்தவிதமான குற்றச்சாட்டு அம்புகள் தன் மீது பாயுமோ?" என தி.மு.க. எதிர்நோக்கிய வண்ணம் உள்ளது.

முதன்முதலாக ஜெயலலிதா தொடுத்த பிரம்மாஸ்திரம் கைது படலம். சட்டமன்றத்தின் முன்னாள் துணை சபாநாயகர் பரிதி இளம்வழுதி முதலில் கைது செய்யப்பட்டார். அவருக்கு ஜாமீன் கூட வழங்கக்கூடாது என அரசு வழக்கறிஞர் வாதிட்டார். அடுத்ததாக ஆற்காடு வீராச்சாமியின் தம்பி தேவராஜன் கைது செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து த.மா.கா. ஜனநாயகப் பேரவையின் பொதுச் செயலாளரும், புரசைவாக்கம் சட்டமன்ற உறுப்பினருமான ரங்கநாதனும் கைதானார். தி.மு.க.வின் முன்னாள் எம்.பி.யான பரசுராமன் கைதானார். இவரது வழக்கிலேயே சென்னை மாநகர மேயர் மு.க.ஸ்டாலின் பெயரும் இருந்தது. அவரைக் கைது செய்யும் திட்டம் பின்பு கைவிடப்பட்டது.

ஜெயலலிதாவின் அடுத்த பிரம்மாஸ்திரம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளின் சரமாரியான இடமாற்றம். சென்ற ஆட்சிக்கு விசுவாசமானவர்கள் என்று கருதப்பட்ட அளவுகோலிலும், தங்களுக்கு விசுவாசமானவர்களை உகந்த இடத்தில் அமர்த்த வேண்டும் என்ற அளவுகோலின் அடிப்படையிலும் சுமார் 60 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், 80 ஐ.பி.எஸ். அதிகாரிகளும் சகட்டுமேனிக்கு பந்தாடப்பட்டார்கள்.

ஜெயலலிதாவின் மூன்றாவது பிரம்மாஸ்திரம் சென்ற ஆட்சியின் பல்வேறு துறைகளில் நடந்த தவறுகளை தோண்டி எடுத்து வெளிக்கொணர்ந்து அதை சட்டமன்றத்தில் போட்டு உடைத்து முன்னாள் ஆட்சியாளர்களைத் தடுமாறச் செய்வது.

இந்த வகையில் "கிருஷ்ணா நீர் சென்னைக்கு இன்னும் கொண்டு வரப்படவில்லை. இதுவரை சென்ற அரசாங்கம் தந்ததெல்லாம் கண்டலேறு கால்வாய்த் தண்ணீர்தான்" என்றார். அடுத்ததாக சென்ற ஆட்சியில் சுகாதாரத்துறை மிகவும் மோசமான நிலையில் இருந்ததாகவும், அதனால் மருத்துவமனைகளை போதுமான அளவுக்கு முக்கிய மருந்து மாத்திரைகள் இல்லாமல் பராமரித்தனர் என்றும் அறிவித்தார். ஆற்காடு வீராச்சாமி அதிர்ந்து போனாலும் ஏதேதோ பதிலைச் சொல்லி சமாளித்தார்.

தற்போது கடைசியாக ஜெயலலிதாவால் ஏவப்பட்ட பிரம்மாஸ்திரம் சென்ற ஆட்சியில் ரேஷன் கடைகளில் மக்களுக்கு வழங்குவதற்கு என்று கொள்முதல் செய்யப்பட்டதில் ரூ.65 கோடி மதிப்புள்ள அரிசி புழுத்துப்போய் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக அறிவித்ததாகும். இதற்கு ஆதாரமாக அவர் கோட்டைக்கே அந்த விதமான அரிசியை எடுத்து வந்து அவற்றைத் தனது மேசையில் பரப்பி பத்திரிகையாளர்களுக்கு காண்பித்தார். புழுத்துப்போய் படுமோசமான நிலையில் இருந்த அந்த அரிசியில் புழு நெளிந்து கொண்டிருந்தது.

"இந்த அரிசியை யார் கொள்முதல் செய்தது? இந்த ஊழலுக்கு உடந்தையாக இருந்தது யார்?" என்று கேட்ட ஜெயலலிதா இதை கண்டறிய ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத்துறை புலனாய்வுப் பிரிவு விசாரணைக்கும் உத்தரவிட்டார். இந்தக் குற்றச்சாட்டுக்கு பதிலளித்து சென்ற ஆட்சியின் உணவுத்துறை அமைச்சர் கே.என். நேரு "ரூ.65 கோடிக்கு புழுத்துப் போன அரிசி வாங்கப்பட்டதாக முதல்வர் ஜெயலலிதா கூறியிருப்பதில் உண்மை இல்லை. இது குறித்து எத்தகைய விசாரணையையும் சந்திக்கத் தயார்" என்று சொன்னார். என்ற போதிலும் மேலும் அவர், "நெல்லைக் கொள்முதல் செய்தல், அதனை விநியோகித்தல் உள்ளிட்ட பணிகள் நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் பொறுப்பே தவிர அதற்கும் அரசுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது" என்று விளக்கம் தந்ததில் அவரது தடுமாற்றம் வெளிப்பட்டது. இது புழுத்துப்போன அரிசி இல்லை என்று திட்டவட்டமாக மறுக்கமுடியாமல், "இருக்கலாம், ஆனால் அதற்கு அரசாங்கத்தைக் குறைசொல்ல முடியாது" என்று சொல்வதாக அமைந்தது.

இதையடுத்து தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்குச் சொந்தமாக உள்ள 312 உணவுக் கிடங்குகள் சிலவற்றில் ஜூன் 16ம் திகதி ஊழல் கண்காணிப்புத்துறை புலனாய்வுப் பிரிவு பொலிசார் அதிரடி ரெய்டு நடத்தி அங்குள்ள அரிசியின் மாதிரிகளை கைவசம் எடுத்துக் கொண்டனர். நடவடிக்கைகளின் வேகத்தைப் பார்க்கும்போது இந்த விவகாரத்தில் முன்னாள் உணவு அமைச்சர் கே.என்.நேரு கைது செய்யப்பட்டுவிடக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்த விவகாரத்தை சற்றே ஆழமாகச் சென்று நாம் பார்க்கும்போது கடந்த 25 வருடங்களாகவே ரேஷனில் நல்ல தரமான அரிசி என்பது ரொம்பவும் அபூர்வமாகத்தான் கிடைத்து வந்துள்ளது என்ற உண்மை தெரியவருகிறது. ரேஷன் கடைகளில் மோசமான அரிசி இருப்பதற்கு காரணம் என்ன? என்று தீவிரமாக விசாரித்ததில் நெல் கொள்முதல் செய்யப்படுவது தொடங்கி, அது ரைஸ்மில்லுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அரைக்கப்படுவது, இதற்காக பெருமளவில் தனியார் மில்களைப் பயன்படுத்துவது, குடோவுனில் பாதுகாக்கப்படுவது வரை ஒவ்வொரு நிலையிலும், ஊழலும், முறைகேடுகளும், பொறுப்பற்ற செயல்பாடுகளும் நிலவுவது தெரியவந்தது. இதன்மூலம் நுகர்பொருள் வாணிபகழக அதிகாரவட்டம் மிகப்பெரிய அளவில் கொள்ளையடித்து வருகிறது. நல்ல தரமான அரிசியை அதிகாரிகளும், ஊழியர்களும் திருட்டுத்தனமாக வெளி மார்க்கெட்டில் விற்பதும், அதற்கு இணையாக மோசமான அரிசியை வாங்கி ரேஷன் கடைகளில் மக்கள் வாங்க முடியாத நிலைமையில் வைத்துவிடுவதும் தொடர்ந்து நடைபெற்றுவரும் வாடிக்கையாக உள்ளது.



வி.ஜெயராமன், இவர்களுடன் உணவுத் துறை பொறுப்புவகித்த அமைச்சர் ஆர்.விசுவநாதனின் பதவியும் பறிக்கப்பட்டது. இதற்கான காரணங்கள் பலரும் பல்வேறுவிதமான ஊகங்களைப் பரப்பி வந்தபோதிலும், உண்மையான காரணம் என்னவென்று ஜெயலலிதாவே சொன்னால் ஒழிய எதையும் உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால், "உணவுத் துறை அமைச்சராயிருந்த ஆர்.விசுவநாதன் மாற்றப்பட்டதற்கு சென்ற ஆட்சியின் முறைகேடுகள் பற்றி விசாரிக்க ஜெயலலிதா காட்டிய வேகத்திற்கு அவரால் ஈடுகொடுக்க முடியவில்லை என்பது தான்" என்று சொல்லப்படுவதில் ஓரளவு உண்மை இல்லாமலில்லை.

இவை எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடும் வகையில் தற்போது தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மீதே படுபயங்கரமான குற்றச்சாட்டு ஒன்று பதிவாகியுள்ளது. கோவை குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து, 300 முஸ்லீம்கள் சிறையில் கொடுமைப் படுத்தப்பட்டதாகவும், அதற்கு அன்றைய முதல்வர் கருணாநிதி, அன்றைய உள்துறை செயலாளர் சாந்தஷீலா நாயர், முன்னாள் டி.ஜி.பி. சர்மா, முன்னாள் சிறைத்துறை ஐ.ஜி.யான கே.வி.எஸ். மூர்த்தி உள்ளிட்ட 6 பேரும் திட்டம் தீட்டி செயல்பட்டதாகவும், ஒரு அ.தி.மு.க.காரர் கூறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அபாயகரமான குற்றச்சாட்டை வைத்திருக்கும் ப்ரீதி பாஸ்கர் என்ற நபர் ஒரு சமூக விரோத செயலில் ஈடுபட்டதாக அப்போது மூன்றுமாத காலம் சிறைச்சாலையில் இருந்தவர். அந்த நேரத்தில் முஸ்லீம்கள் தாக்கப்படுவதை தான் நேரடியாகப் பார்த்ததாகவும், அதற்கு மேற்கண்ட முக்கிய பொறுப்புகளில் இருந்த ஆறு பேரும் தீட்டிய சதித்திட்டமே காரணம் என்றும் அவர் கூறுகிறார். இந்த வழக்குக்கு ஆதரவாக சில முஸ்லீம் அமைப்புகளிடமும் ஆரும் கட்சி சார்பில் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது. ஆனால் எந்த ஒரு முஸ்லிம் அமைப்பும் இதற்கு உடன்பட்டதாகத் தெரியவில்லை.

பொதுவான மத நல்லிணக்கத்தையும், சகஜ வாழ்க்கையையும் கேள்விக்குறியாகச் செய்யும் இம்மாதிரியான குற்றச்சாட்டுக்களை, அதுவும் மிக உயர்ந்த பதவியில் உள்ளவர்கள் மீது மிகவும் சாதாரணமாக வைத்திருப்பது மிகவும் கவலையளிக்கக் கூடிய ஒரு அம்சமாக நடுநிலையாளர்களால் பார்க்கப்படுகிறது. திட்டவட்டமான ஆதாரங்கள் இன்றி, பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் முஸ்லீம்களே கூட இதுவரை எந்தக் குற்றச்சாட்டும் சொல்லாதிருக்கும் போது, இந்தமாதிரி பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதானது ஆட்சியாளர்களின் உள்நோக்கத்தை சந்தேகப்பட வைக்கிறது.

"அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்து ஏறக்குறைய ஒரு மாத காலகட்டம் ஆன நிலையில் மக்கள் பிரச்சனைகளில் ஆர்வம் காட்டாமலும், தொலைநோக்குப் பார்வை இல்லாமலும் தனது எதிரிகளை பழிவாங்குவதற்கு ஒரு கருவியாக ஆட்சி அதிகாரத்தை ஜெயலலிதா பயன்படுத்தி வருகிறார்" என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட ஆரம்பித்துள்ளது.

புறப்பட்டுவிட்ட ஆயுதக் கப்பல்

~மதி~

தீவிரமாக யுத்தம் நடைபெறும் காலங்களை விடவும் சமாதானம் குறித்து கதைகள் பேசப்படும் காலங்களில்தான் ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பான கதைகளும் அதிக அளவில் அடிபடத் தொடங்கின.

புலிகள் கப்பல்களில் நவீன ஆயுதங்களை கொண்டு வந்து இறக்கியுள்ளதாக செய்திகள் வந்த மறுகணமே அரசாங்கமும் பெருந்தொகை ஆயுதங்களை கொழும்புத்துறை முகத்தில் கொண்டு வந்து இறக்கியதாக கூறப்பட்டது.

இப்போது மீண்டும் இரண்டாவது சுற்று ஆயுதக் கொள்வனவு தொடர்பான செய்திகள் வெளியாக ஆரம்பித்துள்ளன.

புலிகளுக்கு மேற்கு நாடொன்றில் இருந்து ஆயுதக் கப்பல் ஒன்று புறப்பட்டுவிட்டதாக புலனாய்வுப் பிரிவுகள் சந்தேகிக்கின்றன. இதனால் எப்படியாவது அதனை மடக்கியே ஆகவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு வடபகுதிக் கடலில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரைகாலமும் காலித்துறை முகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எஸ்.எல்.என்.எஸ் சயுர என்ற கண்காணிப்புக் கப்பல் தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கடற்பரப்பின் முகவாயில் வரை சென்றுவர ஆரம்பித்துள்ளது.

விடுதலைப்புலிகள் சர்வதேசக் கடற்பரப்பினூடாக ஆயுதங்களை நாட்டுக்குள் கடத்துவதைத் தடுக்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தி வரும் அரசு, இந்த நடவடிக்கைக்காக கடற்படையின் பலத்தை மேலும் அதிகரிக்க வேண்டியுள்ளது.

அண்மைக்காலமாக புலிகளின் ஆயுதக் கப்பல்களின் வருகை அதிகரித்ததையடுத்து அந்தக் கப்பல்களின் வருகையைத் தடுக்கும் நோக்கில் தற்போது, முல்லைத்தீவு முதல் கொக்கிளாய் வரையிலான கடற்பரப்பில் 'ஒப்பரேஷன் வருண கிரண'வைக் கடற்படையினர் மேற்கொண்டனர்.

புலிகள் ஆயுதங்களைத் தொடர்ந்தும் கடத்துவதைத் தடுப்பதற்காக மேற்படி கடற்பரப்பில் கடற்படைக் கப்பல்களை நிரந்தரமாக நிறுத்தி வைக்கவும் இதற்கு உதவியாக விமானப்படை விமானங்கள் தொடர்ச்சியாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால் இவை எல்லாவற்றையும் மீறி புலிகள் தாராளமாக ஆயுதங்களை கொண்டு வந்து சேர்க்கிறார்கள் என்ற விடயம் பாதுகாப்பு உயர் மட்டத்தில் பலத்த குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது மீண்டும் ஒரு ஆயுதக் கப்பல் வருவதாக கதைகள் பரவ ஆரம்பித்ததும் அதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கடற்படைக்கு உத்தரவிட்டுள்ளது. இதனையடுத்தே 'சயுர' கப்பல் வடபகுதிக்கு நகர்த்தப்பட்டதாக தெரிகிறது.

இவற்றைவிட சமாதானப் பேச்சுக்கள் குழம்பிவிட்ட நிலையில் இன்னமும் புலிகள் பாரியதாக்குதல் எதையும் மேற்கொள்ளாமல் இருப்பது குறித்தும் பல்வேறு ஊகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

மேலும் ஒரு தொகை நவீன ஆயுதங்கள் வந்துசேரும் வரை புலிகள் காத்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களில் பரவலான சந்தேகம் நிலவுகிறது.

அண்மையில் புலிகளுக்கு வந்த ஆயுதக்கப்பலில் இருந்த ஆயுதங்களை கடலில் வைத்து இறக்கி சிறிய படகுகளில் கரைக்கு கொண்டு வரும் வேளையில் அவற்றில் சில படகுகள் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகின. இதனால் ஒருசில நவீன ஆயுதங்கள் கடலில் முழ்கி விட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அவற்றை மீண்டும் பெற புலிகள் முயற்சிக்கக் கூடும் என்ற சந்தேகமும் பாதுகாப்பு வட்டாரங்களில் நிலவுகிறது.

அத்துடன் புலிகளின் ஆயுதக் கொள்வனவுப் பிரிவின் முக்கியஸ்தர் ஒருவர் இலங்கைக்கு அண்மையில் உள்ள நாடொன்றில் வந்து தங்கியிருப்பதாகவும் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களை முல்லைத்தீவுக்கு கொண்டு வந்து சேர்ப்பதற்கான ஏற்பாடுகளில் அவர் ஈடுபட்டிருப்பதாகவும் நம்பப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் சர்வதேச ஆயுதக் கொள்வனவுப் பிரிவின் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் (கே.பி) கடந்த வாரம் ஆசியத் தலைநகரொன்றில் கைது செய்யப்படும் சூழ்நிலையிலிருந்து எதிர்பாராத விதமாகத் தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போலிப் பாஸ்போர்ட்டுடனும், போலிப் பெயரிலும் இவர் மேற்படி ஆசியத் தலைநகரில் நடமாடியபோது அதனை அறிந்த வெளிநாடொன்றின் புலனாய்வுப் பிரிவு இது பற்றி இலங்கைப் படையினருக்குத் தகவல் கொடுத்துள்ளது.

அந்த ஆசியத் தலைநகரில் தனது அலுவல்களை முடித்துக் கொண்டு குமரன் பத்மநாதன் ஐரோப்பிய நாடொன்றுக்குச் செல்வதற்கு விமானப்பதிவை மேற்கொண்டிருந்ததை அறிந்த அந்நாட்டுப் பொலிஸார் இவரைக் கைது செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

விமான நிலையத்தில் வைத்து இவரைக் கைது செய்வதற்கான இரகசியத் திட்டம் தயாரிக்கப்பட்டுப் பொலிஸாரும் தயாராயிருந்தனர். எனினும் கடைசி நேரம் வரை குமரன் பத்மநாதன் அங்கு வரவில்லை.

இந்த இரகசியத் திட்டம் பற்றி அவர் அறிந்திருந்தாரா அல்லது அது பற்றி இவருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதா அல்லது மேற்படி விமானம் மூலம் ஐரோப்பிய நாட்டுக்குச் செல்வதாக போக்குக் காட்டி விட்டு வேறேதாவது வழியாக அங்கிருந்து வெளியேறினாரா என்பது தொடர்பாக எதுவும் தெரியவரவில்லை.

சிங்கப்பூரில் இவர் நடமாடியதாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு வாரத்தின் பின்பே தகவல் கிடைத்த நிலையில் ஆசிய நாட்டில் இவரது பிரசன்னம் குறித்து எச்சரிக்கை வெளியானது. எனினும், அங்கு இவரது நடமாட்டங்கள் குறித்து எதுவித தகவல்களையும் பெறமுடியவில்லை.

மேற்படி ஆசிய நாட்டுத் தலைநகருக்கு வந்த குமரன் பத்மநாதன் அங்கிருந்து தரை வழியாக மற்றொரு நாட்டுக்கு ஆயுதக் கொள்வனவிற்காகச் சென்றதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்களிடம் ஆயுதக் கொள்வனவுக்குச் சென்றாரா அல்லது அங்குள்ள வேறு ஆயுதக் குழுக்களிடம் ஆயுதக் கொள்வனவுக்குச் சென்றாரா என்பது குறித்தும் சந்தேகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

எனினும், மற்றொரு பாரிய ஆயுதக் கொள்வனவுக்காகவே இவர் வருகை தந்தார் என்பது உறுதிப்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் தலைவருக்கு மிகவும் வேண்டப்பட்ட இவரே ஆரம்பம் முதல் சர்வதேச ரீதியாக ஆயுதக் கொள்வனவுகளில் ஈடுபட்டு வந்தார். இவரைத் தேடிப் பிடிக்கும் முயற்சியில் பல்வேறு நாடுகளும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கைக் கடற்படைக்கு மேலும் நான்கு சால்டாக் ரக (Shaldag Class) அதிவேக பீரங்கிப் படகுகளை இஸ்ரேலிடமிருந்து வாங்கவுள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட இந்த நான்கு பீரங்கிப் படகுகளும் அடுத்த ஓரிரு வாரங்களில் கொழும்பு வந்து சேரவுள்ளதாகக் கடற் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்காக இலங்கைக் கடற்படையின் உயர்மட்டக் குழுவொன்று இஸ்ரேல் சென்றுள்ளது.

இந்தக் குழுவில் கொமடோர் ஒருவரும் இரு கட்டளையிடும் அதிகாரிகளும் அடங்குவர். இவர்கள் அடுத்த வாரம் இஸ்ரேலிலிருந்து நாடு திரும்பவுள்ளனர்.

'சால்டாக்' ரக பீரங்கிப்படகுகளைக் கடற்படையினர் முதன் முதலாக 1967இல் இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்தனர். இஸ்ரேலின் ஹைபாகப்பல் கட்டும் தளத்தில் கட்டப்படும் இந்த அதிவேகத் தாக்குதல் படகுகளில் பல்வேறு வகையான ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்குக் கடற்பரப்பில் தற்போது நடவடிக்கையில் ஈடுபடும் இந்தப் பீரங்கிப் படகுகளுடன் தற்போது கொள்வனவு செய்யப்படவுள்ள நான்கு படகுகளும் கடற்படையின் பலத்தை மேலும் அதிகரிக்கும் என கடற்படை அதிகாரிகள் கூறுகின்றனர்.

அலசுவது - இராஜதந்திரி

தீவிரம்டையும் அரசியல் நெருக்கடி சந்திரிகாவின் முத்தரப்பு வியூகம்

இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரம் மிகுந்த குழப்பத்துக்குள்ளாகியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

ஒரு தீர்வை நோக்கி சுமுகமாகச் செல்லவேண்டிய நோர்வேயின் அனுசரணையுடனான இனப்பிரச்சனை சமரச முயற்சி தடங்கலுக்குள்ளாகியுள்ளது.

நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியை வடக்கு-கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் வெகு ஆவலுடனேயே அவதானித்து வந்தனர். தமது நீண்ட காலப் பிரச்சனைக்கு விரைவில் ஒரு தீர்வு நோர்வேயின் மத்தியஸ்தம் மூலம் கிடைக்க வேண்டுமென அவர்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் வடக்கு-கிழக்கு மக்கள் மீளவும் 'இலவு காத்த கிளியின்' நிலைக்கே உள்ளாகியுள்ளனர். அத்துடன் மீளவும் வடக்கு-கிழக்கில் யுத்தம் ஒரு தொடர் கதையாகி விடுமோவென்ற ஏக்கமும் அம்மக்களிடம் தோன்றியுள்ளது.

இலங்கை இனப்பிரச்சனை குறித்த நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகள் ஆரம்பித்தபோது பேரினவாத சக்திகள் கடுமையாகவே நோர்வேயைச் சாட ஆரம்பித்தன.

அப்போது அந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது சமரச முயற்சிகளை நோர்வே மேற்கொள்ள முன்வந்திருந்தது. இலங்கை அரச தரப்பும் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியை ஏற்றுக் கொண்டிருந்தது.

ஆனால் தற்போது தோன்றியுள்ள நிலைமை, பேரினவாத சக்திகளின் கரங்களையே பலப்படுத்தி சமரச முயற்சிகளை மீளவும் கேள்விக் குறியாக மாற்றிவிட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த பதினெட்டு வருடங்களாக இடம்பெற்று வருகின்ற வடக்கு-கிழக்கு யுத்தம் ஒரு பூதாகர நிலையை எட்டிவிட்டுள்ளது. இந்த அபாயகரமான நிலை மாற்றங்கண்டு, முற்றுமுழுதான ஒரு சமாதான சூழல் ஏற்பட வேண்டுமென்றே யுத்தத்தின் கொடுமையை அனுபவித்த மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் தவிர்க்கப்படவேண்டிய யுத்தத்தை, மீளவும் வலிந்து வரவழைக்கும் விதத்திலேயே அனைத்து அரசியல் சூழ்நிலைகளும் உருமாற்றம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

இனப்பிரச்சனை குறித்த சமரச நடவடிக்கைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்ட நிலையில் சந்திரிகா அரசாங்கமும் நெருக்கடிகளை எதிர்நோக்கியதாக இருக்கின்றது.

ஒரு புறம் அரசாங்கம் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை, மறுபுறத்தே பிரதம நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணை போன்ற விடயங்கள் சந்திரிகா அரசுக்கு பிரச்சனைகளை உண்டு பண்ணியவையாக இருக்கின்றன.

இவற்றுக்கிடையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் உட்கட்சிப் பூசல்களுக்குள்ளான நிலையில் ஒரு குளறுபடியான தன்மை ஏற்பட்டிருப்பதையே காண முடிகின்றது.

கடந்த ஆண்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும், அமைச்சருமான எ.எச்.எம்.அஷ்ரப் அகால மரணத்தைத் தழுவியதையடுத்து அக்கட்சிக்குள் ஏற்பட ஆரம்பித்த உட்கட்சிப்பூசல் தற்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக திருமதி.பேரியல் அஷ்ரப், ரவூப் ஹக்கீம் ஆகியோர் சந்திரிகா அரசில் அமைச்சுப் பொறுப்புக்களை வகிப்போராக இருக்கின்றனர்.

தற்போது இந்த இரு முக்கிய புள்ளிகளுக்குமிடையே தோன்றியுள்ள முறுகல் நிலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை மட்டுமல்ல. ஆளுங்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியையும் குழப்பத்துக்குள்ளாக்கி விடுமென்றே எதிர்பார்க்க முடிகின்றது.

தாயகக் கோட்பாட்டை மையமாக வைத்து வடக்கு-கிழக்குப் பிரச்சனை ஆரம்பித்த கால கட்டத்தில் மறைந்த அமைச்சர் அஷ்ரப் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவம், பாதுகாப்பு என்பவற்றைப் பேண வேண்டிய தேவைப்பாடு இருப்பதாகத் தெரிவித்தே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆரம்பித்திருந்தார்.

இருப்பினும் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள், மற்றும் இன்றைய பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள் ஆகியோர் வடக்கு, கிழக்கில் தமது அரசியல் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக்கூடிய ஒரு சக்தியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை கருதி வந்ததையே அவதானிக்க முடிந்தது.

மறைந்த அமைச்சர் அஷ்ரப் கிழக்கிலங்கையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கிய போதிலும் நாளடைவில் நாடுதழுவிய ரீதியில் அக்கட்சியை முஸ்லிம் மக்கள் மத்தியில் பலப்படுத்துவதில் ஆர்வங்காட்டியிருந்தார்.

மறைந்த அமைச்சர் அஷ்ரப்பிடம் காணப்பட்ட அரசியல் ஆளுமை, அவர் எதிர்பார்த்தது போலவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை நாடளாவிய ரீதியில் முஸ்லிம் மக்களிடையே பிரபலப்படுத்தவும் ஆரம்பித்திருந்தது.

இதன் காரணமாக ஏற்கனவே தேசியக் கட்சிகளான ஐ.தே.க, பொ.ஜ.ஐக்கிய முன்னணி ஆகியவற்றில் அங்கம் பெற்றிருந்த முஸ்லிம் அரசியல் புள்ளிகள் மறைந்த அமைச்சர் அஷ்ரப் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளவும் ஆரம்பித்திருந்தனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட அமைச்சர் பௌஸி ஸ்ரீ.ல.மு.கா தலைவரைக் கடுமையாகவே சாடிவந்தார். பௌஸி-அஷ்ரப் ஆகியோருக்கிடையிலான முறுகல் நிலை காரசாரமாகவே இருந்து வந்தது.

இந்நிலையில் அமைச்சர் அஷ்ரப்புக்கு நேர்ந்த திடீர் அகாலமரணம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒட்டுமொத்தமான பலத்தையும் கேள்விக்குறியாக்கி விட்டுள்ளதுடன், தற்போது அக்கட்சியை பாரிய உட்பூசலுக்குமுள்ளாக்கிவிட்டுள்ளது.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரத்தை எடுத்து நோக்கும் பட்சத்தில் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்கள் சார்ந்த இனப்பிரச்சனை ஒரு யுத்தமாக வெடித்துள்ளதைக் காணமுடியும்.

இப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட முடியாத சூழ்நிலைகள் தோன்றியுள்ள அதே சமயம், முஸ்லிம் மக்கள்மீதான அடாவடித்தனங்களும் ஆங்காங்கே தலைகாட்ட ஆரம்பித்துள்ளன. அண்மையில் மாவனல்லையில் நிகழ்ந்த சம்பவங்கள், இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

இந்நிலையில் முஸ்லிம்களின் பாதுகாப்பு, தனித்துவம் என்பவற்றின் பொருட்டே ஆரம்பிக்கப்பட்டதாக மறைந்த அமைச்சர் அஷ்ரப்பினால் தெரிவிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, உட்கட்சிப் பூசலுக்குள்ளாகியிருப்பது முஸ்லிம் மக்களிடையே கூட சலனத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது.

இது இவ்வாறிருக்க கடந்த வாரங்களில் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது குறித்த பேச்சுக்கள் கூட பலமாக அடிபட்டிருந்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முக்கிய அமைச்சரான திரு.எஸ்.பி.திசாநாயக்கா இது பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார். ஆனால் ஜனாதிபதி சந்திரிகா பின்னர் அத்தகைய எண்ணம் தமக்கெதுவுமில்லையெனத் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரம் குளறுபடியான ஒரு கட்டத்தை எட்டியுள்ள நிலையில் ஆட்சியாளர்கள் அரசாங்கத்தைப் பலப்படுத்த தம்மாலானவற்றை மேற்கொள்ள எத்தனிப்பதன் பிரதிபலிப்பாகவே தேசிய அரசாங்கம் என்ற பேச்சுக்கூட வெளிப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இத்தகைய தேசிய அரசாங்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிகூட நிராகரித்திருக்கின்றது.

அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்னெடுப்பதில் தீவிரமாக இருந்துவரும் ஐ.தே.க தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு உடன்படுமென எதிர்பார்ப்பது வேடிக்கையானதாகும்.

எனவே வடக்கு-கிழக்குப் பிரச்சனை ஒருபுறமும், ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாகக் கொடுத்துவரும் அழுத்தம் மற்றொரு புறம், பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் எழுந்துள்ள நெருக்கடி நிலை ஆகியன ஆளுங்கட்சியை மிகவும் இக்கட்டான நிலைக்கே தள்ளிவிட்டுள்ளதைக் காண முடிகின்றது.

இத்தருணத்திலேயே கெடுபிடிமிக்க பிரச்சனையாக இருக்கும் வடக்கு-கிழக்கு விவகாரத்தை அசட்டை செய்து வந்ததன் பிரதிபலனை அரச தரப்பினர் உணர வேண்டியோராகவும் இருக்கின்றனர்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைத் தீர்வில் கூடுதல் அக்கறை செலுத்தி அதன் பொருட்டு அரசாங்கம் தனது பங்களிப்பை உரிய வகையில் வழங்கியிருக்குமேயானால், இன்று இலங்கையில் நிலவும் நெருக்கடிகள் பலவற்றையும் சுமுகமாகத் தீர்த்து வைத்திருக்க முடியும்.

ஆனால் உள்நாட்டில் உரிய வகையில் வடக்கு-கிழக்குப் பிரச்சனையை அணுகுவதற்கு முன்வராத ஆட்சியாளர்கள், வெளிநாடொன்று அப்பழுக்கற்ற விதத்தில் சமரச நடவடிக்கைகளை மேற்கொள்வதில் வெளிப்படுத்துகின்ற ஆர்வத்தையும் நிராகரித்தோராகவே இருந்து வருகின்றனர்.

தென்னிலங்கையில் ஆட்சியாளர்களுக்கு பல்வேறுபட்ட பிரச்சனைகள் அவ்வப்போது தோன்றலாம். ஆனால் முழுநாட்டினதும், நிரந்தரப் பூதாகரப் பிரச்சனையாக இருந்து வருவது வடக்கு-கிழக்கு விவகாரமே என்பதை நன்குணர்ந்திருந்தும், சிலர் நெருப்போடு விளையாடுவது போலவே நடந்து வருகின்றனர்.

இனப் பிரச்சனை குறித்த சமரச முயற்சிகளிலிருந்து திரு.எரிக் சொல்ஹெய்ம் ஓரங்கட்டப்பட்ட நிலையில் எத்தகைய கோணத்தில் புதிய அணுகு முறைகள் இருக்குமென்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அணுகமுடியாத ஒரு தன்மையே தற்போது காணப்படுகிறது.

இன்றைய நாட்டு நிலபரத்தை நோக்குகையில் குழப்பமான சூழ்நிலையைச் சமாளிக்க தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதா? அல்லது தென்னிலங்கையில் தோன்றி வரும் அரசியல் நெருக்கடிகளைக் கையாளுவதில் முழுக்கவனத்தையும் செலுத்துவதா? என்று இரு தலைக்கொள்ளி எறும்பையொத்த நிலைக்கே அரச தரப்பு உள்ளாகியிருக்கின்றது.

எவ்வாறெனினும் தாம் சிக்குண்டிருக்கும் நெருக்கடிகளில் இருந்து மீளுவதற்காக ஜனாதிபதி சந்திரிகாவும் தன்னாலான சகல முயற்சிகளையும் செய்து வருவதாகவே தெரிகிறது.

ஒவ்வொரு பிரச்சனையையும் வெவ்வேறு வழிகளில் கையாள ஜனாதிபதி வியூகம் வகுத்து செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

அரசாங்கம் உடனடியாக எதிர்கொண்டிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற நெருக்கடியை கையாள அரச தரப்பு பல்வேறு வகையான திட்டங்களுடன் களத்தில் குதித்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

முக்கிய அமைச்சர் ஒருவரிடம் இருந்து வெளிப்பட்ட தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பான கருத்து, அரச ஊடகங்கள் மீண்டும் ஒருமுறை உத்தேச அரசியல் தீர்வு யோசனை குறித்த செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துள்ளமை, ஐ.தே.க.வுக்கு ஓர் எச்சரிக்கையாக 1983ம் ஆண்டு ஜூலைக் கலவரம் தொடர்பாக ஆராய ஆணைக்குழு அமைக்க முடிவு செய்துள்ளமை என்று பலதரப்பட்ட உத்திகளை அரச தரப்பும் வைத்திருக்கிறது.

'வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டுமெனக்' குறிப்பிடுவார்கள். ஆனால் அணைகட்டக் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் உதறித்தள்ளியதைப்போலவே நிலமை நடந்து கொண்டிருக்கிறது.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரத்தை ஆற, அமர இருந்து நோக்கும் பட்சத்தில், சுயநலப்போக்குடைய சிலராலேயே அது நெருக்கடியை சந்தித்துள்ளதை அவதானிக்கலாம்!

ஆனால் தற்போது ஒரு மோசமான கட்டத்தை முழு நாடுமே எட்டியுள்ள தருணத்தில், ஆட்சியதிகாரங்களில் இருப்போர் முதலில் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குப் பரிகாரம் தேடும் முயற்சியில் இறங்குவதன் மூலமே ஏனைய பிரச்சனைகளை அணுகமுடியும் என்பதை உணரவேண்டியோராக இருக்கின்றனர்.

அதிரடி அய்யாத்துரை

பச்சைப் பொய்யைக் கூச்சநாச்சமில்லாமல் கூறக் கூடியவன் அரசியல்வாதியெண்டால் அதைக் கண் திறந்து பாக்காமலே கொட்டையெழுத்தில போடுறவன் பத்திரிகை வியாபாரியாவல்லா இருக்கிறான். எதைச் சொல்லுறனெண்டால், எங்கட யாழ்ப்பாணத்து வியாபாரியொருவர் அரசியல் வாதியாகியிருக்கிறாரெல்லே. அவர் ஜனாதிபதி தும்மினாலும் தான் சொல்லித்தான் தும்மினதா அறிக்கை விடுவார். அதை அப்பிடியே வாங்கிப் பிரசுரிச்சுத் தள்ளுது விடியலைப் பெயர் சூடிக் கொண்ட ஒரு யாழ்ப்பாணப் பத்திரிகை. ஏன், இப்ப நடந்ததே வடக்குக்-கிழக்கு வைத்தியர்களிண்ட பிரச்சனை அதில கூடத் தான் சொல்லித்தான் சுகாதார அமைச்சரோட பேச்சுவார்த்தை ஒழுங்கு செய்ததா அந்த அரசியல் புளுகர் புளுகியிருக்கிறார். ஆனால் பாருங்கோ அந்தச் சந்திப்பை தேவ அமைச்சர்தான் ஏற்பாடு செய்தா ரெண்டது எல்லாருக்கும் தெரிஞ்சது; டீவியிலயும் நேரடியாகக் காட்டினது. இது அப்பட்டமான பொய்யெண்டு தெரிஞ்சும் ஏதோ கைலஞ்சம் வாங்கின கடப்பாடு போல அப்பிடியே போட்டிருக்குது அந்தப் பத்திரிகை. ஆனால் ஆரும் போய், "ஏன்யா இப்பிடிப் பொய்யை எழுதிறியலெண்டு கேட்டால், அது அவர் விட்ட அறிக்கை, நீங்கள் அது பொய்யெண்டால், வேறு ஒரு அறிக்கை விடுங்கோவன்" எண்டினமாம். அப்படியெண்டால் நாளைக்கு ஒருவேளை அவர்தான் தான் ஜனாதிபதியெண்டு சொன்னால்கூட இவை அப்படியே போட்டுட்டு, ஜனாதிபதிதான் அதுக்கு மறுப்பறிக்கை விட வேணுமெண்டு சொல்லுவினமாக்கும். மகேஸ்வரா! உனக்கு ஏனிந்த மதியடா!

முன்பென்றால் காவி அணிஞ்சவைய துறவியெண்டு தானே சொல்லுவினம். பிறகு அரசியல் செய்ய வெளிக்கிட்டினம். உந்த ஆக்களிண்ட அரசியலால நாட்டுக்கு வந்த வினை கொஞ்ச நஞ்சமல்ல. இப்போ எல்லாம் முடிஞ்சி கிரிக்கெட்டிலயும் தலையிட ஆரம்பிச்சிட்டினம். கடந்த வாரம் அஸ்கிரி பீடத்துல பிரஸ் கொன்ஃபரன்ஸ் நடந்தது. பீடாதிபதிகள் கலந்துகிட்டினம். சப்ஜெக்ட் முழுக்கவும் கிரிக்கெட்தான். எந்த இடத்துல மைதானம் அமைக்கலாம், எங்கு அமைக்கக் கூடாது. யார் யார் ஒப்பின் பெட்ஸ்மன், சிலிப்ல யார் பீல்ட் பண்ணணும் எண்டெல்லாம் விலாவாரியா ஆராஞ்சி போட்டினம். உவை எட்வைஸ் பண்ண ஆரம்பிச்சால் உருப்படியா இருக்கிற கிரிக்கெட்டும் அம்போதான்!

வசிட்டரின் வாயால் பிரமரிஷிப் பட்டம் பெற்றது போல என்று சொல்லுவாங்களே. அதுபோல தேவ அமைச்சரையும் வாழ்த்தியிருக்கிறாராம் ஒரு முத்தவர். யாராய் இருக்குமெண்டு நினைக்கிறியள். நம்ம கூட்டணிப் பெருந் தலைவர் சிவசிதம்பரம் ஐயா தான். "நல்லாச் செய்யிறாங்கள்" எண்டு தன்னை இந்தியாவுக்கு வந்து சந்திச்ச பிரமுகர் ஒருத்தரிட்ட மெச்சியிருக்கிறார் மனிசர். ஒய்வாயிருக்கிற நேரத்திலையும் நாட்டு நடப்புக்களை ஒப்சேர்வ் பண்ணிக் கொண்டுதான் இருக்கிறார்.

உண்மைத் தொடர் 12

உலகை உலுக்கிய சர்வாதிகாரி ஹிட்லர்

பெர்லினில் இருந்த நல்லதோ கெட்டதோ ஏதாவது ஒரு செய்தி வரும் என்று எதிர்பார்த்து தனது படையணிகள் சகிதம் மியூனிச் பியர் ஹாலில் காத்திருந்தான் ஹிட்லர்.

மாலைநேரம்வரை எந்தத் தூதும் வந்துசேரவில்லை. தளபதி காரல் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதும் நகரின் சில இடங்களில் சிறிய அளவிலான வன்முறைகள் இடம்பெற்றதாக ஹிட்லர் அறிந்து கொண்டான். ஆனால் மியூனிச் பொலிஸ் படைகளில் அநேகமானவை அவனுக்கு ஆதரவு வழங்கமுடிவு செய்திருந்தன.

அன்றைய தினம் இரவு மியூனிச்சில் கலவரங்கள் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்



பட்ட போதும் பாரிய அநர்த்தங்கள் எதுவும் இடம் பெறவில்லை.

பியர் ஹாலில் தளபதி லாடன்டர்ப் உள்ளிட்ட சதிக்கூட்டசகாக்களுடன் இரவு முழுவதும் ஆலோசனை நடத்தினான். அங்கு பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. பெர்லின் நிருவாகிகளுடன் சமரசம் செய்து நிருவாகத்தை பகிர்ந்து கொள்வது தொடர்பாக கருத்து வெளியிடப்பட்டது. ஆனால் நாட்டை குட்டிச்சுவராக்கியவர்களுடன் கூட்டுக்குடித்தனம் நடத்த முடியாது என்று கூறிவிட்ட ஹிட்லர் ஜெர்மனியின் நிறைவேற்றதிகாரியாக தானே இருப்பேன் என்று சொல்லிவிட்டான்.

மியூனிச் நகர மத்தியில் அமைந்துள்ள பவாரியா பாராளுமன்றத்தை ஆக்கிரமித்து தன்னை நாட்டின் தலைவராக பிரகடனம் செய்யப்போவதாகவும் அதன் பின்னர் பெர்லினில் உள்ளவர்களை கவனித்துக் கொள்வதாகவும் கூறினான்.

திட்டமிட்டபடியே மறுநாள் காலை நவம்பர் 9 திகதி, மியூனிச் நகருக்கு பாரிய பேரணி ஒன்றை நடத்திச் செல்ல ஹிட்லர் தயாரானான்.

அதிகாலையிலேயே பேரணி ஆரம்பமாயிற்று. ஹிட்லருடன் அவனது சகாக்கள் பலர் முன்வரிசையில் வர எஸ்.ஏ.படையணியைச் சேர்ந்தவர்கள், ஒருசில பொலிஸ் குழுக்கள் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் என்று ஒரு பெருங்கூட்டம் ஹிட்லருக்குப் பின்னால் அணிவகுத்துச்சென்றது.

"ஜெர்மனியின் விடுதலைக்கான புரட்சி ஆரம்பமாகி விட்டது. நாட்டை பாதுகாக்கத் தவறிய ஆட்சியாளர்களின் முடிவு காலம் நெருங்கி விட்டது. மக்களே விடுதலையின் பங்காளிகளாக இணைந்து கொள்ளுங்கள்" என்று வழி நெடுகிலும் கூவிக்கொண்டே வந்தான். வீதியோரங்களிலும் வீடுகளிலும் இருந்து பலர் ஹிட்லரின் அழைப்பை ஏற்று 'விடுதலையின் பங்காளிகளாக' பேரணியில் இணைந்து கொண்டார்கள்.

ஓடியோன்பிளட்ஸ் என்ற இடத்தால் ஊர்வலம் நகர்ந்து கொண்டிருந்தது. அதற்கு அருகில் பவாரியா போர் வீரர்களின் நினைவுத் தூபி இருக்கிறது. இந்த நினைவுத் தூபியை அதிக ஆர்ப்பாட்டங்கள், கோஷங்கள் இன்றி அமைதியாகக் கடந்தது பேரணி. சில நிமிட நகர்வின் பின்னர் மியூனிச் நகரம் பார்வைக்குத் தெரியும் தூரத்தில், நகர வாயிலில் உள்ள பாலத்தை வழிமறித்து, மற்றொரு பொலிஸ் படையணி ஆயுதங்களுடன் காத்திருப்பதைக் கண்ட ஹிட்லருக்கு ஒரு கணம் இதயம் அதிகமாக துடித்தது. கைகளை விரித்து ஊர்வலத்தை நிறுத்தியவன், தனது அரையில் செருகியிருந்த கைத்துப்பாக்கியை உருவி எடுத்தான். என்ன நடக்கப்போகிறது என்று ஊகிப்பதற்குள் இரு தரப்பிலிருந்தும் துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்கின. யார் முதலில் சுட்டார்கள் என்று தெரியவில்லை. ஹிட்லருக்கு அருகில் நின்றிருந்த அவனது நெருங்கிய சகாக்களில் ஒருவரான ஸ்ச்சூனர் ரிச்சடர் என்பவரது தலையை பறந்து வந்த ரவையொன்று பதம் பார்த்தது.

ஹிட்லர் தனது கைத்துப்பாக்கியால் மேல் நோக்கிச் சுட்டான். கூட்டம் களைந்தோடியது. பேரணியில் வீராவேசத்தோடு முழங்கிக்கொண்டு வந்தவர்கள் தலைபோன திசையில் ஓடினார்கள்.

பெர்லினில் இராணுவ நிருவாகிகளுக்கு விசுவாசமான படையணிகள் மியூனிச் நகரை இரவோடு இரவாக சுற்றி வளைத்திருந்தன. ஊர்வலத்தின் போது ஹிட்லரை கைது செய்ய பாலத்துக்கு அருகில் ஆயுதங்களுடன் காத்திருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் சேர்ந்து ஹிட்லரின் பேரணியை களைத்துவிட்டு அவனை கைது செய்ய தயாரானார்கள்.

தனது திட்டம் பிழைத்துப்போனதில் ஹிட்லர் வெறிபிடித்தவன் போல காணப்பட்டான். பெர்லினின் நிருவாகத்திறன் குறித்து தான் பிழையாக கணக்குப் போட்டுவிட்டதை உணர்ந்து நொந்து கொண்டான்.

ஆயுதங்களுடன் ஹிட்லரைச் சுற்றி வளைத்த பொலிஸார் அருகில் உள்ள அரசாங்க கட்டடம் ஒன்றுக்குள் ஒடித்தப்முயன்ற அவனை கட்டட வாசற்படியில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

ஹிட்லரின் அரசியல் சதுரங்கத்தின் முதல் கட்ட ஆட்டம் முடிவுக்கு வந்தது. சதிப்புரட்சி தோல்வியடைந்ததில் பல முக்கியஸ்தர்கள் கைதானார்கள். மேலும் பலர் தலைமறைவானார்கள். ஹிட்லரின் அரசியல் வாழ்வு மட்டுமன்றி, அவனது உலக வாழ்வே இத்துடன் முடிவடைந்து விடும் என்று சிலர் ஊகம் தெரிவித்தார்கள்.

ஆனால் பிற்காலத்தில் ஹிட்லர், "எனது வாழ்வில் மிகவும் அதிஷ்டவசமான நாள் நவம்பர் 9ம் திகதிதான்!" எனக் கூறியிருந்தான்.

அவன் தற்காலிக சிறைக்கூடம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டான். விசாரணை ஆரம்பமானது. ஹிட்லருக்கு பரவலான மக்கள் ஆதரவிருப்பதை கருத்திற் கொண்டு அதற்கேற்றவாறே வழக்கு நடாத்தப்பட்டது. ஓர் அரசியல் கைதிக்குரிய சகல கௌரவங்களுடனும் அவன் பரிபாலிக்கப்பட்டான்.

பிற்காலத்தில் அனுதாபம், மன்னிப்பு என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரியாத சர்வாதிகாரியாக வரப்போகும் ஒருவனுக்கு நீதிமன்றம் அனுதாபம் காட்டியது. முதலாம் உலக மகாயுத்தத்தில் நாட்டுக்காக போராடி காயமடைந்த ஒரு போர் வீரன் என்பதை கவனத்தில் கொண்டு சதிப்புரட்சியை திட்டமிட்ட குற்றத்திற்காக வெறுமனே 5 வருட சிறைத் தண்டனையை மாத்திரம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தீர்ப்பு வழங்கப்பட்ட நாளில் அவனது சிறைக்கூடம் மலர்கொத்துக்களால் நிரம்பி வழிந்தது. பெருந்தொகையானவர்கள் ஹிட்லருக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

சிறை வாழ்க்கையின் தனிமை அவனை மிகவும் வாட்டியது. நண்பிகளுடன் சல்லாபித்த ஞாபகங்கள் இம்சைப்படுத்தின. கெதரின் அடிக்கடி வந்து அவனது நலம் விசாரித்துச் சென்றான். ஆனால் முத்தங்களை தவிர வேறெதனையும் அவனுக்கு கொடுக்கக்கூடியதாக இருக்கவில்லை. எப்பொழுதும் அவனை பார்த்துவிட்டு விடைபெறும் போது அழுத்தமாக முத்தம் கொடுத்து அவனை சூடேற்றி விட்டு ஏமாற்றத்துடன் பிரிந்து போவாள்.

சிறைச்சாலையின் பிரதம காவலர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண் கைதிகளுடன் உறவு கொள்வதை ஹிட்லர் பலமுறை அவதானித்திருக்கிறான். இவற்றைப் பார்க்கும்போது முன்னர் தான் இராணுவத்தில் இருந்த சமயம் தனது இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஃபிரான்ஸ் நாட்டு பெண் உளவாளியுடன் செய்தவைகள் ஹிட்லரின் ஞாபகத்துக்கு வந்து மறையும்.

பக்கத்து அறைகளில் இருக்கும் பெண் கைதிகளுடன் சிறைக் காவலர்கள் இரவு நேரத்தில் புரியும் லீலைகளை அவன் காண்பதுண்டு. சில நேரங்களில் முனங்கல் சத்தங்களும், பெருமூச்சுக்களும் அதிகமாக கேட்கும். இந்த நிலமை அவனை வாட்டி எடுத்தது.

ஷானு

ஆனால் கடந்தகால பாலியல் செயற்பாடுகளை ஞாபகப்படுத்தி மனதை குழப்பிக் கொள்வதை ஹிட்லர் முடியுமானவரையில் தவிர்த்து வந்தான்.

தன்னை பார்க்க வருகிறவர்கள் மூலமாக நல்ல புத்தகங்கள் பலவற்றை சிறைக்குள் பெற்றுக்கொண்டான். இந்தநாட்களில் ஏராளமாக வாசித்தான்.

பெரும்பாலான சிறைக்கைதிகளைப் போலவே தனத கடந்தகாலத்தை அவன் மீட்டிப்பார்த்தான்.

எடோல்ப் ஹெஸ் என்றவர் மூலமாக சிறையில் இருந்தவாறே (Mein Kampt) 'எனது போராட்டம்' என்ற நூல் அவனால் எழுதப்பட்டது.

ஹிட்லரின் விடுதலையின் பின்னர் இந்த புத்தகம் இரண்டு பதிப்புக்களாக வெளியிடப்பட்டது.

நாளை ஜெர்மனி, நாளை மறுதினம் ஐரோப்பா அதன் பின்னர் முழு உலகமும் என்ற ஹிட்லரின் கனவு இந்த நூலில் தெளிவு படுத்தப்பட்டிருந்தது. தனது ஆக்கிரமிப்பு சிந்தனைக்கு புதியதோர் நியாயத்தை அவன் உருவாக்கி வெளியிட்டான்.

முதலாம் உலகப் போரில் ஜெர்மனியின் தோல்வி குறித்து இதில் ஆழமாக ஆராயப்பட்டிருந்தது.

யூதர்கள் குறித்த தனது எண்ண வெளிப்பாட்டை விவரித்திருந்த அவன் நாஸிகளுக்கு ஜெர்மனி சொந்தமானது என்ற ரீதியில் ஒரு தார்மீக உரிமையை மிகத்தெளிவாகவும் தத்துவார்த்தமாகவும் குறிப்பிட்டிருந்தான்.

ஆனால் எனது போராட்டம் என்ற இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருப்பதை விடவும் பரிந்து கொள்ள முடியாத சிந்தனையை ஹிட்லர் கொண்டிருந்தான் என்று சிலர் சுட்டிக்காட்டுகிறார்கள்.

வருவான்...

ஓரினச் சேர்க்கையாளர்களின் கோட்டை

முன்பெல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாக அரங்கேறி வந்த ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணம் இப்போதெல்லாம் பலர் முன்னிலையில் பகிரங்கமாக நடந்தேறி வருகிறது.

ஒரு காலத்தில் இதற்கு அங்கீகாரம் கிடைக்காததை அடுத்து பல தன்னினச் சேர்க்கையாளர்கள் இரகசியமாக 'வாழ்க்கை' நடத்தி வந்தார்கள்.

கடந்த சில வருடங்களுக்கு முன் தாங்கள் இணைந்து வாழ அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று இவர்கள் ஓயாது போராட்டம் நடத்தியதால் சில நாடுகள் இதற்கு அங்கீகாரம் அளித்து விட்டன.

இதனால் இப்போது ஆயிரக்கணக்கான ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் உலகில் நடந்து வருகின்றன.

அதிலும் அமெரிக்காவில் உள்ள வெர்மண்ட் நகரில் ஆணும் பெண்ணும் திருமணம் செய்வதை விட ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்வதுதான் அதிக அளவில் நடந்து வருகிறது.

சமீபத்தில் அரிசோனாவைச் சேர்ந்த நடுத்தர வயது ஓரினச் சேர்க்கையாளர்கள் வெர்மண்டில்தான் திருமணம் செய்தார்கள். கன்ஸ் என்ற 45 வயதுப் பெண்ணும் பிரஞ்சு என்ற 42 வயதான இன்னொரு பெண்ணும் தாதியாக வேலை பார்த்து வருகிறார்கள்.

இவர்கள் இருவரும் கடந்த 18 வருடங்களாக ஒருவரை ஒருவர் தீவிரமாகக் காதலித்து வந்தனர். ஏற்கனவே திருமணமான இருவரும் தமது கணவன்மாரை விட்டு விட்டு வந்து இரகசிய வாழ்க்கை நடத்தினார்கள்.

கன்ஸ்-பிரஞ்சு திருமணம் வெர்மண்ட் நகரில் உள்ள தேவாலயத்தில் நடந்துள்ளது. இது இத்தேவாலயத்தில் நடந்த 3000வது தன்னினச் சேர்க்கையாளர் திருமணமாகும்.

இந்த தன்னினச் சேர்க்கையாளர்களில் அதிகரிப்பால் வெர்மண்ட் நகருக்கு சுற்றுலாப் பயணிகள் படையெடுக்கிறார்கள். முன்பு 10 இலட்சமாக இருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தில் 46 இலட்சமாக அதிகரித்திருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இதனால்தானோ என்னவோ இப்போது வெர்மண்ட் நகரை ஓரினச் சேர்க்கையாளர்களில் கோட்டை என்று வர்ணிக்கிறார்கள்.

நடிகைக்குத் தண்டனை

சமீபத்தில் சிறைக்கூடம் ஒன்றில் ஒரு பெண்ணை முழங்கால் வரைப் புதைத்து விட்டு, அப்பெண்ணைச் சுற்றி ஏகப்பட்டவர்கள் நின்று கொண்டு உயிர் போகும் வரை கல்லால் அடித்து மரண தண்டனையை நிறைவேற்றினார்கள்.

கொல்லப்பட்ட பெண் ஒரு நடிகை, ஆபாசப் படங்களில் நடித்தார் என்பதுதான் அவர் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு. 8 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின் இப்போது கொன்றிருக்கிறார்கள்.

இது நடந்தது ஈரான் நாட்டில்.

ஹுஸைனின் புதிய நாயகி

இந்தித் திரையுலக நட்சத்திரம் மாதுரி டிக்ஷிட் உச்சத்தில் இருந்த போது அவரது பரம இரசிகராக இருந்தவர் சர்ச்சைக்குரிய ஓவியர் எம்.எஃப்.ஹுஸைன்.

மாதுரி கதாநாயகியாக நடித்த 'ஹம் ஆப்கே ஹெய்ன் கோன்' இந்திப்படத்தை மாதுரி நடித்ததற்காகவே இருபதிற்கும் மேற்பட்ட தடவைகள் பார்த்திருந்தார் ஹுஸைன்.

அவரைப் படங்கள் வரைந்து தள்ளிய ஹுஸைன், மாதுரிக்காக 'கஜகாமினி' என்ற படத்தைத் தயாரித்து இயக்கினார். மாதுரி திருமணம் செய்து கொண்ட பின் இப்போது ஹுஸைன் இன்னொரு நடிகைக்கு இரசிகராகி விட்டார்.

அந்த நடிகைமேல் உருகி வரும் ஹுஸைன் விரைவில் அவரை வைத்துப் புதிய படமொன்றை எடுக்கவுள்ளார். அந்த நடிகை யார் தெரியுமா? முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய்.

விபச்சாரியின் வித்தியாச போராட்டம்

மெக்ஸிக்கோ நாட்டைச் சேர்ந்த விபச்சாரிகள் வித்தியாசமான போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

மெக்ஸிக்கோ நகரத்தில் விபச்சாரிகளின் தொல்லைகளைப் பொறுக்காத பொலிசார், நகர எல்லையைத் தாண்டித் தான் இனி அவர்கள் தங்களது 'தொழிலை'ச் செய்ய வேண்டும் என்று சட்டம் போட்டுவிட, விபச்சாரிகள் போராட்டத்தில் குதித்தனர்.

விபச்சாரமும் ஒரு தொழில்தான் ஆகையால் பொலிசார், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் உபயோகிப்பது போல் சீருடை அணிவது என்று முடிவு செய்து, மஞ்சள் நிற பெனியனும் கறுப்பு நிற கட்டைக் காற்சட்டையும் அணிந்து 'தொழிலி'ல் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்தச் சீருடைப் போராட்டம் பொலிசாருக்குப் பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

மகனை எதிர்க்கும் தந்தை

உலகிலேயே அரச குடும்பங்களில் புகழும் பெருமையும் கொண்டது இங்கிலாந்து அரச பரம்பரை.

காதலுக்காக முடி துறந்தவர்களும் இங்கிலாந்து அரச வம்சத்தில் தான் இருந்தனர்.

தற்போதைய இங்கிலாந்து இளவரசர் எடின்பரோ கோமகன் ஃபிலிப் தனது மகன் இளவரசர் சார்ள்ஸுக்கு அரசராகும் தகுதி இல்லை என்று தெரிவித்திருக்கிறார்.

"சார்ள்ஸ் கட்டுப்பாடுகளுக்கு அடங்காதவர். வயதுக்கு மீறிய புத்திசாலித்தனம், அர்ப்பணிக்கும் மனமில்லாமை இவைகளினால் ஒரு நல்ல அரசனாகும் தகுதி இல்லாமல் போகிறது" என்று இளவரசர் ஃபிலிப் கூறியிருப்பது சார்ள்ஸிற்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது.

அசத்தல் போஸ்டர்

➡ பிறந்த மேனியராய்க் காட்சி தருவது இப்போதெல்லாம் சகஜமாகி விட்டது. பொதுவாக அழகிய இளமங்கையர் தான் தங்கள் அங்கங்களைக் காட்டி பிறரை மகிழ்ச்சிக் கடலாட்டுவார்கள். இப்போது ஆண்களும் பெண்களுடன் போட்டி போடத் தலைப்பட்டு விட்டார்கள்.

இங்கு படத்தில் ஒரு பெரும் ஆண்கள் பட்டாளமே பிறந்த மேனியுடன் போஸ் கொடுத்துப் படம் பிடித்துக் கொண்டனர். இப்படம் சுவரொட்டிகளாக அச்சிடப்பட்டு, ஒவ்வொன்றும் 10 டொலர் வீதம் விற்கப்படுகிறது. இவ்வாறு சேரும் பணம் பல தர்ம கைங்கரியங்களுக்கு வழங்கப் படுகிறது.

அவுஸ்திரேலியாவின் 'மெல்போர்ண் ஸ்ரோம்' என்ற கழக உறுப்பினர்களே இத்தகைய துணிச்சலான செயலில் இறங்கினார்கள். ஆரம்பத்தில் உடைகளைக் களைவதற்குக் கூச்சப்பட்டார்களாம். பின்னர் முழு நிர்வாணமாக முன் வரிசையில் நிற்பதற்காக நீமுந்தி நான் முந்தி என்று போட்டி போட்டார்களாம்.

அவுஸ்திரேலியாவில் இந்தப் படம் போட்ட சுவரொட்டிகளை வாங்குவதில் பலத்த போட்டி ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

கரடியின் மோட்டார்ச் சவாரி

⬆ பிராணிகளுக்கு பல்வேறு விளையாட்டுகளையும் பழக்கி, அதன் மூலம் பணம் சம்பாதிப்பது சீனாவில் தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தச் சட்டம் அதிகமாகச் சட்டை செய்யப்படுவதாகத் தெரியவில்லை.

கரடியார் ஒருவர் தரையிலிருந்து 10 மீட்டர் உயரத்தில் கட்டப்பட்டுள்ள கம்பியில் மோட்டார் சைக்கிளில் சவாரி செய்ய ஆயத்தமாகிறார்.

ஷோன் ஸான் கேளிக்கை கொட்டகையில் நாள்தோறும் ஒவ்வொரு காட்சியில் கரடியாரின் மோட்டார் சைக்கிள் சவாரியைப் பார்க்க ஏராளமான மக்கள் கூடுகின்றனராம்.

உலகக்கிண்ண உதைபந்தாட்ட உள்ளரங்கு

⬇ கிரிக்கெட்-உதைபந்தாட்டப் போட்டிகளை இரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போது திடீரென மழை வந்தால் அவ்வளவுதான். போட்டியை நிறுத்தி, பார்வையாளர்களை வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள்.

ஆனால் இப்போது இந்தப் பிரச்சனையே இல்லையென்று கூறுமளவுக்கு உள்ளக அரங்குகளை அமைத்து, அடாது மழை பெய்தாலும், போட்டியை நிறுத்தாமல், விடாது பார்க்கும்படி செய்துள்ளார்கள்.

படத்தில் காணப்படுவது உதைபந்தாட்ட உள்ளரங்கு ஒன்றின் வெளித்தோற்ற அமைப்பு. அடுத்த வருடம் நடைபெற இருக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்காக ஜப்பான் நாட்டில் அண்மையில் அமைக்கப்பட்டிருக்கும் அரங்குதான் இது.

அண்மிக்கும் அழிவு அபாயம்

⬇ மாறிவரும் தட்ப வெட்ப நிலை காரணமாக, உலகில் வெப்பம் அதிகரித்து வருகின்றது. இதனால் அண்டார்டிக்கா பனிப் பிரதேசத்தின் உருகுநிலை குறைந்து, உஷ்ணம் அதிகரித்து வருகிறது.

அதிக உஷ்ணம் காரணமாகவும் சுருங்கி வரும் எல்லை காரணமாகவும் அண்டார்டிக்காவில் உள்ள அபூர்வ உயிரினங்கள் அழிவை அண்மிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக 'பெங்குவின்கள்'தான் அதிகளவில் அழிந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



எதிர்ப்பு

⬅ அமெரிக்கா அறிவித்த புதியதொரு அணு ஆயுதத் திட்டத்திற்கு தென்கொரியாவில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த அணு ஆயுதத் திட்டத்தை விளக்குவதற்காகக் கொரியா சென்ற அமெரிக்க வெளியுறவுச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடேஜிற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி எதிர்ப்புக் காட்டினர் தென் கொரிய நாட்டவர்கள். இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் 'மரணமுகமூடி' அணிந்து வந்தும் எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினார்கள்.

சி னி வி சி ட்

'சகலகலா' தயாரிப்பாளர் செய்யும் அண்டர் கிரவுண்ட் வேலைகள்

மைழ்நாட்டிசரும்ந மயன்

பிரபல தயாரிப்பாளர் ஒருவர் பற்றி தமிழக இதழ் ஒன்று வெளியிட்ட 'அந்தரங்க'த்தை அப்படியே உங்களுக்குத் தருகிறேன்.

பாரம்பரியம் மிக்க தயாரிப்பு நிறுவனம் அது. அதன் நிர்வாகியான வெள்ளையும் சொள்ளையுமாக இருக்கும் அந்த முதியவர் நல்ல பண்பாளர் என்று கோடம்பாக்கத்தில் பேச்சு.

கையைக் கட்டி அவர் பதவிசாய் நிற்பதைப் பார்த்தால் பார்க்கிறவர்களுக்கெல்லாம் அவர் மேல் மரியாதைதான் வரும். வெளிப்பார்வைக்கு மிகவும் நல்லவராக இருக்கும் அவரது அந்தரங்கத்தைப் பற்றிச் சொன்னால் நம்புவது சிரமமாக இருக்கும்.

'சகலகலா' படத்தில் தங்கை வேடத்தில் நடித்தவர் ஒரு செடியின் பெயர் கொண்ட நடிகை.

அந்த நடிகையின் எதிர்காலத்தையே படுபாதாளத்தில் தள்ளியவர் முருகனின் பெயரைக் கொண்ட இந்தத் தயாரிப்பாளர்.

அந்தச் சிறுபெண்ணைத் தனக்கு மட்டுமே இரையாக்கிக் கொண்டவர். இவரது கட்டுப்பாட்டில் அந்த நடிகை இருந்ததால் அந்த நடிகையைத் தமது படங்களில் நடிக்க வைக்கப் பலர் தயங்கினார்கள். இதனால் நடிகைக்குப் படவாய்ப்புக்களே இல்லாமல் போயின.

சினிமாவில்தான் பெரிய ஆளாகி ஒன்றும் சம்பாதிக்கவில்லையே கல்யாணம் செய்து வைத்து நல்லபடியாக வாழவாவது வைக்கலாம் என அந்த நடிகையின் குடும்பம் முன்றபோது, அவர்களையெல்லாம் மிரட்டி, நடிகைக்கு வந்த வரன்களை எல்லாம் விரட்டினார்.

பல வருடங்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்து அவரைச் சக்கையாகப் பிழிந்து விட்டு, தூக்கி வீசி விட்டார்.

உருப்படியான குடும்ப வாழ்க்கை அமையாததால் அந்த நடிகை இப்போது நடுத்தெருவில் நிற்கிறார்.

சங்கீதத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்ட தெலுங்குப் படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான அந்த நடிகைக்கு இந்தத் தயாரிப்பாளர் தனது இரண்டு படங்களில் மட்டுமே நடிக்க வாய்ப்புக் கொடுத்தார். பக்திப் பாடல்களைப் பாடுவதில் பேர் போன ஒருவரின் மருமகன் இந்த முன்றெழுத்துச் செடியின் பெயரைக் கொண்ட நடிகை.

இந்திக்குப்போகும் இடுப்பு

இடுப்பு பிரதேசத்தை மையமாக வைத்து தமிழ்-தெலுங்கு என இரு மொழிகளில் 'குஷி' படத்தை எடுத்துத் தூள் கிளப்பிய இயக்குநர் எஸ்.ஜே.சூர்யா, இந்த இடுப்பு விஷயத்தை இந்திக்குக் கொண்டு போகிறார்.

தமிழில் விஜய்-ஜோதிகா, தெலுங்கில் பவன் கல்யாண்-பூமிகா நடித்த 'குஷி' வேடங்களை இந்தியில் அபிஷேக் பச்சன்-கரீனா கபூர் ஏற்க விரைவில் இப்படம் உருவாகவுள்ளது.

தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் 'குஷி' வெற்றிப் படத்தைத் தயாரித்த ஏ.எம்.ரத்னம் தான் இந்தி 'குஷி'யையும் தயாரிப்பார் எனத் தெரிகிறது.

ஷில்பா கேட்ட 20 கோடி

மும்பையில் இருந்து வெளியாகும் பிரபல சினிமா இதழ் ஒன்று இந்தித் திரையுலக நட்சத்திரங்கள் பற்றிய பரபரப்பான கிசு கிசுக்களை வெளியிட்டு வருகிறது. சில நடிகைகள் பற்றி கிசுகிசுக்களைத் தொடராகவும் வெளியிட்டு வருகிறது.

இப்படி ஷில்பா ஷெட்டியின் கதையை வெளியிடத் தொடங்கியது. இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்த ஷில்பா ஷெட்டி, கொதித்துப் போய்விட்டார். அத்தோடு தன் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறி 20 கோடி இந்திய ரூபா நஷ்டஈடு கேட்டுள்ளார். நீதிமன்றத்தில் இதுபற்றிய விசாரணை நடந்து வருகிறது.

வில்லி மோனல்

சிம்ரனின் தங்கை மோனல் பெரிய அளவில் வருவார் என எதிர்பார்ப்பவர்களுக்கு ஏமாற்றம். முதல்படமான 'பார்வை ஒன்று போதுமே' படத் தோல்வியை அடுத்து 'பத்ரி'யில் நடித்தார் மோனல். கிட்டத்தட்ட வில்லி போன்ற வேடம் அது. கதாநாயகியாக நடிக்கக் காத்திருக்காமல் கிடைக்கும் வேடங்களை ஏற்று நடிக்க முடிவு செய்திருக்கிறார்.

'லல்லி'யில் சிறிய வேடத்தில் நடிக்கும் இவர் பிரபு-பிரபுதேவா இணைந்து நடிக்கும் 'சார்லி-சாப்ளின்' படத்தில் வில்லியாக நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

ராணியிடம் சென்ற மகாராஜன்

விஜயகாந்தை வைத்து 'வல்லரசு' வெற்றிப்படத்தை இயக்கிய மகாராஜன் அடுத்து அர்ஜுன் நடிக்க 'அரசாட்சி' என்ற படத்தை இயக்கவுள்ளார்.

இதில் அர்ஜுன் தனக்கு ஜோடியாக இந்தி நடிகை ராணி முகர்ஜியைப் (ஹேராம்' படத்தில் முத்தக் காட்சிகளில் எல்லாம் பூந்து விளையாடிய அதே ராணி முகர்ஜிதான்) போடும்படி கூற, ராணி முகர்ஜியிடம் சென்றுள்ளார் இயக்குநர் மகாராஜன்.

முகப்பில் ரம்பா

ஈஸ்வர்-மோனிஷா

படம்: லவ்சேனல்



உதயா-ராதிகா சௌத்ரி
படம்: ஷக்கலக்க பேபி

ஸ்ரீகாந்த்-பூனம்
(தெலுங்குப் படம்)

காதோடு சொல்லுகிறோம்

'குண்டு பூ' நடிகையின் காதல் கணவரான 'சந்தர'மான இயக்குநரது உதவியாளர்களில் ஒருவர் இப்போது 'உயர' ராஜ நடிக்கும் படத்தை இயக்கி வருகிறார். அதில் நாயகியாக நடிக்கும் முன்றெழுத்து 'தொடை அழகி' நடிகையை விரும்புகிறாராம் இயக்குநர். நடிகை தரப்பில் இருந்தும் காதலுக்குப் பச்சைக் கொடி காட்டி விட்டதாகக் கூறுகிறார்கள்.

நிதையும் புதுமையாகச் செய்வதில் ஆர்வம் காட்டும் நடிகர்-இயக்குநர் தனது புதிய படத்தில் நாயகியாக நடிக்கும்படி குளிர்பானம் ஒன்றின் பெயரைத் தன் பெயரின் முன்னால் வைத்திருக்கும் இரண்டெழுத்து சின்னத்திரை நிகழ்ச்சித் தொகுப்பாளினியை அணுகினாராம். 'தனக்கு நடிப்பதில் இஷ்டமில்லை' என்று கூறி மெதுவாகக் கழன்று கொண்டாராம் அந்தச் சிரிப்பழகி.

கதாநாயகியாக இருந்து நகைச்சுவை நடிகையாக மாறியிருக்கும் நட்சத்திரம் ஒன்றின் பெயரைக் கொண்ட முன்றெழுத்து நடிகையின் தலைக்கனப்பைக் கண்டால் நகைச்சுவை கண்ணா ஓடி ஒளிந்து விடுகிறார். அண்மையபட மொன்றில் நகைச்சுவை கண்ணாவோடு ஜோடி சேர்ந்த நடிகை, நிஜத்திலும் அவருடன் சில நாட்கள் ஒன்றாகத் திரிந்து பெருந்தொகை செலவு வைத்து விட்டதே இதற்குக் காரணமாம்.

கன்னடப்படத்தில் நடிக்கப்போனபோது, ஏற்கனவே பலமுறை திருமணமான 'வில்லன்' நடிகரின் வலையில் விழுந்து, அவரது மனைவிகளுள் ஒருவரான முன்றெழுத்துப் பெயருடைய ஐந்து இலக்க நடிகை, குழந்தை பெற்றுக்கையோடு கணவனை விட்டுப் பிரிந்தார். இப்போது சின்னத்திரையில் பிஸியாக நடித்து வரும் இவர் சின்னத்திரை நடிகர் ஒருவரைத் தீவிரமாக லவ்வி வருகிறாராம்.

விஜய் ஜோடியாக மொடல் அழகி

விஜய் வில்லனிக் ஹீரோவாக நடித்த 'ப்ரியமுடன்' படத்தை இயக்கிய வின்சென்ட் செல்வா, மறுபடி விஜய்யை வைத்து இயக்கும் படத்தில் ஷாகின் என்னும் மொடல் அழகி விஜய்க்கு ஜோடியாக நடிக்கவுள்ளார்.

ஷாகின் இப்போது 'ஈரநிலா' படத்தில் நாயகியாக நடித்து வருகிறார்.

புதுமுகங்கள் நடிக்கும் 'பொம்மை'

பல வருடங்களுக்கு முன் வெளியாகிப் பரபரப்பாக ஓடிய படம் 'பொம்மை'. இப்போது இதே பெயரில் புதிய படமொன்று தயாராகிறது.

இதில் ஷோபனா, குசோனா ஆகிய புதுமுகங்கள் நாயகிகளாக நடிக்கின்றனர். இவர்களுடன் பிருதிவிராஜ், லையாபுரி, ஷர்மிலி, ஷிலா உட்பட பலர் நடிக்கின்றனர்.

இப்படத்தின் நாயகனாக நடிப்பதுடன் படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இசையமைத்து இயக்குகிறார் பாபுகணேஷ். பொம்மை ஒன்றுக்குள் ஆவி ஒன்று புகுந்து கொண்டு செய்யும் அட்டகாசங்கள் தான் இப்படத்தின் கதை. பயங்கர திகில் படமான இதில் கிராஃபிக்ஸ் மிரட்டல்களும் உண்டாம்.

ஷில்பா ஷெட்டி

...ம்சவிர்தனின் 'ராயல் பேமிலி'

...சவிர்தன் கதாநாயகனாக நடிக்கும் ...டமொன்றுக்கு 'ராயல் பேமிலி' என்று ...குட்டப்பட்டுள்ளது.

...ல் அம்சவிர்தன் ஜோடியாக மொடல் ...ஜூலியா நாயகியாக நடிக்கிறார். ...எஸ்.எஸ்.சந்திரனின் மகன் ரோஹித், ...ல், குமரிமுத்து, வி.கே.ராமசாமி, ...வையாபுரி, மயில்சாமி, எஸ்.எஸ்.சந் ...மனோரமா, கோவை சரளா, பாபி ...ர் உட்பட பலர் நடிக்கின்றனர்.

...படத்தின் கதை, திரைக்கதை, வசனம் ...இயக்குபவர் புதியவரான ராஜேஷ். ...இவர் பல படங்களில் உதவி இயக்குந ...பணியுரிந்தவர்.

கார்த்திக்கைப் புகழும் மாளவிகா

படப்பிடிப்புக்களுக்கு ஒழுங்காக செல்வ தில்லை, மன்மத விளையாட்டுக்கள் என்று கார்த்தி பற்றி கசமுசாவாக செய்திகள் கசிந்து கொண்டிருக்க, 'லல்லி' படத்தில் அவருடன் இணைந்து நடிக்கும் மாளவிகா சொல்வ தென்னவோ வேறு மாதிரி.

படப்பிடிப்புக்கு நேரத்திற்கு ஆஜராகி விடு வது, சகநடிகைகளுடன் நாகரீகமாக நடந்து கொள்வது என கார்த்தி பக்கா ஜென்டில்மன் ஆக நடந்து கொள்வதாக கூறிவருகிறார்.

'ஆனந்தப் பூங்காற்றே' படத்தில் நடிக்கும் போது ஏற்பட்ட நட்பு காரணமாக 'சீனு', 'லல்லி' ஆகிய படங்களில் நடிக்க வாய்ப்புப் பெற்றுக் கொடுத்த கார்த்திக்குக்கு இந்த அளவுக்காவது நன்றி பாராட்டக்கூடாதா?

வசுந்த்ராவுக்கு வந்த கோபம்

அண்மையில் வசுந்த்ரா தான் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒன்றில் அவரை 'ஹேராம்' வசுந்த்ராதான் என்று அழைத்போது மூட்-அவுட் ஆகிவிட்டார்.

பின் இது பற்றி அவர் கூறியபோது,

"அந்தப் படத்தில வந்த வசுந்த்ராவை எனக்கே பிடிக்கல. அப்பிடி கூப்பிடும்போது எனக்கு கோபம் கோபமா வருது. அதை கொஞ் சம் கொஞ்சமாக மறக்கிறேன். இப்போ 'சிட்டிசன்' படத்துல நல்ல வேடம்." என்று தெரிவித்துள் ளார்.

'சிட்டிசன்' பட்தில் அல்ட்ரா மொடேர்ன் பெண்ணாக பாடல் காட்சிகளில் அஜித்துடன் இணைந்து அசத்லாக நடித்திருக்கும் வசுந்த்ரா வுக்கு இதன் பின் பல புதிய படவாய்ப்புக்கள் வரும் என எதிர்பார்க்கலாம்.

பிரசாந்த்-ஜோதிகா
படம்: ஸ்டார்

பிரதீபா சினஹா

மினிசினி

பல வெற்றிப் படங்களைத் தயாரித்த ஏ.எம்.ரத்னத்தின் மகனும் 'நட்புக்காக' படத்தின் கதாசிரியருமான ஜோதி கிருஷ்ணா முதல் முறையாகப் படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்திற்கு 'ஹலலல்லா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

திருமணத்திற்குப் பின் பெரிய திரையில் நடிக்க வாய்ப்பில்லாமல் இருந்த ரஞ்சிதா, நீண்ட இடைவெளிக்குப் பின் நாசர் இயக்கி நடிக்கும் 'மாயன்' படத்தில் இரண்டாவது நாயகியாக நடித்து வருகிறார்.

மாதவன் நடிக்க 'தோழன்' என்ற படத்தை புஷ்பாவாசகன் என்ற புதியவரின் இயக்கத்தில் தயாரிக்க இருந்தது வெங்கடேஸ்வராலயம் பட நிறுவனம். இப்போது மாதவன் பிஸியாக இருப்பதால் இந்நிறுவனம் சூர்யாவை வைத்துப் படமொன்று தயாரிக்கவுள்ளது.

தமிழில் படவாய்ப்புக்களின்றி இருக்கும் கௌசல்யா, மம்முட்டி ஜோடியாக மலையாளப்பட மொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். 'ராட்சச ராமன்' என்று பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தை வினயன் இயக்குகிறார்.

வாரிசுகள் கதாநாயகன்களாக அறிமுகமாகும் வரிசையில், 'விஜயபுரி வீரன்' பட நாயகன் ஆனந்தனின் மகனும் டிஸ்கோ சாந்தியின் தம்பியுமான ஜெய் ஆனந்த் 'நாகா' படம் மூலம் நாயகனாக அறிமுகமாகிறார்.

மும்தாஜ் இரட்டை வேடங்களில் நடிக்கும் 'மும்தாஜ்' படத்தின் கதை, நடிகை ஒருவரது கொலை பற்றிய கதைக் கருவைக் கொண்டதாகும். இதில் நடிகை-கல்லூரி மாணவி என இரண்டு வேறுபட்ட வேடங்களில் நடித்து வருகிறார் மும்தாஜ்.

வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'மிடில் கிளாஸ் மாதவன்' மூலம் பெரிய திரையில் இசையமைப்பாளராக அறிமுகமாகியிருக்கும் சின்னத்திரை இசையமைப்பாளர் தினா இப்படத்திற்குப் பின் 3 புதிய படங்களில் இசையமைக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

மலையாளத்தில் பெருவெற்றி பெற்ற 'தென்காசிப் பட்டணம்' தமிழில் தயாராக இருக்கிறது. இதில் அர்ஜுன்-இஷாகோபிகர் இணைந்து நடிக்க வுள்ளனர். மேலும் இருகதாநாயகர்களும் இப்படத்தில் நடிக்கவுள்ளனர்.

ஈஸ்வர்-மோனிஷா-தாமு-ஆர்.சுந்தர்ராஜன்
படம்: லவ் சேனல்

பிரசாந்த் படப் பிரச்சனைகள்

பிரசாந்த் நடிக்கும் படங்கள் என்றால் சொன்ன திகதிக்கு வெளி யாவதில்லை என்று பிரச்சனை சமீப காலமாகத் தோன்றிருக்கிறது. சில வேளைகளில் வருடக் கணக்கில் கூட அவரது படங்கள் வெளியாகாமல் உள்ளன.

'மஜனு', 'என்ன விலை அழகே' ஆகிய படங்கள் பலமாதமாகியும் இன்னமும் வெளியான பாடில்லை. 'பிரியாத வரம் வேண்டும்' அதோ வருகிறது, இதோ வருகிறது என்று இழுபட்டுத் தாமதமாகி வெளியானது. இதனால் அப்படத்தின் வெற்றியும் பாதிக்கப்பட்டது.

இப்போது 'விரும்புகிறேன்' படப் பிரச்சனை. நடிகை, தயாரிப்பாளர் ஆகியோரது இழுத்தடிப்புக்களால் தள்ளிக் கொண்டு போகிறது இப்படத்தின் வெளியீடு. இப்படம் நன்றாக வந்திருப்பதாக நல்ல பேச்சு இருந்தும்கூட வெளியீடு தள்ளிப்போனால் பிரசாந்தின் இன்னொரு தோல்விப்படமாக இது அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதற்கும் பிரசாந்த் காரணமாக இல்லாவிட்டாலும், இனிமேலாவது இப்படி யானவர்களின் படங்களில் நடிக்காமல் விடுவது அவருக்கு நல்லது.

நிறைவேறாத ஆசை

இயக்குநர் கரேஷ் கிருஷ்ணாவிடம் உதவியாளராக இருந்து, பின் தனியாகச் சென்று படமெடுக்க ஆரம்பித்தார் திருப்பதிசாமி. இவர் இயக்குந ராக அறிமுகமாகும் முதல் பட வாய்ப்பு இவருக்கு தெலுங்கில் தான் கிடைத்தது.

வெங்கடேஷ் நடித்த 'கணேஷ்' இவர் முதல் இயக்கத்தில் வெளியாகிப் பெரு வெற்றி பெற்றதோடு மாநில விருதுகளையும் வென்றது. அடுத்தது நாகார்ஜுன் நடித்த 'ஆஷாத்', அதுவும் பெருவெற்றி.

'கணேஷ்' இதே பெயரிலும், 'ஆஷாத்', 'குருஷேத்திரம்' என்ற பெயரிலும் தமிழில் மொழிமாற்றப்பட்டது. இருப்பினும் நேரடித் தமிழ்ப்படத்தை இயக்க வேண்டும் என்ற ஆசை விஜயகாந்த் நடித்திருக்கும் 'நரசிம்மா' படம் மூலம் தான் நிறைவேறியது. என்றாலும் இப்படம் வெளியாகி ஓடுவதைப் பார்க்க முடியாது செய்து விட்டது விதி.

ஆம், அண்மையில் கார் விபத்தில் அகாலமரணம் அடைந்து விட்டார் திருப்பதிசாமி.

டெண்டுல்கருக்கு இரசிகர் மன்றம்

இந்தியாவின் தமிழக மாநிலத்தில் சினிமா நடிக நடிகையர்க்கு இரசிகர் மன்றங்கள் வைப்பது ஒன்றும் புதிதல்ல. அண்மையில் தூத்துக்குடியில் உள்ள இளைஞர்கள் சிலர் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு இரசிகர் மன்றம் அமைத்துள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் 24ம் திகதி சச்சின் டெண்டுல்கரின் 28வது பிறந்த தினத்தன்று இவர்கள் 'டெண்டுல்கர் இரசிகர் மன்ற'த்தைத் திறந்து வைத்தனர்.

பிரட்மன் எழுதியவை

கிரிக்கெட் உலகின் சூப்பர் ஸ்டார் எனக் கருதப்படும் மறைந்த டொனால்ட் பிரட்மன் மொத்தம் 5 புத்தகங்கள் எழுதியுள்ளார். அவை:

1. டொன் பிரட்மன்ஸ் புக் ஒஃப் கிரிக்கெட் (1930)
2. ஹவ் ரூ பிளே கிரிக்கெட் (1935)
3. மை கிரிக்கெட்டிங் லைஃப் (1938)
4. ஃபேயார்வெல் ரூ கிரிக்கெட் (1950)
5. தி ஆர்ட் ஒஃப் கிரிக்கெட் (1958)

பேனா நண்பர்கள்

பெயர்:எஸ்.வசந்தகுமார்
வயது: 18
முகவரி:
ரத்துவத்தை
மேல்பிரிவு,
உக்குவளை.
பொழுது போக்கு:
ரீ.வி., பேனா நட்பு.

பெயர்: ஆர்.விஜிதா
வயது: 20
முகவரி:
அச்சங்குளம்,
நானாட்டான்.
பொழுது போக்கு:
வழமையானவை.

பெயர்:
எம்.ஜஸீர்
வயது: 20
முகவரி:
ஜாயா வீதி,
முதூர்-04.
பொழுது போக்கு:
பத்திரிகை, கிரிக்கெட்.

விடை கூறு

வெண்புறாவே...
வெண்புறாவே...
கொஞ்சம் நில்லு!
சொல்வதைக் கேளு
விடை கூறு.
❀❀
கை கால்களுடன்
மனதும் ஊனப்பட்ட
நாட்டின் எதிர்காலச்
சிகரங்கள்–ஒருபுறம்!
❀❀
ஒரு வேளை
நெல்லுச் சோறாவது
கிடைக்குமா என
ஏங்கும் அனாதைகள்–ஒருபுறம்!
❀❀
மழைக்கும் புயலுக்கும்
பயந்து கொட்டிலிலே
கண்ணீரும் கம்பளையுமாக
வாழும் அகதிகள்–ஒருபுறம்!
❀❀
மழைக்காலத்திலாவது
பாடசாலைப் பக்கம்
ஒதுங்க இடம் கிடைக்காதா
என ஏங்கும் பாலகர்கள்–ஒருபுறம்!
❀❀
நிம்மதியாக ஊர் தேசம்
சென்று வேலை தேடி
திரும்ப முடியுமா என்ற
பயத்தில் பட்டதாரிகள்–ஒருபுறம்!
❀❀
அடையாள அட்டையின்றி
சுதந்திரமாக நடமாட முடியாத
சுதந்திர நாட்டின்
பிரஜைகள்–ஒருபுறம்!
❀❀
யுத்தம் பற்றியே எழுதி
வெறுத்துப் போன
கலைமாமணிகள்–ஒருபுறம்!
❀❀
ஏய்... வெண்புறாவே!
இவையொன்றும் கவிதையல்ல;
விடியலைத் தேடும்
இவ்வொரு நெஞ்சத்தினதும்
இதயக் குமுறல்கள்!
கிட்டுமா சமாதானம்....?
கிடைக்குமா சாந்தி....?
வெண்புறாவே....
வெண்புறாவே....
கொஞ்சம் நில்லு
விடை கூறு!
❀❀

மு.ஜஹாஸ், புத்தளம்.

நாட்டு நடப்புக்கள்

ஓயாத அலைகளும்
ஓய்ந்துவிட்ட அக்கினிச் சுவாலையும்
எமக்குக் கற்றுத்தந்தது என்ன...?
✈✎
ஒருவேளைக் கஞ்சிக்கு
வயிறு காய்ந்த போது
பணத்திற்கு ஆசைப்பட்டு
தேசம் தேசம் என ஓடி வந்து
போராடிய இளசுகளின் உடல்கள்
எறிகணைக்குத் தாக்குப் பிடிக்காமல்
துடி துடித்து சல்லடையாய்ப் போயின.
✈✎
கல்வியைக் கைவிட்டு
ஆயுதத்தை ஏந்தி
முன்னரங்க பங்கர்களில் வெடி மருந்துகளுடன்
தங்கள் உடல்களை
தீச் சுவாலையுடன் சங்கமித்துக் கொண்ட
வருங்கால மொட்டுக்குள்....
✈✎
பாதுகாப்பு வரியால்
மக்களின் வாழ்க்கைச் செலவுகள்
காட்டுத்தீயாக எரிந்து கொண்டிருக்கின்றன.
✈✎
சமாதானம் சமாதானம்
எனும் தன் மானத்தை
விட்டுக் கொடுக்க முன் வராத
ஓர் ஆட்சி முறையில்
அப்பாவி மக்கள் சிக்கித் தவிக்கின்றனர்.
✈✎
சமாதானம் நோர்வேயிலா...?
இல்லவேயில்லை;
உள் வீட்டுச் சண்டை ஓயாத போது
வெளிவீட்டார் வந்து என்ன பயன்....?
✈✎
இன்று இவ்வொரு ஆத்மாவின் மூச்சிலும்
நிழலாடுகின்ற சமாதானம்
எப்போது வழி திறந்து
வாழ்வு தரும் என்பது
புரியாத புதிர்!

எம். முகமட் ஜலீஸ், சவூதி அரேபியா.

தேன் கிண்ணம்

விதிக்குக்கூட இரக்கமில்லையே!

ஊரிருக்கு உறவிருக்கு
உண்பதற்கு வழியில்லையே–எனக்கு
பேரிருக்கு புகழிருக்கு
பிச்சை கேட்க முடியவில்லையே!
❀❀
வீடிருக்குப் பாயிருக்கு
விழிகள்மூட தூக்கமில்லையே–சவக்
காடிருக்குப் பேயிருக்கு
கண்ணைமூட மார்க்கமில்லையே!
❀❀
ஆறிருக்கு குளமிருக்கு
அவற்றிவிழ துணிச்சலில்லையே–கோயில்
தேரிருக்குத் தெருவிருக்கு
தெய்வத்தை நான் காணவில்லையே!
❀❀
வாயிருக்கு நாவிருக்கு
வார்த்தைபேசச் சக்தியில்லையே–நூறு
நோயிருக்கு நொடியிருக்கு
நொந்து அழ யாருமில்லையே!
❀❀
மனைவியுண்டு மக்களுண்டு
மகிழ்ச்சி வாழ்வில் வந்ததில்லையே–வினை
விதைத்தது யார்? அறுப்பதுயார்?
விதிக்குக்கூட இரக்கமில்லையே!!

கவிஞர் செ.குணரத்தினம்.

இரங்குமா உன் இதயம்

என்னவளே
இன்னும் ஏன்
அமாவாசையாய்
இருக்கிறாய்....?
♥❀
வெளிச்சத்தில்
வர விருப்பமில்லையா?
அல்லது
முடியவில்லையா?
♥❀
உன்னால்
நான் படும்
வேதனை உனக்கு
கூறித்தான்
தெரிய வேண்டுமா?
♥❀
முள் இல்லா
ரோஜா போல்!
காதல் இல்லாத
வாழ்வும் உண்டா...?
♥❀
நீயும் கொஞ்சம்
சிந்தித்துப்பார்!
நான் சொல்வது
புரியும் உனக்கு!
♥❀
இரவுக்கு நிலவு
எவ்வளவு அவசியமோ!
அதற்கு மேல்
எனக்கு நீ!
♥❀
நான் இவியம் வரைவதில்லை....
ஏன் தெரியுமா...?
உன்னைவிட...
அழகாய் வந்திடுமோ
என்ற பயத்தால்!
♥❀
பகலில்
தொலைத்த
என் முகவரியை
இரவில் தேடவைக்காதே!!

அஜந்தகுமார், அக்கரைப்பற்று.

சின்னச் சின்ன விஷயங்களிலும் கவனம் தேவை

வெற்றி எப்பொழுதும் நம்மிடமே தங்கி இருக்க வேண்டுமானால், சின்ன விஷயங்களில் கூட மிகவும் அக்கறை கொண்டு செயல்பட வேண்டும்.

அற்பமான விஷயம் தானே என்று அலட்சியமாக இருந்து விடக்கூடாது. காரணம் அதில் தான் வெற்றி அடங்கி இருக்கிறது.

சின்ன விஷயம் தானே, சில நிமிடங்கள் தானே என்று அக்கறை காட்டாமல் இருந்தால், நமக்கும் வெற்றிக்கும் நீண்ட இடைவெளி ஏற்பட்டு விடும்.

ஆயிரக்கணக்கான டன் எடையுள்ள கப்பலில் சிறு ஓட்டை ஏற்பட்டு விட்டால் அது கப்பலையே கடலில் மூழ்கும் படி செய்து விடும்.

வண்டிச் சக்கரத்தின் கடை ஆணி கழன்று விட்டால் வண்டியே சாய்ந்து போகும். சிறிய ஆணி பெரிய வண்டியையே கவிழ்த்து விடும் போது அதனுடைய முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடியும்.

இப்படி ஒவ்வொரு பொருளிலும் முக்கியத்தன்மை இருப்பது போலவே நம்முடைய வாழ்விலும், அணுபோன்ற சிறிய விஷயங்களிலும் வெற்றி இருக்கிறது.

சிறிய காயமே உயிருக்கு உலை வைத்து விடும். காலில் குத்திய துரும்பே பெரிய நோயை உண்டாக்கும்.

இருமல் தானே என்று அலட்சியமாக இருந்து விட்டால் ஊசியால் எடுக்க வேண்டியதை கோடரி கொண்டு எடுக்க இயலாதபடி கொடிய நோயின் வளர்ச்சிக்கு வழி அமைத்துக் கொடுத்து விடும்.

தகுந்த நேரத்தில் டாக்டரிடம் செல்லாத படியினால் உயிரை இழந்தவர்கள் பலர் இருப்பதை அன்றாட வாழ்வில் காணமுடியும்.

நாம் பெரிய விஷயங்களையே தேடி அலைகிறோம். ஆனால் நம் கண் முன்னே இருந்து கவனத்தைக் கவருகின்ற சிறிய விஷயங்களே பெரிய கஷ்டத்தை உண்டு பண்ணுகின்றன என்பதை மறந்து விடுகிறோம். அறிந்து கொள்ளாமலும் இருக்கிறோம்.

வீடுகளை இடி மின்னல் தாக்காதபடி காந்த இரும்பை வைக்கிறோம். இடி தாங்கி இருக்கும் இடத்திலே சிறிதாக முளைத்திருக்கும் அரசச் செடியை கிள்ளி எறிவதில்லை.

அதன் பயன் நாளடைவில் செடி பெரியதாகி சுவரையே விரிசல் விடும்படி செய்து விடுகிறது.

நாம் அற்பமானது என்று கற்பனை செய்வது எவ்வளவு பெரிய சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்..

எனவே தான் பாரசீகப் பழமொழி இவ்விதம் கூறுகிறது: 'இப்பொழுது சிறிய விஷயங்களைச் செய். நாளடைவில் பெரிய காரியங்கள் உன்னைத் தேடி வந்து நிற்கும்.'

அதி மேதை என்பவர் யாரென்றால் சிறிய விஷயத்தின்மீது தன்னுடைய முழு கவனத்தையும் செலுத்துபவர்தான்.

நாம் அதிமேதை என்று கருதி சிறிய விஷயங்களைக் கவனிக்காமல் அலட்சியம் செய்து விடுவதால் நாம் எதிலுமே வெற்றி பெறாமல் இருக்கிறோம்.

எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் மிகவும் கவனத்துடன் வைத்து முன்னுக்கு வந்தவர்கள்தான் செய்தவை திருந்தச் செய்பவர்கள் என்பதனை உணர்ந்து கொண்டு, சின்னஞ்சிறு விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, முழுமையாக காரியத்தை முடித்து என்றும் வெற்றி வீரர்களாகவே இருப்போம்.

இந்தவாரம் உங்கள் பலன்

24.06.2001 தொடங்கி 30.06.2001வரை

மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) செய்தொழில் நன்மையும், முயற்சிகளில் வெற்றியும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வுகள் வந்தடையும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த தடைகள், விலகும். விவசாயிகள், வியாபாரிகள், முதலீடுகளால், இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

இடபம்:
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) குடும்பத்தில் இருந்து வந்த கஷ்ட நிலை தீரும். பணவரு வாய் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மை தரும்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

மிதுனம்:
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன் முக்கால்) எதிலும் விழிப்புடன் இருப்பது நல்லது. பணவருவாய் தாமதமாகும். குடும்பத்தில் பிரச்சனை தோன்றி மறையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளால் நன்மை கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 05.

கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழிலிலும், குடும்பத்திலும்இருந்து வந்த பிரச்சனைகள் தீரும். வார இறுதியில் மன மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பொறுமையுடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள், குறைந்த இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

சிங்கம்:
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழிலிலும், குடும்பத்திலும், நன்மைகள் ஏற்படும். பொருளாதார சிறப்புக்கு வழியுண்டாகும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த பலாபலன்கள் வந்து சேரும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 03.

கன்னி:
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் நிலையில் முன்னேற்றம், குடும்பத்தில் மன மகிழ்ச்சியும் ஏற்படும். உத்தியோகத்தில் சிலருக்கு பதவி உயர்வுகள் வந்தடையும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

சோதிட மாமணி தில்லை

துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து, முன்முக்கால்) தொழில் நிலை கஷ்டங்கள் தீர்ந்து மனதில் சந்தோஷம் நிலவும். குடும்பத்தில் மனமகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்கள், நன்மையடைவர். மாணவர்கள், கல்வியில் உயர்வு பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) வெளியிட பிரயாணங்களிலும், போக்கு வரத்திலும் அவதானம் தேவை. பணத்தட்டுப்பாடு நிலவும். உத்தியோகத்தில் உள்ளோர், சில சங்கடங்களை எதிர்நோக்குவர். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை தோன்றும். விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

கிரக நிலை

மிதுனம் - சூரியன், வியாழன், இராகு
தனு - செவ்வாய், கேது
மேடம் - வெள்ளி, புதன், சனி

கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் சந்திரன் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

தனு:
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) காரியனுகூலம், பணவரவு, குடும்ப மகிழ்ச்சி என்பன சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்கள் உயர்வடைவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள் வியாபாரிகள், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 02.

மகரம்:
(உத்தராடத்து பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை) குடும்பத்தில் மகிழ்ச்சியும் பணவரவும் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளோர் எதிர்பார்த்த உயர்வுகள் வந்தடையும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

கும்பம்:
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் கஷ்டங்கள் தீர்ந்து, பொருளாதாரம் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 03.

மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி) ரேவதிதொழில் நிலையில் பிரச்சனைகள் தோன்றும். பொருளாதாரம் மந்த நிலையடையும். உத்தியோகஸ்தர்கள் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் குறைவாகக் கிடைக்கும்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 01.

அழகுப் பசியா? இதோ உணவு!

அழகு சாதனப் பொருட்கள் என்று சந்தையில் கண்ட கண்ட பொருட்களை வாங்கிப் பணத்துடன் அழகையும் விரயம் செய்து கொள்ளாமல் இருக்க இதோ சில அருமையான அழகுச் சாதனங்கள்: இவை உணவுப் பண்டங்களும் கூட.

அப்பிள்:

பிசுபிசுப்புள்ள சருமத்திற்கு ஏற்றது. இதை முகப் பசை (Face Mask) ஆகப் பயன்படுத்தலாம்.

பாதாம்:

பாதாம் எண்ணெய் உலர்ந்த சருமத்திற்கு மிக நல்லது. முடியைப் பளபளப்பாக்க வல்லது. பாதாம் தோலைக் கத்தியால் உரித்து உடலில் தடவிக் கொள்ளலாம்.

மாங்காய்:

இதுவும் உலர்ந்த சருமத்திற்கு ஏற்றது. பழத்தைச் சாப்பிட்டு விட்டு சதைப்பற்றுடன் கூடிய கொட்டையைச் சருமத்தில் தேய்த்துக் கொள்ளலாம்.

ப்ார்லி:

பார்லி பவுடரை இரண்டு தேக்கரண்டி எலுமிச்சைச்சாறு, கொஞ்சம் பால் இவற்றுடன் கலந்து முகத்திற்கு மாஸ்க் போட்டுக்கொள்ளலாம்.

முட்டை:

வெண்கரு சருமத்தை இறுக்கும். தளர்ச்சியை நீக்கும். மஞ்சட்கரு ஊட்டமளிக்கும். பாதாம் எண்ணெய், கிளறிய பால் இவற்றுடன் கலந்து பயன்படுத்தலாம். முட்டையைத் தலைக்கு வைத்துக் குளித்தால் முடி படியும், பளபளப்பாகும்.

மோர்:

பாதாம் பருப்புடன் மோரைக் கலந்து பிசைந்து, கலவையை முகத்தில் பூசிக் கொண்டு 15 நிமிடங்கள் ஊறவிட்டு முகத்தைக் கழுவ, முகம் பிரகாசமாக இருக்கும்.

தேன்:

சுருக்கம் விழாமல் இருக்கவும் இளமை காக்கவும் தேன் சிறந்த உணவு. சிறந்த அழகுசாதனம். இதை அப்படியே முகத்தில் பூசிக்கொண்டு 15 நிமிடம் காய விடலாம். பிறகு வெதுவெதுப்பான நீரில் கழுவி விட வேண்டும்.

எலுமிச்சை:

கருத்த மேனியை வெளுப்பாக்க எலுமிச்சை கண்கண்ட மருந்து. ஆனால் உலர்ந்த சருமத்திற்கு இது உதவாது. எண்ணெய்ப்பசையுள்ள சருமம் கொண்டவர்கள் எலுமிச்சம் பழச்சாற்றைப் பூசிக்கொண்டு ஊறவிட்டுக் குளிக்கலாம்.

தையல் குறிப்புக்கள்

தையல் இயந்திரத்தில் எப்போதும் ஒரு காந்தத்துண்டை வைத்திருங்கள். ஆங்காங்கே கிடக்கும் ஊசிகளை எடுக்க வசதியாக இருக்கும்.

கத்தரிக்கோல் மழுங்கி விட்டதா? கவலையே வேண்டாம். கத்தரிக் கோலைக் கொண்டு, உப்புக் காகிதத்தை வெட்டினால் மீண்டும் கூர்மையாகி விடும்.

ஊசியில் நூலைக் கோர்ப்பதற்கு முன், நூலின் முனையை நகப் பொலிஷில் நனைத்துப் பின் கோர்த்தால், மிக எளிதாக நூல் ஊசியில் நுழையும்.

நீண்ட நேரம் தைக்க வேண்டிய வேலை உள்ளதா? கையை ஒரு குஷன் தலையணையின் மேல் வைத்துக் கொண்டு தையுங்கள். அத்துடன் அவ்வப்போது, மரங்களையோ ஜன்னலையோ பார்த்துக் கொண்டால் கண்கள் களைப்படையாது.

உங்கள் உடைகளை நீங்களே தைத்துக் கொள்கிறீர்களா? துணி வாங்கும் போதே சிறிது அதிகமாக வாங்கிவிட்டால், அதற்குப் பொருத்தமாகக் கைக்குட்டையோ, தலையில் வைத்துக் கொள்ளும் ரப்பர் பாண்டோ செய்து கொள்ளலாம்.

தையல் இயந்திரத்தில் உள்ள பெல்ட் நீளமாக இருந்தால், அதனைக் குளிர்ந்த நீரில் அரைமணிநேரம் ஊறவைத்துப் பின்னர் வெய்யிலில் காய வைத்தால் சரியாகி விடும்.

தடிமனான துணிகளைத் தைப்பதற்கு முன், தையல் இயந்திர ஊசியில் சிறிது சவர்க்காரம் தடவினால் ஊசி உடைவதைத் தடுக்கலாம். ■

பட்டுச் சேலை பரிசுப் போட்டி

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை JR

பெயர்:.....

முகவரி:.....

.....

தொழில்:.....

கையொப்பம்:.....

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 30-06-2001

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
நிந்தவூர் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஏ.ஆர். பாத்திமா ஷபா, 435, ஹாஜியார் வீதி, நிந்தவூர்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

அவள் பெயர் 'பெண் சாத்தான்'

'பெண் சாத்தான்' என்று கேலிப் பெயர் சூட்டும் அளவுக்கு, அமெரிக்காவை பத்தாண்டுக் காலம் அதிர வைத்துக் கொண்டிருந்தாள் விக்டோரியா.

தெருவில் பழச்சாறும், மூலிகை மருந்துகளும் விற்றுக் கொண்டிருந்த கால்ஃபின் என்பவரின் மகள் விக்டோரியா. அவள் தங்கை டென்னஸி.

இளம் வயது அழகிகளான இருவரும் தங்களுக்கு ஆவி உலகத்திலிருந்து குரல்கள் கேட்பதாக அடிக்கடி சொல்லவே, இது ஒரு

நல்ல பிஸினஸாக இருக்கும் என்று தீர்மானித்தார் கால்ஃபின். கலிஃபோர்னியாவுக்கு குடும்பம் குடியேறியது.

'தியான'த்தில் ஆழ்ந்து குறிசொல்லியும், காந்த சக்தி கொண்ட தாயத்துக்களை விற்பதிலும் நல்ல வருமானம் கிடைத்தது விக்டோரியாவுக்கு. அவளும், அவள் தங்கையும் அழகிகளாக இருந்ததால் ஆண்கள் கூட்டம் எப்போதும் மொய்த்தது.

குறிப்பாக, விக்டோரியாவின் ரோஜாக் கன்னத்திலும், நீலக் கண்களிலும் மயங்காதவர் இல்லை என்றாயிற்று. உட்ஹல் என்ற இளைஞன் அவளை மணந்து கொண்டான்.

ஆனால் விக்டோரியாவின் விசித்திரப் போக்கிலும், புரட்சிகரமான நடவடிக்கைகளிலும் வெறுப்புக் கொண்டவனாக, கொஞ்ச நாளில் குடிகாரனாக மாறினான் உட்ஹல்.

பண்டைய கிரேக்க நாட்டின் தத்துவஞானி, டெமாஸ்தனிஸ் தன்னுடன் அடிக்கடி பேசுவதாயும் அவரே தனக்கு வழிகாட்டுவதாயும் சொல்லி, 'சமாதி' நிலையில் ஆரூடமும், குறியும் கூறிவந்தாள் விக்டோரியா.

ஒரு நாள் அவளிடம் ஆரூடம் கேட்க வந்தான் ஜேம்ஸ் பிளட் என்பவன். அவனிடம் விக்டோரியா மனம் பறிகொடுத்தாள். தாங்கள் இருவரும் சேர்ந்து வாழ்க்கை நடத்த வேண்டும் என்று 'ஆவிகள்' கூறுவதாக விக்டோரியா சொல்ல, அவனும் நம்பினான்.

இவளும் மணமானவள். அவனும் மணமானவன். இருவருமே தங்கள் குடும்பங்களை விட்டுவிட்டு வெளியூருக்கு ஓடிவிட்டார்கள். அவள் தங்கை டென்னஸியும் கூடவே சென்றாள்.

மூவரும் சேர்ந்து நடத்திய கட்டுப்பாடற்ற வாழ்க்கைக்கு மக்களிடையே ஆதரவும் கிடைத்தது; எதிர்ப்பும் கிளம்பியது. 'பெண் உரிமை' என்றபெயரில் பயங்கரமான கருத்துக்களை வெளியிட்டாள் விக்டோரியா.

'எவ்வளவு பேருடன் வேண்டுமானாலும் பெண்கள் வாழ்க்கை நடத்தலாம், கருச்சிதைவு செய்து கொள்ளலாம், விபச்சாரம் செய்ய உரிமை வேண்டும்' என்றெல்லாம் பிரச்சாரம் செய்வதற்காக ஒரு பத்திரிகை நடத்தினாள்.

அவளுடைய புரட்சிக் கருத்துக்களை அறிவதற்காக எல்லாரும் அதை வாங்கினார்கள். பத்திரிகை பிரமாதமாக விற்பனை ஆயிற்று. எழுதியதோடுகூடப் பொதுக் கூட்டங்களிலும் சொற்பொழிவு ஆற்றினாள் விக்டோரியா.

'பெண் சாத்தான்' என்று அவள் எதிரிகள் அவளுக்குப் பட்டம் சூட்டினார்கள்.

அமெரிக்காவின் மிகப் பெரிய கோடீஸ்வரரான வாண்டர்பில்ட் நோய்வாய்ப்பட்டபோது, விக்டோரியாவையும், டென்னஸியையும் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். ஆவிகளிடம் பேசி வைத்தியம் செய்வதாக விக்டோரியா கூறினாள்.

வைத்தியம் பலிக்கவில்லை.

ஆனால், சகோதரிகளின் அழகில் மயங்கி அவர்களை தன் ஆசை நாயகிகளாக அமர்த்திக் கொண்டார் வாண்டர்பில்ட். அவருக்கு ஷேர் மார்க்கெட் சூதாட்டங்களை சொல்லித் தந்தாள் விக்டோரியா.

ஆவிகள் தனக்குக் குறிப்புத் தருவதாகச் சொன்னாள். அவை எதுவும் பலிக்கவில்லை. ஆனால், வாண்டர்பில்ட் பல ஷேர் மார்க்கெட் வித்தைகளை விக்டோரியாவுக்கு கற்றுத்

தந்தார். புகழ்பெற்ற வர்த்தகப் பகுதியான வால் ஸ்ட்ரீட்டில் விக்டோரியாவும், டென்னஸியும் பங்கு மார்க்கெட் அலுவலகம் திறந்தார்கள்.

அமெரிக்காவில் முதன் முதல் பங்குச் சந்தை விற்பனையாளராகத் திகழ்ந்த பெண், விக்டோரியாதான். பெண் உரிமைகளைப் பரப்புவதற்காக அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குக்கூட போட்டியிடப் போவதாக அறிவித்தாள் விக்டோரியா.

ஆனால், குடும்பத்தில் குழப்பம் தலை தூக்கியது. முதல் கணவன் உட்ஹெல்லை விவாகரத்து செய்து, பிளட்டை மணந்து குடும்பம் நடத்தி வந்தாள் விக்டோரியா. ஆனால் ஒருநாள் குடிகாரனாக, பிச்சைக்காரனாக அவளிடம் வந்து சேர்ந்தான் உட்ஹல். அவனையும் சேர்த்துக் கொண்டாள் விக்டோரியா.

விக்டோரியாவின் தாய்க்கு ஆரம்பம் முதல், பிளட்டைப் பிடிக்காது. அவன் தன்னை அடித்துத் துன்புறுத்தியதாக வழக்குப் போட்டாள். ஒரே சமயத்தில் இரண்டு கணவனுடன் வாழ்கிறாள் என்று நீதிமன்றத்தில் சாட்சியம் சொன்னாள். அந்த வழக்கு பிசு பிசுத்து விட்டது என்றாலும், 'ஒரு பெண் எத்தனை ஆணுடன் வேண்டுமானாலும் வாழலாம்' என்று பகிரங்கமாக விக்டோரியா பிரச்சாரம் செய்ததால், பல அறிஞர்கள் அவளிடம் மையல் கொண்டார்கள்.

அவர்களில் ஒருவரின் மனைவி, விக்டோரியா மீது வழக்குத் தொடுத்தாள், தன் கணவனை அவள் கவர்ந்தாள் என்று. விக்டோரியா சில நாட்கள் சிறையில் இருக்க நேரிட்டது. அவளுடைய பங்குச் சந்தை வர்த்தகம் நலிந்தது.

ஆனால், 'சகல போகங்களுடன் நீ சீமாட்டியாக வாழ்வாய்' என்று டெமாஸ்தனிஸின் ஆவி அவளுக்கு அடிக்கடி சொல்லி வந்தது வீணாகவில்லை.

கோடீஸ்வரர் வாண்டர்பில்ட் இறந்து போனார். அவருடைய திரண்ட சொத்தில் தனக்கும் பங்கு உண்டு என்று விக்டோரியா சொல்ல ஆரம்பித்தாள்.

வாண்டர்பில்ட்டின் வாரிசுகள் அவள் வாயை அடைப்பதற்காக பெரும் தொகை கொடுத்து சமரசம் செய்து கொண்டார்கள். கூடவே அவள் அமெரிக்காவை விட்டு இங்கிலாந்துக்குச் சென்று விட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள்.

இங்கிலாந்தை அடைந்ததும் விக்டோரியா புதுப்பிறவி எடுத்தாள். 'திருமணம் என்பது புனிதமானது' என்றும், 'இறைவன் கொடுத்த தேகத்தைப் பெண்கள் மாசுபடுத்தக் கூடாது' என்றும் பிரச்சாரம் செய்யத் தொடங்கினாள்!

அவளுடைய பேச்சில் மயங்கிய மார்ட்டின் என்ற பாங்க் அதிபர், தன் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி விக்டோரியாவை மணந்து கொண்டார். அவருக்கு வயது முப்பத்தாறு. விக்டோரியாவுக்கு வயது நாற்பத்தைந்து.

அடுத்த பதினெட்டு ஆண்டு காலம் கண்ணியமாக, கௌரவமாக இல்லறம் நடத்தினாள் விக்டோரியா. அவள் தங்கை டென்னஸியும் ஒரு பிரபுவை மணந்தாள்.

65 வயதானபோது அவளால் சும்மா இருக்க முடியவில்லை. தவறான வாழ்க்கையினால் பாழான பெண்களுக்காக ஒரு விடுதி நிறுவினாள். 'முற்போக்கு' கருத்துக்களை பிரச்சாரம் செய்ய ஒரு பள்ளி தொடங்கினாள். ஆவியுலக ஆராய்ச்சிகளுக்காக நிதிகள் வழங்கினாள்.

'படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தால்தான் மரணம் வருகிறது' என்று ஒரு விசித்திரமான கருத்தைக் கொண்டிருந்தாள் விக்டோரியா.

ஆகவே படுக்கையில் படுத்துத் தூங்குவது கிடையாது. நான்கு வருஷ காலம் நாற்காலியில் உட்கார்ந்தபடியே தூங்கினாள். ஆனால், ஒரு நாள் காலை அவளை வேலைக்காரி பார்த்தபோது உயிர் பிரிந்திருந்தது. 1927ம் ஆண்டு ஜூன் ஒன்பதாம் திகதி விக்டோரியா காலமானாள். ■

-மார்க்ரெட் நிக்லஸ்-

தமிழில்:

ரா.கி.ரங்கராஜன்

பாப்பா முரசு சிறுகதை

யாருக்கும் தெரியாமல்...

ஒரு மகானிடம் பல மாணவர்கள் கல்வி பயின்றார்கள்.

இலக்கியம், ஆன்மீகம், கடவுள் பக்தி போன்றவற்றை மாணவர்களுக்கு பாடங்களாக போதித்தார் குஸ்ரு.

ஒரு சமயம் தனது மாணவர்களின் அறிவுத்திறனை சோதிக்க நினைத்த மகான், மாணவர்கள் அனைவரையும் அழைத்தார்.

அவரிடம் படிக்கின்ற மாணவர்களில் ஒரே ஒருவனை தவிர மற்ற அனைவருமே பெரும் செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகள்.

ராஜப் பிரதிநிதிகள் வீட்டுப் பிள்ளைகள். அமைச்சர்கள் வீட்டு பிள்ளைகள், நிலச்சுவான்தார்கள் வீட்டு பிள்ளைகள், இராணுவ தளபதிகள் வீட்டு பிள்ளைகள், பெரும் வணிகர்கள் வீட்டு பிள்ளைகள் என்று மிகவும் செழிப்பான வீடுகளின் பிள்ளைகளே அங்கு கல்வி கற்றனர். ஒரே ஒருவனை தவிர.

அந்த ஒருவன்-

மிகவும் ஏழ்மை நிலையிலுள்ளள ஒரு விவசாய கூலியின் மகன் அவன். அவன் பெயர் அரீஷ். சிறந்த அறிவாளி.

அரீஷின் கல்வி நுண்ணறிவுகளை கண்டு வியந்த மகான். அவனை தன் மாணவர்களுள் ஒருவனாக ஏற்று அவனுக்கு கல்வி போதித்தார்.

அங்கு படிக்கும் அத்தனை மாணவர்களையும் விட, அரீஷே எல்லா விஷயங்களிலும் முதல் மாணவனாக திகழ்ந்தான்.

மகான், தன் முன்னே கூடியிருக்கும் அத்தனை மாணவர்களையும் பார்த்தார். பிறகு, ஆளுக்கு ஒரு வாழைப்பழத்தை கொடுத்தார்.

"நன்றாக கவனியுங்கள். இந்த வாழைப் பழத்தை யாரும் பார்க்காதாடி நீங்கள் சாப்பிட்டு விட்டு வரவேண்டும், இன்றைய பரீட்சை இதுதான். வெற்றி தோல்வியை பிறகு சொல்கிறேன்," என்றார்.

மாணவர்கள் அனைவரும் வாழைப் பழத்தோடு, யாரும் பார்க்காத மறைவிடங்களைத் தேடி ஓடினார்கள். ஒரு சிலர் பெரிய பெரிய மரங்களின் பின்னே போய் மறைந்தார்கள். ஒரு சிலர் அடர்ந்த புதர்களை நோக்கி ஓடினார்கள். சிலர் வாசகசாலை மற்றும் விடுதியின் தூண்களின் மறைவில் போய் பதுங்கினார்கள்..

ஆனால்-

அரீஷ் மட்டும் எந்த மறைவிடத்தை தேடியும் ஓடாமல், கையில் வாழைப்பழத்தை பிடித்தபடி, ஆடாமல், அசையாமல் அந்த இடத்திலேயே ஆணி அடித்தது போல் நின்றான்.

அவனை ஆச்சரியத்தோடு பார்த்த மகன், "அரீஷ்! நீ ஏன் மறைவிடத்தை தேடிப் போகாமல் இங்கேயே நின்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

உடனே அரீஷ், "ஐயா! உலகில் மனிதர்கள் இல்லாத இடம் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், கடவுள் இல்லாத இடம் கிடையாதே. அதனால் இந்த வாழைப் பழத்தை யாருக்கும் தெரியாமல் மறைவாக எப்படி சாப்பிட முடியும். கடவுள் பார்ப்பார் இல்லையா? அதனால் தான் யோசனையோடு நின்று கொண்டிருக்கிறேன்," என்றான்.

அந்த பதிலை கேட்டு அகமகிழ்ந்த மகான், "அரீஷ்! அறிவில் உன்னை மிஞ்ச ஆள் இல்லை!" என்று கூறி அவனை நிறைய பாராட்டினார்.

மறைவிடங்களில் வாழைப்பழத்தை தின்றுவிட்டு அங்கே வந்த மற்றமாணவர்கள் அனைவரும் அவர்கள் பேசியதை கேட்டார்கள்.

அரீஷ் புரிந்து வைத்திருக்கின்ற இந்த சாதாரண விஷயம் நமக்கு தெரியாமல் போய்விட்டதே என்று நினைத்து தலை குனிந்தார்கள்.

ஆனால் மகான் அவர்களை திட்டவில்லை.

மாறாக, "ஒவ்வொரு தோல்வியும் உங்களுக்கு அனுபவப் பாடம். நிறையப் படியுங்கள். நிறைய சிந்தியுங்கள். அடுத்த வெற்றி வாய்ப்பு நம்முடையது தான் என்று நினைத்து ஒவ்வொருவரும் செயல்படுங்கள். வெற்றி உங்களுடையதே," என்றார்.

அதைக்கேட்ட மாணவர்கள் அனைவரும் சந்தோஷமடைந்தனர்.



மறைந்திருக்கும் ஓவியத்தைக்கண்டு பிடிக்க வேண்டுமா? 1முதல் 47 வரையுள்ள எண்களுக்குக் கோடு இழுத்துப் பாருங்கள்.



சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **30.06.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **400**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 398

பரிசுக்குரியவர்:
அசானா இல்மா அம்சிக்,
புனித தோமையார் பெண்கள் பாடசாலை, மாத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

ஏ. டமரி சிரோஜினி, பம்பரக்கலை, நுவரெலியா.	ஏ. ஆர். பதுருதீன், மளிந்துறை, கின்னியா-04.
எம்.ஐ.ரிம்ஸானா பேகம், இக்றா வித்தியாலயம், காங்கேயனோடை.	சி. வசந்ராஜா, முகத்துவாரம் இந்துக் கல்லூரி கொழும்பு-15.
பாத்திமா றுஸ்கா நளீர், மத்திய கல்லூரி(தேசிய பாடசாலை)மூதூர்.	உ. சசி சுதாஜினி, புனி.பிரான்சிஸ் சவேரியார் ம.வி.திருகோணமலை.
எஸ். டிலுக்ஷிகா, இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ.	எம். யுவனி, ரோயல் ஆங்கில பாடசாலை, மாத்தளை.
கே. டிலானி, பு.அ. மகளிர் மகா வித்தியாலயம், கொச்சிக்கடை.	வே. சண்முகவேல், மட்/புனித வளனார் வித்., தன்னாமுனை.

பருவ மங்கையர் எழவர்

1. பேதை - (வயது 5-7)
2. பெதும்பை - (வயது 8-11)
3. மங்கை - (வயது 12-13)
4. மடந்தை - (வயது 14-19)
5. அரிவை - (வயது 20-25)
6. தெரிவை - (வயது 26-31)
7. பேரிளம் பெண் - (வயது 32-40)

ஆண்பாற் பிள்ளைத் தமிழ்ப்பருவம் பத்து

1. காப்பு
2. செங்கீரை
3. தால்
4. சப்பாணி
5. முத்தம்
6. வருகை
7. அம்புலி
8. சிறுபறை
9. சிற்றில் சிதைத்தல்
10. சிறுதேருருட்டல்

பெண்பாற்பிள்ளைத் தமிழ்ப் பருவம்

1. காப்பு
2. செங்கீரை
3. தால்
4. சப்பாணி
5. முத்தம்
6. வாரானை
7. ஊசல்
8. அம்புலி
9. கழங்கு
10. அம்மானை

சப்தரிஷிகள்

1. அந்திரி 2. ஆங்கீரசர் 3. கிருது
4. மரீசி 5. புலகர் 6. புலஸ்தியர்
7. வசிஷ்டர்

பொழுதுகள்

சித்திரையும், வைகாசியும் - இளவேனிற்காலம்.
ஆனியும், ஆடியும்- முதுவேனிற்காலம்.
ஆவணியும், புரட்டாசியும்- கார்காலம்.
ஐப்பசியும், கார்த்திகையும்- குளிர்காலம்.
மார்கழியும், தையும்- முன்பனிக்காலம்.
மாசியும், பங்குனியும்-பின்பனிக்காலம்.

தொகுப்பு: மு.சக்திலேந்திரன்
கொழும்பு-12.

மேற்கத்திய ஊடுருவல்



← மேற்கத்திய கலாசார ஊடுருவல் பல நாடுகளை எந்த மாதிரிப் பாதித்துள்ளது என்பதற்கு உதாரணங்கள் இவை:

மகாபாரதப் போரின்போது, பகல் நேரத்தில் மட்டுமே போரிடுவார்கள். பொழுது சாய்ந்து விட்டால் போர் ஆயுதங்களை யாரும் தொடமாட்டார்கள். இதேபோல் தயார் நிலையில் இல்லாத எதிரிகளுடனும் மோத மாட்டார்கள். இதே போர் நெறிமுறைகள் இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக இருந்தன. கிரேக்கர்கள் இந்தியாவிற்குள் ஊடுருவிய பின் இந்த நெறிமுறைகள் அடியோடு மாறிப்போயிட்டன.

→ ஐரோப்பியர்கள் மெக்ஸிகோவுக்குள் நுழைவதற்கு முன்பாக அங்கு இருந்தவர்களிடம் பொய் பேசும் பழக்கம் மிக மிக அரிதாக இருந்தது. எதிரிகளைப் பயமுறுத்துவதற்காக அட்டை கத்திகளையே பயன்படுத்தினார்கள். ஆனால் ஐரோப்பியர்கள் அங்கு போனவுடன் பொய் பேசுவதையும் தங்களுக்குள் அடித்துக் கொள்வதையும் பழகினர்.

← தனிதி தீவில் வெள்ளைக்காரர்களின் வருகை உடல் நலக்குறைவை உருவாக்கி விட்டது. வெள்ளையர்கள் நுழைய முன் தஹிதி தீவு மக்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்துள்ளனர். பெரியம்மை, வயிற்றுப் போக்கு, பால்வினை நோய்கள் அவர்களிடம் இருக்கவில்லை. ஆனால் வெள்ளையர்கள் அங்கு சென்றபின் மேற்சொன்ன எல்லா நோய்களும் தீவில் பழங்குடி மக்களிடம் வந்து சேர்ந்து விட்டன. அத்துடன் குடிப்பழக்கமும் பரவியது.

தப்பிக்கும் தந்திரம்

சில புத்திசாலிப் பிராணிகள் தங்களது எதிரிகளால் வரும் ஆபத்தைச் சக பிராணிகளுக்கு ஏதாவது ஒரு விதத்தில் தெரிவித்து விடுகின்றன. தண்ணீரில் வாழும் பீவர் என்ற பிராணி, தனது வாலால் தண்ணீரில் அடித்து எதிரியின் அபாயத்தை உடனடியாக 'சிக்னல்' போல் அறிவித்துத் தந்திரமாகத் தப்ப வைக்கிறது.

மர்மதேசி

10

சிங்கர்லால் தப்பறியும்

"அதை விளக்கவே இல்லை. இல்லையா? உங்களுக்கு அறிவு மிக மிகுதி. உலகத்தில் இன்று உங்கள் மூளை இன்ஷூர் செய்யப்பட்டிருக்கும் அளவுக்கு வேறு எவருடைய மூளையும் இன்ஷூர் செய்யப்படவில்லை. இது எனக்குத் தெரியும். ஆகையால், நீங்கள் எளிதில் இந்த ஆராய்ச்சியின் பயனைக் கண்டு கொண்டிருப்பீர்கள் என்று எண்ணினேன்" என்றார் புரபஸர்.

"என்னுடைய முடிவு இருக்கட்டும். உண்மையை சொல்லுங்கள்?" என்றார் சங்கர்லால்,

புரபஸர் என்ன சொல்லப்போகிறார் என்பது அவருக்குத் தெரியும். என்றாலும், அதை அவர் உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினார்.

"நான் கண்டுபிடித்திருக்கும் ஆராய்ச்சிகளின் இரகசியத்தை ஒரு காகிதத்தில் குறித்து வைத்திருக்கிறேன். அதைக் கொண்டு இந்த உலகத்தையே அழித்து விடலாம். அணுகுண்டைவிட அச்சம் கொடுக்கக் கூடியது இந்த இரகசியம்!"

"சொல்லுங்கள். எப்படி?" என்றார் சங்கர்லால்.

"வல்லரசுகள் அணுகுண்டை எதற்காக உருவாக்குகின்றன? பகை நாடுகளின் தொகையைத் குறைக்கத்தானே? ஒருகுண்டைப்போட்டதும் பல இலட்சம்பேர் இறக்கிறார்கள். பல கல் தொலைவிற்கு வீடுகளும், கட்டடங்களும், பாலங்களும் மலைகளும், காடுகளும் அழிந்துவிடுகின்றன. நாடு பாலைவனம் ஆகிவிடுகிறது. இதனால் இந்தக் குண்டைக் கண்டு மனிதர்கள் அஞ்சுகிறார்கள், என்றாலும் இந்தக் குண்டால் மனித இனத்தை மிக மிகுந்த அளவில் ஒரேயடியாக அழித்துவிட முடியாது! எத்தனை அணுகுண்டுகளைப் போட்டாலும் கரப்பான்களை அழிக்கவே முடியாது. அணுகுண்டு விழுந்த இடங்களில் கூடக் கரப்பான்கள் உயிருடன் இருக்கின்றன என்று ஓர் அமெரிக்க விஞ்ஞானி சொல்லுகிறார்."

"உங்கள் ஆராய்ச்சியின் பலனைச் சொல்லுங்கள்."

"என் ஆராய்ச்சியின் பலன்மிக எளிதில் புரியக்கூடியது. நம்முடைய பகை நாடுகள் இன்று இரண்டே இரண்டுதான். ஒன்று சீனா, சீனா, உலகத்திலேயே மிக மிகுதியான மக்கள் தொகையைக் கொண்டது. அதன் மக்கள் தொகை மிகுதியாக இருப்பதால், அது இந்தியாவை பறிக்க வேண்டும், சீனாவின் அளவைப் பெரிதாக்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறது. அடுத்தபடியாக, பாகிஸ்தான். அதுவும் மக்கள் தொகை மிகுதியானதும் இந்தியாவின் சில பகுதிகளைப் பிடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறது. சீனாவும் பாகிஸ்தானும் நட்புநாடுகள். இந்தியாவுக்கு எதிராகச் செயல்படும் இந்த இரண்டு நாடுகளிலும் திடீரென்று ஒரு நாள் கத்தியின்றி இரத்தமின்றி மக்கள் தொகை குறைந்துவிட்டால், பல ஆண்டுகளுக்கு இந்தியா அமைதியுடன் வாழ முடியும், இல்லையா?"

"மேலே சொல்லுங்கள்?" என்றார் சங்கர்லால் தன்கருத்தை வெளியிடாமல்.

ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து ஒரு சிறிய மருந்துப் புட்டியை எடுத்தார் புரபஸர். எளிய பெனிசிலின் மருந்து கொண்ட புட்டி அது. ஊசியின் வழியாகச் செலுத்துவதற்கு செய்யப்பட்ட பெனிசிலின் மருந்து போல் அது இருந்தது.

"இன்று உலகம் முழுவதும் பெனிசிலின் மருந்துகள் விற்கப்படுவதைப் போல் வேறு எந்த மருந்தும் விற்கப்படுவதில்லை. தினமும் கோடிக்கணக்கான உயிர்களை இந்தப் பெனிசிலின் காப்பாற்றுகிறது. என்னுடைய ஆராய்ச்சியைக் கொண்டு இந்த மாதிரி மருந்துகளைக் கோடிக் கணக்கான புட்டிகளில் ஒன்றிரண்டு நாள்களில் தயாரிக்க முடியும். இந்த மருந்துகளைச் சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் கப்பலில் அனுப்பி, மேலை நாடுகள் இவற்றை விலையின்மையாக அனுப்பி இருக்கின்றன என்று சொன்னால் போதும். ஒருசில நாள்களில் இவை அந்த நாடுகளில் எல்லா மருத்துவ விடுதியிலும் கடையிலும் நிரம்பிவிடும். இந்த ஊசிகளைச் செலுத்தியதும் படபடவென்று ஒரே நாளில் பல கோடிப் பேர் இறந்துபோய் விடுவார்கள். இதை நிறுத்தும்படி சொல்லுவதற்குள் அந்த நாடுகளின் மக்கள் தொகை மிகவும் குறைந்துவிடும். இந்த ஊசியைப் போட்டுவிட்டு, வேறு எந்த மருந்தைச் செலுத்தினாலும், மீண்டும் உயிர் பெற முடியாது. ஊசியைச் செலுத்தி விட்டால் அவனைப் பிணப்பெட்டியில் தூக்கி வைக்க வேண்டியதுதான்!"

"மிகவும் கொடிய ஆராய்ச்சி!" என்றார் சங்கர்லால்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது ஷா அவர்களை நோக்கி வந்தார். அவருக்குப் பின்னால் மலர்ச்சோலையும் வந்தாள்.

ஷா, புரபஸரைப் பார்த்து, "எல்லாவற்றையும் விளக்கி விட்டீர்களா? உங்கள் ஆராய்ச்சியின் முடிவை என்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிடுங்கள்! நாளைக்குப் பாதுகாப்பு மந்திரி வந்ததும் அதை அவரிடம் கொடுத்து விடுகிறேன்!" என்றார் ஷா.

சங்கர்லால் அந்த மர்மத் தீவுக்கு வந்திருப்பதால், ஷா, புரபஸரிடம் இரகசியத்தை விட்டுவைக்க விரும்பாத வரைப்போல் இருந்தது அவர் பேச்சு!

"பாதுகாப்புடன் அது இரும்பு பெட்டியில் இருக்கிறது. விடிந்ததும் தருகிறேன்" என்றார் புரபஸர்.

"இப்போது கொண்டு வாருங்கள்" என்று கொஞ்சம் கண்டிப்பாகச் சொன்னார் ஷா.

புரபஸர், கொஞ்சம் தயங்கினார். பிறகு விரைந்தார்.

ஷா, சங்கர்லாலிடம் பேச்சுக் கொடுத்தார். இந்த மர்மத்தீவை வாங்கவும்' ஆராய்ச்சிகளை நடத்தவும் ஆன செலவுகளைப்பற்றிப் புள்ளி விவரங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார் ஷா.

மலர்ச்சோலையும் அடிக்கடி குறுக்கிட்டுத் தன் பழக்க வழக்கங்களைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அப்போது-

'வீல்' என்று ஒரு குரல் கேட்டது!

புரபஸர் குரல்தான் அது.

குரல் கேட்டதும் முதலில் ஓடியவள் மலர்ச்சோலைதான்.

அவளைத் தொடர்ந்து சங்கர்லாலும் ஷாவும் ஓடினார்கள்.

இரும்புப் பெட்டி எந்த அறையில் இருந்தது, புரபஸர் எந்த அறைக்குள் போனார் என்பது சங்கர்லாலுக்குத் தெரியாது. புரபஸரின் குரல் எந்தத் திக்கிலிருந்து வந்தது என்று அவரால் திட்டமிட முடிந்தாலும், மலர்ச்சோலை மிகச் சரியாக அந்த அறைக்குப் போவாள் என்று வேண்டுமென்றே சங்கர்லால் அவளை முன்னால் ஓடும்படி விட்டு, அவள் பின்னால் ஓடினார்.

சங்கர்லால் ஓட்டத்திலே ஈடுகொடுக்க முடியாதவரைப் போல் முச்சுவாங்க முன்றாவதாக ஓடினார் ஷா!

மலர்ச்சோலை, புரபஸர் கூச்சலிட்ட அறையை அடைந்ததும் அந்த அறை இருட்டாக இருப்பதைக் கண்டாள். உள்ளே ஓடிப்போய் விளக்கின் விசையைப் போட்டாள். அந்த அறையில் அவள் பார்த்த காட்சியைக் கண்டதும் அவளும் 'வீல்' என்று அலறினாள்.

அவள் கண்ட காட்சியை அவளுக்குப் பின்னால் நின்று சங்கர்லால் பார்த்தார். சங்கர்லாலுக்குப் பக்கத்தில் நின்ற ஷாவும் கண்டார்.

ஷாவும் 'ஆ' என்று அலறினார்.

சிறிதும் கத்தாதவர் சங்கர்லால் ஒருவர்தான்.

இரும்புப் பெட்டி திறந்து கிடந்தது.

தமிழ்வாணன்

அதிலிருந்த காகிதங்கள் வெளியில் பறந்து விழுந்து கிடந்தன. திறந்த இரும்புப் பெட்டியின் பக்கத்தில் புரபஸர் முதுகில் கத்தியால் குத்தப்பட்டு இறந்து கிடந்தார்.

அவர் முதுகில் குத்தப்பட்ட கத்தி அவர் இதயத்தைப் பிளந்து கொண்டு நெஞ்சில் வந்திருந்தது-

அவர்கள் வருவதற்குள் அவர் இறந்து விட்டார்.

புரபஸரின் மகள் மயக்கமடையும் நிலையில் தடுமாறிய போது அவளைப் பிடித்துக் கொண்டார் சங்கர்லால்.

ஷா, விரைந்து சென்று இரும்புப் பெட்டிக்குள்ளும் வெளியிலும் துழாவிப் பார்த்துவிட்டு, "சங்கர்லால்! இரகசியக் கவர் மறைந்துவிட்டது. எவரோ சரியான நேரத்தில் புகுந்து கவரைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டார்கள். கவரைக் கிளப்பியவன் தீவிலிருந்து தப்ப முடியாதபடி தடுக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே ஓடினார் வெளியே.

சங்கர்லால், தாங்கிக் கொண்டதும் மயக்கம் போடாமல் சமாளித்து நின்ற மலர்ச்சோலை, "என் அப்பாவைக் கொன்றவனைப் பழி வாங்காமல் விடமாட்டேன். அவனைக் கண்டுபிடித்தே ஆகவேண்டும்!" என்று சொல்லிவிட்டு வெறி கொண்டவளைப்போல் ஷாவின் பின்னால் ஓடினாள்.

தொடரும்...

இத்தாலியில் கப்பல் மூழ்கியே கடத்தை காட்டிக் கொடுத்த

இலங்கைத் தமிழரின் அடையாள அட்டை

கப்பல்களிலும் படகுகளிலும் சென்று சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் அதிக அளவில் கரையேறும் நாடுகளில் இத்தாலி முதலிடம் வகிக்கிறது.

அவ்வாறு செல்பவர்கள் எல்லோரும் செல்வச் செழிப்பு மிக்க வளமான வாழ்வு குறித்த கனவுகளுடன் தான் சொந்த நாடுகளில் இருந்து வெளியேறுகிறார்கள். ஆனால் சகலரது கனவும் நனவாவதில்லை. சிலருக்கு கடலிலேயே சமாதியாகும் நிலையும் ஏற்படுவதுண்டு.

இவ்வாறு இத்தாலிக்குள் நுழையப்போய் 5 வருடங்களுக்கு முன்னர் கடலில் மூழ்கிய கப்பல் ஒன்றின் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இலங்கையர் உட்பட 283 சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுடன் இத்தாலிக்குச் சென்று கொண்டிருந்த வேளையில், கடலில் மூழ்கிய அயோகன் கப்பலின் சிதைவுகளையும், எலும்புக்கூடுகளையும் சுமார் 5 ஆண்டுகளின் பின்பு நீரில் மூழ்கி தேடுதல் நடத்திய குழுவொன்று கண்டுபிடித்திருக்கிறது.

1996 டிசம்பர் 26ஆம் திகதி சிசிலியின் தென்கிழக்கு முனைக் கப்பல் சர்வதேசக் கடல் எல்லையில் இந்தக் கப்பல் மூழ்கியது. ஆனால், இது பற்றிய தடயம் எதுவும் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது.

மூன்று வாரங்களுக்கு முன்பு அந்தக் கப்பலில் பயணம் செய்த இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவரின் அடையாள அட்டையொன்று மீனவரின் வலைக்குள் தற்செயலாகச் சிக்கியதையடுத்தே மூழ்கிய கப்பலைத் தேடும் நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டது. இந்த அடையாள அட்டையை மிலானிலுள்ள அந்த இளைஞனின் மாமனார் அடையாளம் கண்டு கொண்டார்.

இதனையடுத்து, இத்தாலியிலுள்ள 'லா ரீப்பளிக்கா' என்ற பத்திரிகை இந்தக் கப்பலின் சிதைவுகளைத் தேடும் பணியை மேற்கொண்டது. 'கப்பல் சிதைவின் மாயத் தோற்றம்' (The phatom Ship Wreak) என்று பெயரிடப்பட்டு தேடுதல் வேட்டை ஆரம்பமானது.

இயந்திர மனிதன் மூலம் (Rodot) இடம்பெற்ற தேடுதலின் விளைவாக கடந்த வெள்ளிக்கிழமை கப்பல் சிதைவுகள் கண்டுபிடிக்கபட்டதாக 'லா ரீப்பளிக்கா' பத்திரிகை அறிவித்திருக்கிறது. இந்தச் செய்தியை வெளியுலகுக்குக் கொண்டு வந்த கியோவன்னி மரியோ பெல்லு என்ற பத்திரிகையாளர் கப்பல் சிதைவுகளுடன் எலும்புக் கூடுகள் குவிந்து கிடப்பதாகக் கூறியிருக்கிறார். கப்பல் மூழ்கிய இடத்துக்குச் சமீபமாக போட்டோ போலோ என்ற மீன்பிடி நகரம் உள்ளது. கப்பல் மூழ்கியமை குறித்து இந்த நகர மக்களுக்குத் தெரிந்திருந்த போதும் அதிகாரிகளை நடவடிக்கையெடுக்குமாறு ஒருவரும் தூண்டியிருக்கவில்லையென இந்தப் பத்திரிகையாளர் கூறியுள்ளார்.

கப்பலில் பயணம் செய்து மூழ்கி இறந்தபலரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதும் போட்டோ போலேவிலுள்ள மீனவர்கள் அவற்றை மீண்டும் கடலில் வீசியிருக்கலாமெனவும் அதிகாரிகளுக்குத் தெரியப் படுத்தினால் வீண் பிரச்சனை எனக்கருதி அவர்கள் இவ்வாறு செய்திருக்கலாமென்றும் கியோவன்னி மரியா பெல்லு கூறினார். 'உள்ளூர் அதிகாரிகள் இதுபற்றி அறிந்திருக்கும் சாத்தியம் இல்லையென நினைக்கிறேன். நான் எவரையும் குற்றம்சாட்டவில்லை. ஆனால் எமது இந்த அறிக்கையைத் தொடர்ந்து இந்த கப்பல் மூழ்கியமை தொடர்பாக அலட்சியமாக இருந்தமை குறித்து சைரகியூஸிலுள்ள சட்டத்தரணிகள் விசாரணையை ஆரம்பிக்குமாறு கோரமுடியுமென நான் நினைக்கிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடற்படுக்கையில் படகுக்கு சமீபமாக எலும்புக் கூடுகள் காணப்பட்டதை ஒளிப்பதிவு செய்யப்பட்டது. வெள்ளிகிழமை லாரீப்ளிக்கா இந்தப் படங்களை வெளியிட்டது.

இக்கப்பலில் இருந்து உயிர் தப்பியோர் கூறிய விடயங்களைக் கப்பல் சிதைவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

1996 டிசம்பர் 26 அதிகாலையில் கப்பல் மூழ்கிய போதும், நான்கு தினங்களுக்குப் பின்பே அந்தச் செய்தி வெளியானது. உயிர் தப்பியோர் கிரேக்கத்திற்குள் பிரவேசித்த போது பொலிஸாரிடம் சிக்கியதையடுத்து செய்தி வெளியானதும் கிரேக்கப் பொலிஸார் அதனை உடனடியாக நம்பவில்லை. ஆயினும், இத்தாலி அதிகாரிகளுக்கு அதனைத் தெரியப் படுத்தினார்கள். கடுமையான புயல் வீசியதால் அயோவன் கப்பலில் இருந்த சிறிய படகு மூலம் சிசிலிக்குப் போக முயன்றதாகவும் பலர் அதனை நிராகரித்ததாகவும் கப்பலின் கப்டன் (லெயனானியர்) துவக்கை காட்டி தங்களை மிரட்டியதாகவும் உயிர் தப்பியோர் கூறியிருந்தனர். சிறிய படகு மூழ்கத் தொடங்கிய போது அயோவன் கப்பல் அதற்கு கிட்ட நெருங்கி வந்து மோதியுள்ளது. இந்த மோதலில் படகு கப்பலுக்குள் சிக்கியுள்ளது.



இது இவ்வாறிருக்க சர்வதேச கடற்பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றிருப்பதால் இத்தாலி அரசாங்கம் உத்தியோகபூர்வமாக சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சாத்தியம் இல்லை. இதனை, அந்நாட்டு கரையோர காவல் பிரிவைச் சேர்ந்த அட்மிரல் யூஜினோ சிக்கு ரெஸாவும் தெரிவித்திருக்கிறார்.

ஆயினும், உடல்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதார்மீகக் கடமை இத்தாலி அரசுக்கு இருப்பதாக தான் கருதுவதாக அவர் கூறியுள்ளார்.

அயோவனில் சென்ற 283 பேரில் 171 பேர் இந்தியர்களாவர். ஏனையோர் இலங்கை, பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள்.

ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 58

ஒரு நண்பர் இருந்தார். அவர் ஒரு பொதுவுடமைவாதி. அவருடன் உரையாடிக் கொண்டிருந்த வெள்ளைக்காரன் காலத்து ஆட்சி முறைகளையும் மக்கள் சிரமமின்றி வாழ்ந்த வரலாறையும் விரிவாக எடுத்துப் புகழ்ந்தார். கம்யூனிஸ்ட் நண் பருக்கு ஆவேசம் வந்துவிட்டது. "வெள்ளைய ராட்சி எம்நாட்டு வளத்தையெல்லாம் கொள் ளையடித்து, நாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டே நாட்டைவிட்ட கன்றது," என்றார் நண்பர்.

மற்ற நண்பரும் விட்டபாடில்லை. "வெள்ளைக்காரன் ஆட்சி செய்த காலத் தில் பஞ்சம், பசி பட்டினி என்ற வார்த்தை களுக்கே மக்களுக்கு அர்த்தம் தெரியாது. நாடு சுபீட்சமாகத் தானே இருந்தது! சுதந்திரம் வந்து இத்தனை ஆண்டுகளாகி விட்டனவே; இந்த நாட்டில் வெள்ளைக் காரன் போட்டுக்கொடுத்த ரோட்டுகளுக்கு மேல் ஒரு மைல் நீளவீதியையாவது நம்ம வர்கள் போட்டுள்ளார்களா?" என்று மற்று மொரு வினாவைத் தொடுத்தார்.

இதைக் கேட்ட கம்யூனிஸ்ட் நண்பர் "ஆமா, உண்மைதான். வெள்ளைக்காரன் நாடு பூராவும் ஜோரான ரோட்டுக்களைப் போட்டுத்தான் வைத்திருக்கிறான். இல்லை என்று சொல்லவில்லை.. ஆனா அவன் இந்த ரோட்டுக்களை ஏன் போட்டான்...? நாளைக்கு நீங்களும் நாங்களும் குதூகல மாக காரிலேறி சொகுசாகப் பயணம் செய் வதற்காகவா ரோட்டுக்களைப் போட் டான்..? இந்தநாட்டு வளங்களையெல்லாம் சுரண்டி எடுத்து அவனுடைய நாட்டுக்கு வெகு வேகமாகக் கொண்டு செல்வதற் காகத்தான்.. எங்கிறதை மறந்துவிட வேணாம் கானும்!" என்று ஒரு மேடைப் பிரசங்கமே செய்துவிட்டார்.

பொது உடமைவாதியான நண்பர் கூறியதில் எத்தனை உண்மை புதைந் திருக்கிறது என்பதை நாம் அறிவோம். இருப்பினும் அன்று அவர்களுடைய சுய நலத்துக்காக மேற்கொண்ட பணி இன்று மட்டுமல்ல, இனிமேல் வருங்காலங்களிலும் நிலையாக நிற்கப் போகிறது என்பதை மறப்பதற்கில்லை.

மட்டக்களப்பு கல்லடிப்பாலம் 1924ம் ஆண்டு போட்டு முடிக்கப்பட்டதும் மட்டக் களப்புத் தென்பகுதி மிக வேகமான முன் னேற்றம் கண்டது.

மட்டக்களப்புடன் முடிவடையும் இரயில் பாதையை தெற்கே கல்முனை, அக்கரைப் பற்று மற்றும் பொத்துவில் வரை நீட்டு வதற்காக அவ்வப்போது பல பிரயத்தனங்கள் இடம்பெற்றன. ஆனால் அதற்கான பொரு ளாதார நிலை இடம் கொடுக்காமையினால் அத்திட்டங்களெல்லாம் கிடப்பில் போடப் பட்டன.

காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ரப் அவர்கள்கூட கல்முனை வரையிலாவது இரயில் பாதையை நீடிப்பதற்கான ஏற்பாடு களைச் செய்தார். இதற்கான காணி சுவீ கரிப்பு முதலானவற்றை ஆராய்ந்து பார்ப்ப தற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் கால வரையரையின்றி அத்திட்டங் கள் அனைத்தும் ஒத்தி வைக்கப்பட்டு விட்டன.

நாட்டுக்கு சுயாட்சியை வழங்கிவிட்டு ஆங்கிலேய ஆட்சியாளர்கள் வெளியேற ஆயத்தங்களைச் செய்தபோது, இலங் கைக்கு எத்தகைய ஆட்சி முறை பொருத்த மாக இருக்குமென்பதை ஆராய்ந்தறிவ தற்காக சோல்பரிப் பிரபுவின் தலைமையில் ஒரு விசாரணைக்குழு இலங்கைக்கு வந்தது.

அந்த விசாரணைகளின் போது தான் திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் ஐம்பதுக்கு

ஐம்பது என்ற கோட்பாட்டை வலியுறுத்தி னார் என்பதையும் முன்னரே அறிவித்திருந் தோம்.

பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களுடைய ஜனநாயகக் கோட்பாட்டின்படி பெரும் பான்மையினருடைய விருப்பத்தை அனு சரித்தே எத்தகைய நடைமுறைகளையும் செயற்படுத்துவார்கள். இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் மற்றும் பறங்கிக்காரர் என்ற நான்கு சமூகங்களும் எந்தவிதமான பேதமும் இல்லாமல் ஒன்றா கவே இணைந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை அப்போதிருந்த சிங்கள அரசியல் வாதிகள் சோல்பரி விசாரணைக் குழுவின் முன் நிரூபித்தனர்.

உண்மையில் அன்று இலங்கையிலிருந்த நிலவரப்படி மேற்குறிப்பிட்ட நான்கு சமூகங் களும் பிணக்குகள் எதுவுமின்றி வாழ்ந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களு டைய 'ஐம்பதுக்கு ஐம்பது' என்ற புதிய தத்துவத்தை எந்தச் சிங்கள அரசியல் வாதியும் ஆதரிக்கவில்லை. அது மட்டு மல்லாமல் திரு.பொன்னம்பலம் அவர்களு டன் இணைந்திருந்த ஒரு சிலரைத் தவிர அவருடைய கோட்பாட்டை வேறு எவரும் ஆதரிக்க முன்வரவில்லை. இதனால் சோல் பரி விசாரணைக் குழுவின் சிபாரிசின்படி இலங்கைக்கு ஒற்றையாட்சி முறையையே பிரிட்டன் வழங்கியது.

சேர் ஐவர் ஜென்னிங்ஸ் என்ற ஆங்கிலேயேரே இலங்கை பல்கலைக் கழ கத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டி ருந்தார். கொழும்பிலிருந்த இலங்கைப் பல்கலைக்கழகத்தை, தலைசிறந்த சுற்றுச் சுழலும் இயற்கை வனப்பும் நிறைந்த பேராதனைக்கு கொண்டு செல்வதற்கு காரணகர்த்தாவாக இருந்தவரும் ஜென் னிங்ஷ் அவர்களே.

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியல் யாப்பினை உருவாக்கும் பொறுப் பும் சேர் ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

1947ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலில் டி.எஸ்.சேனநாயக்க அவர்களுடைய தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றது. எனவே அக்கட்சியின் தலைவரான டி.எஸ் சேனநாயக்கா அவர்கள் முதலாவது பாராளு மன்றத்தில் பிரதம மந்திரியாக பதவி யேற்றார்.

1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி இலங்கை சுதந்திர நாடாகப் பிர கடனப்படுத்தப்பட்டது. மத்திய கொழும்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுதந்திர சதுக் கத்தில் சுதந்திரப் பிரகடனம் உத்தியோக பூர்வமாக வாசிக்கப்பட்டது. ஆங்கிலேய ரின் 'யூனியன் ஜாக்' கொடி, கொடிக்கம் பத்தில் இருந்து இறக்கப்பட்டு, பண்டைய சிங்கள மன்னர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த வாளேந்திய சிங்களக் கொடி பறக்க விடப்பட்டது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததும் அப்போதிருந்த சிங்கள அர சியல்வாதிகளின் உண்மையான சுய உருவம் தலைகாட்டத் தொடங்கியது.

அன்று இலங்கையில் வாழ்ந்த, இந்த நாட்டைத் தமது தாயகமாகக் கருதி வாழ்ந்த சகல இன மக்களும், இந்த நாட்டின் குடிமக்கள் என்ற கணிப்பினைப் பெற்றனர். இந்த நாட்டில் எந்தப் பிரதேசத்திலும் ஆறு மாதங்கள் தொடர்ந்து வாழ்ந்து வந்த 21 வயதுக்கு மேற்பட்ட சகலரும் இந்த நாட்டின் குடிமக்கள் என்று கணிக் கப்பட்டனர்.

சேர்.பொன்.அருணாசலம் அவர் களைப்பற்றி இத் தொடரில் பிறதோர் இடத்தில் குறிப்பிடும்போது, 'இந்திய சுதந்திரத்துக்காக பாடுபட்டு உழைப்பதற்கு இந்திய தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட் டது போல் இலங்கையின் சுதந்திரத்துக் காகப் பாடுபட்டு உழைப்பதற்கு இலங்கை தேசிய காங்கிரஸ் என்றதோர் அமைப்பினை அவர் உருவாக்கினார்' என்று குறிப்பிட்டிருந் தோம். இந்த அமைப்பில் அன்று இணைந் திருந்த சில சிங்களத் தலைவர்களின் அடிப்படைச் சிந்தனையில் காணப்பட்ட பேரினவாதக் கருத்துக்களால் மன முடைந்து அவ்வியக்கத்தைவிட்டு வெளி யேறினார் என்பதைக் குறிப்பிட்டிருந்தோம்.



டி.எஸ்.சேனநாயக்க

இந்த வேளையில் சுதந்திர இலங்கை யின் ஆட்சி பீடமேறிய சிங்களத் தலைவர் கள் மத்தியில் எத்தகைய மனப்பான்மை ஊடுருவியிருந்தது என்பதை எடுத்துக்காட்ட மற்றுமொரு சந்தர்ப்பத்தை எடுத்துக்காட்ட லாம் என்று கருதுகிறேன்.

பிரிட்டிஷார் இந்த நாட்டை விட்டு வெளியேறும் போது, தாங்கள் ஒன்றரை நூற்றாண்டுக்கு மேல் இந்த நாட்டில் ஆட்சி செலுத்திவிட்டு, வெறுமனே போய்விடு வது நல்லதல்ல என்பதனால், இந்த நாட்டுக்கு பிரதியுபகாரமாக ஏதாவது செய்து தர வேண்டும் என்று கூறி, எத் தகைய அபிவிருத்திப்பணியை செய்து தர வேண்டுமென்று ஆட்சியாளர்களிடம் கேட்டனர்.

அப்போது மந்திரி சபையிலிருந்த அமைச்சர்கள் பலர், "இந்த நாட்டில் வரண்ட பிரதேசமாக பெரும் பகுதி நிலம் எத்தகைய பலனுமளிக்காமல் காய்ந்து கிடக்கிறது. இந்தப் பிரதேசத்தின் ஒரு பகுதியையாவது விளை நிலமாக அபிவிருத்தி செய்து தந்தால், பயனுள்ளதாக இருக்கும்" என்று கூறினார்கள். அதனை ஆமோதித்த ஆங்கிலேயர், இலங்கையின் எந்தப் பகுதியை நீர் வளமுள்ள நன்செய் நிலமாக மாற்றியமைத்தால் பயன் கிடைக்கும் என்பதை ஆராய்ந்தறியும் நிபுணர் குழு ஒன்றை பிரிட்டனிலிருந்து அனுப்பி வைத்த னர். உரிய காலத்தில் இலங்கைவந்து சேர்ந்த அந்தக் குழுவினர் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று ஆராய்ந்தறிந்த தங்களுடைய அறிக்கையை பிரதமர் டி.எஸ். சேனநாயக்க அவர்களிடம் கையளித்தனர். இருப்பினும் அந்த நிபுணர் குழுவினர் அளித்த சிபாரிசினை சேன நாயக்கா அவர்கள் ஏற்கவில்லை.

திசை திருப்பப்பட்ட திட்டங்கள்

அந்த நிபுணர்கள் குழுவின் அறிக்கை யின்படி மின்னேரிக் குளத்துடன் அப்பிர தேசத்தில் பாயும் கல்ஓயா போன்ற சிறு சிறு அருவிகளைத் தொடுத்து வட மத்திய மாகாணத்தில் நீர்ப்பாசன வசதிகளைச் செய்தால் அப்பகுதியிலுள்ள நிலம் மிக விரைவாக வளம் நிறைந்த பூமியா மாறி உரிய பயனையளிக்கும் என்பதே ஆங்கி லேய நிபுணர்களின் சிபாரிசாகும்.

அந்தக் குழுவினர் அளித்த சிபாரிசை ஒதுக்கிவிட்டு "ஊவா மலைச் சிகரங்களி லிருந்து ஊற்றெடுத்து கிழக்கு மாகாணத் தின் தென் பிராந்தியத்தை ஊடறுத்துச் செல்லும் சிற்றாறுகளைக் கொண்டு ஒரு புதிய அணைகட்டி ஒரு குளத்தை அமைத் தால் அப்பிரதேசத்தில் நீர்ப்பாசன வசதிச் செய்து வளம் பெருக்கலாம். எனவே அங்கு சென்று உங்கள் ஆராய்ச்சிகளை நடத்தி உங்கள் அறிக்கையைத் தாருங்கள்" என்று

இரா.பத்மநாதன்

கேட்டுக் கொண்டார் பிரதமர் சேன நாயக்கா அவர்கள்.

திரு.சேனநாயக்கா அவர்கள் விவ சாயத்தில் நீண்டகால அனுபவம் பெற்றவர். அவருடன் நீர்ப்பாசன இலாகாவில் பணி புரிந்து அனுபவம் பெற்ற பல அதிகாரிகள் திரு.சேனநாயக்க அவர்களின் கூற்றினை ஆமோதித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் நுணுக்கமான ஆய்வுகளை மேற்கொண்ட எமது நாட்டு நிபுணர்களும் இந்த ஆய்வுக் குழுவில் இணைந்திருந்தனர். இவர்களுடைய கண் களுக்கு 'பட்டிப்பளை' என்ற சிற்றருவிதான் தென்பட்டது.

இங்கியாகல என்ற ஓர் இடத்தில் இரு புறமும் இரு குன்றுகள் காணப்பட்டன. இவ்விரு குன்றுகளுக்கும் நடுவேதான் 'பட்டிப்பளை' என்ற ஆறு ஓடிக்கொண்டி ருக்கிறது. ஆனால் இது ஒரு ஜீவநதியல்ல. ஊவாக் குன்றுகளில் மழை வீழ்ச்சி அதிகரிக்கும் காலங்களில் பட்டிப்பளை ஆற்றில் பெரு வெள்ளம் பெருக்கெடுத் தோடும் ஏனைய காலங்களில் இதில் போதுமான அளவு நீர் இருக்காது.

இங்கினியாகல குன்றுகளை இணைத்து அணை ஒன்றைக் கட்டினால் 'பட்டிப்பளை' ஆற்றில் பெருக்கெடுக்கும் நீர் தேங்கி அணையின் கீழுள்ள பிரதேசங்களுக்கு நீர் பாய்ச்ச வசதியேற்படும். காடடர்ந்த பிரதே சத்தை அழித்து விளை நிலமாக்கினால் இலங்கையின் தென்பகுதியில் காணியற் றிருக்கும் விவசாயிகளை அங்கு கொண்டு போய் குடியேற்றலாம் என்று நிபுணர்கள் குழு பிரதமர் சேனநாயக்க அவர்களுக்கு எடுத்து கூறியது.

ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்த லாம் என்று பெரு மகிழ்வடைந்து அந்த திட்டத்தையே அமுல் நடத்தித் தருமாறு பிரித்தானிய அரசாங்கத்தை பிரதமர் சேனநாயக்க கேட்டுக்கொண்டார்.

இதுவே 'கல்லோயாத் திட்டம்' தொடங்கிய வரலாறு. சேர் பொன். அருணாசலம் அவர்கள் அரசாங்க சபையில் உறுப்பினராக இருக்கும்போது வரண்டு கிடந்த யாழ்ப்பாணப் பிரதேசத்தை வளங் கொழிக்கும் சோலையாக மாற்றுவதற்குத் திட்டமொன்றினை வகுத்தார். அதுவே 'மகாவலி திசை திருப்புத் திட்டம்! ஆகும்.

'மகாவலி திசை திருப்புத் திட்டம் பிற்பட்ட காலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஜனாதி பதியாக இருந்த காலத்தில் தானே துரித மகாவலித் திட்டமாக அமுல் நடத்தப்பட்டது' என்று சிலர் முணுமுணுப்பது தெரிகிறது. அவ்வாறு இருக்கும்போது அரசாங்க சபை யில் அங்கம் வகித்த சேர் பொன் அருணா சலம் அவர்களுடன் மகாவலித்திட்டத்தை தொடர்பு படுத்துவது எவ்வாறு சாத்தியப் படும் என்று பலரும் கருதுவீர்கள்.

போதுமான நீர்வளம் அற்ற வட மாகாணத்தையும், யாழ்குடாநாட்டையும் நீர்வளம் நிறைந்த பிரதேசமாக மாற்று வதற்கு மகாவலி வடக்கு நோக்கித் திசை திருப்புவதே ஒரே வழி என்று கண்டவர் சேர் பொன் அருணாசலம் அவர்கள். மதவாச்சிவரையும் வாய்க்கால் மூலமாக மாகாவலி நீரை திசை திருப்பி, அங்கிருந்து பாரிய இரு குழாய்கள் மூலம் தண்ணீரை யாழ் குடா நாட்டுக்கு எடுத்துச் செல்வது தான் அவருடைய திட்டமாக இருந்தது. இந்தத் திட்டத்துக்கான பூர்வாங்க ஆய்வு களைச் செய்வதற்காக அப்போது அரசாங்க சபை வரவு செலவு திட்டத்தில் மானியமாக ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த திட்டம் நனவாகாமல் வெறும் கனவாகவே போய் வேறு திசை திரும்பி விட்டது.

(இன்னும் வரும்)

வாரம் ஒரு வார்த்தை!

தென்கச்சி - கோ. சுவாமிநாதன்

21.அறிவுரை

ஓர் இளம் தாய்!

அறிஞர் அரிஸ்டாட்டிலை தேடிப் போனாங்க!

அவருகிட்ட போயி-

"ஐயா! என் பிள்ளைக்கு நல்ல பழக்க வழக்கங்களை கத்துக்குடுக்கணும்னு ஆசைப்படறேன்.

"எந்த வயசுலே ஆரம்பிக்கலாம்"ன்னு கேட்டாங்க!

அதுக்கு அரிஸ்டாட்டில் "குழந்தை யோட வயசு என்னம்மா"ன்னு கேட்டார்.

அந்த அம்மா "அஞ்சு வயசுன்னு" சொன்னாங்க!

அரிஸ்டாட்டில் உடனே: "ஐயையோ! உடனே வீட்டுக்குப் போம்மா.. ஏற்கனவே அஞ்சு வருஷம் தாமதப்படுத்திப்புட்டே!" அப்படின்னாராம்.

இதுலே இருந்து என்ன தெரியு தன்னா...

நல்ல பழக்க வழக்கங்களைக் கத்துக் குடுக்கறதுக்கு நேரம் காலம் பார்த்துக் கிட்டிருக்கப்படாது!

எனக்குத் தெரிஞ்ச ஒருத்தரு... அவ ருக்கு ஒரே பிள்ளை! என்னங்க புள்ளையை பள்ளிக் கூடத்துலே சேர்க்க வேணா மான்னு கேட்டா அவரு என்ன சொல்வாரு தெரியுமா?

"அதுக்குலாம் ஒரு நேரம் காலம் வர வேணாங்களா அதான் பார்த்துக்கிட்டிருக் கேன்"ம்பாரு!

இவருலாம் எந்தக் காலத்துலே புள் ளையை படிக்க வைக்கப்போறாரு?

நல்ல பழக்கத்தை சொல்லிக்குடுக்க ணும்னா முதல்லே அதுக்கு நாம தயாரா கிக்கணும்.

ஒரு பெரியவர் கிட்டே ஒரு அம்மா தன்னோட பிள்ளையைத் தூக்கிட்டு வந்தாங்க!

"என்னம்மா விஷயம்?"ன்னு கேட்டார் அந்தப் பெரியவர். "ஐயா! என் புள்ளை எப்பப் பார்த்தாலும் வெல்லத்தையே தின் னுக்கிட்டிருக்கான். சொன்னா கேக்க மாட்டேங்கறான். நீங்கதான் அவனுக்கு நல்ல புத்தி சொல்லணும்!" அப்படின்னாங்க அந்த அம்மா!

அந்தப் பெரியவர் பார்த்தார். கொஞ்ச நேரம் யோசிச்சார். "சரிம்மா! நீ போயிட்டு ஒருவாரம் கழிச்சு வா!" அப்படின்னு சொல்லி அனுப்பிச் சுட்டார்.

இந்த அம்மா குழந்தையைத் தூக்கி கிட்டுப் போயிட்டாங்க! ஒரு வாரம் கழிச்சி மறுபடியும் வந்தாங்க குழந்தையோட! அந்தப் பெரியவர் அந்த குழந்தைக்கிட்டே வெல்லம் திங்கப்புடாதுன்னு சொல்லி நிறைய புத்திமதியெல்லாம் சொன்னார்.

"சரிம்மா... இனிமே இவன் வெல்லம் திங்க மாட்டான்... போயிட்டு வா"ன்னு சொன்னார்.

இந்த நேரத்துலே அந்த அம்மாவுக்கு ஒரு சந்தேகம்! கொஞ்சம் தயங்கிகிட்டே நின்னுக்கிட்டிருந்தாங்க! "என்னம்மா யோசிக்கிறே?"ன்னு கேட்டார் பெரியவர். "ம்... ஒன்னுமில்லீங்க! இப்ப நீங்க சொன்ன இந்த புத்தி மதியை ஒரு வாரத் துக்கு முன்னாடியே சொல்லியிருக்கலாமே! என்னத்துக்கு ஒரு வாரம் கழிச்சி மறுபடியும் என்னை வரச்சொன்னீங்க?" அப்படின்னு கேட்டாங்க அந்த அம்மா!

இது அந்தப் பெரியவர்:

"அப்படி இல்லேம்மா! ஒருவாரம் கழிச்சி உன்னை வரச்சொன்னதுக்கு காரணம் இருக்கு!

போன தடவை நீ வந்தப்பவே இந்த புத்திமதியை நான் ஏன் சொல்லேன்னா...

அதுவரைக்கும் நானும் அதிகமா வெல்லம் தின்னுக்கிட்டிருந்தேன். இந்த ஒரு வார காலத்துலே நான் கொஞ்சம் கொஞ்சமா விட்டுட்டேன்!

இப்ப நான் வெல்லம் சாப்பிடறதில்லே!

அதனாலே இப்பத்தான் அந்த அறிவுரை சொல்லக் கூடிய தகுதி எனக்கு வந்திருக்கு! அதனாலேதான் அப்படி சொன் னேன்!"னாரு.

இந்தக் காலத்துலே 'அட்வைஸ்' பண்றதுக்கு ஆள் நிறைய இருக்காங்க! ஆனா 'அறிவுரை' பண்ற தகுதி அவங்களுக்கு இருக் காங்கறது சந் தேகம்!

பல 'அறிவுரை' களுக்கு மரியாதை இல்லாமே போறதே இந்த தகராறுனாலே தான்.

அஹிம்சையைப் பத்தி பாடம் நடத்தப் போறேன்னு வந்தார் ஒருத்தர்!

அவருக்கு என்ன தொழில்ன்னு விசா ரிச்சாங்க:

'கசாப்பு'க் கடை வச்சிருக்காராம்!

(வார்த்தைகள் தொடரும்)

சத்தியம்



ஆரையம்பதி-பூ.இதயரெத்தினம்

"பிரியா... பிரியா... எங்கபோயிட்டீங்க, ஒருத்தரையுமே காணல்ல.." குரல் கொடுத்தபடி வாசல் பக்கம் வந்த சிவாவை, "வாங்க சிவா மாமா வாங்க!" என வரவேற்ற பிரியா "அப்பா காலையில கல்முனைக்கு போயிட்டாரு. அம்மா குசினியில இருங்காங்க. தம்பி ரியூசனுக்கு போயிட்டான்" தெளிவாய் பதில் சொன்னாள்.

"ம்.. இனியாவது இந்தக் குடும்பத்துக்கு சந்தோசமான வாழ்க்கை கிடைக்கட்டும்!" மனதார கடவுளை பிரார்த்தித்தபடி, அந்த மாமர நிழலில் கிடந்த வாங்கில் அமர்ந்த சிவாவின் மனதில் நேற்றைய நினைவுகள் நிழலாடியன.

"தம்பி சிவா எனக்கு யாரிட்டயாவது ஒரு ஐயாயிரம் ரூபா கைமாத்தாக வாங்கித் தரமாட்டயே? இந்தக் குடிய விட்டபிறகு தொழிலும் பெரிய மோசமாக் கிடக்கு. சாப்பாட்டுக்கே பெரிய கஸ்டமா இருக்கு. கல்முனையில கடை ஒண்டு பாத்திருக்கன். காசு கிடச்சால் நல்ல தொழில் செய்யலாம் ஒரு மாசத்தில வட்டியோட காச திருப்பித் தந்திடுவன்!" சங்கரண்ணனின் கெஞ்சலான இந்த வார்த்தைகளின் உண்மை நிலையை அறிந்திருந்தான் சிவா.

"சங்கரண்ணன் உங்கட கஷ்ட நிலம எனக்கு நல்லாத் தெரியும். இருந்தும் உங்களுக்கு காசு வாங்கித் தாறத்துக்கு எனக்கு பயமாக்கிடக்குது. நீங்க காச கண்டதும் திரும்பவும் குடிக்க ஆரம்பிச்சியள் எண்டால் உங்கட குடும்பத்துல இப்ப இருக்கிற நிம்மதியும் சந்தோசமும் பறி போயிடும். அதோட உங்கட பிள்ளையளோட படிப்புக்கூட பாழாயிடும்!" தன் மனவோட்டத்தை சொன்னான் சிவா.

"டேய் சிவா நீ இன்னும் என்னய நம்புறாய் இல்லதானேடா. இந்த ரெண்டுமாசமா நான் சாராயத்த தொடவே இல்லதானே? கற்பூரம் கொழுத்தி கடவுள் மேல சத்தியம் பண்ணியிருக்கிறன். அதால இனிமேல் சாராயத்த தொடவே மாட்டன். எப்படியாவது காசு வாங்கித் தாவனடா சிவா. தொழில் செய்யத்தானேடா காசு கேக்கிறன். என்னய நம்புடா சிவா!" சங்கரண்ணன் அழாக் குறையாய் தன் நிலமையை சொன்னபோது ஒரு நம்பிக்கை பிறக்க மனமிரங்கினான் சிவா. அன்று பின்னேரமே தனக்கு பழக்கமான வட்டிக்கார சம்புவிடம் சங்கரண்ணனுக்கு பணம் வாங்கிக் கொடுத்திருந்தான் சிவா.

"என்ன சிவா மாமா கடுமையா யோசிக்கிறார்?" ரியூசன் விட்டு வந்த ரகு கேட்க நினைவுக்கு திரும்பிய சிவா "ஒண்ணுமில்லடா ரகு குட்டி, எல்லாம் உங்க அப்பாவப் பத்தித்தான் யோசிச்சுக் கொண்டிருந்தன்." என்றதுமே

"மாமா காலையில அப்பா சொன்னவர் இன்னும் பத்துநாளைக்குள்ள எனக்கு ரீவி வாங்கித் தருவாராம். இனி நாங்க ஒவ்வொரு நாளும் படம் பார்ப்பமே!" ரகு செல்லம் காட்டி கதைக்க

"சிவா மாமா அப்பா எனக்கு ரியூசன் போறதுக்கு சைக்கிள் வாங்கித்தாறன் எண்டு சொல்லியிருக்காரு. நீங்களும் ஒருக்கா அப்பாட்ட சொல்லுங்க மாமா!"

பிரியாவும் சந்தோசமாய் சொல்ல சிவாவின் கவலையெல்லாம் வேறாக இருந்தது.

"ரகு குட்டி உங்கட ஆசையெல்லாம் நியாயமானதுதாண்டா. ஆனா பட்டு வேட்டிக்கு ஆசப்பட கட்டியிருந்த கோவணமும் காணாமப்போன கதையாக உங்க வழக்கு ஆகிடக்கூடாது என்கிறதுதான் என்னோட பயம். ரீவி சைக்கிள் இதையெல்லாம் விட அப்பா இப்போதைக்கு குடிக்காம இருந்து, பசி பட்டினி இல்லாம சந்தோசமா இருந்தா அதுவே போதும்ன்னு கடவுள பிரார்த்தன செய்யுங்க. ஐயாயிரம் ரூபாயோட போன உங்க அப்பா நிதானமா திரும்பி வந்தால் சரிதான்" சிவா முடிக்கவில்லை.

"அப்பாவ பகிடி பண்ணாதீங்க மாமா, அப்பா இரு மாதமா குடிக்கல்ல. இனியும் குடிக்கமாட்டாரு."

இருவரும் ஒரே குரலில் சொல்லி முடித்த மறுகணமே பலமான சத்தத்துடன் கேட் திறபட தள்ளாடிய படி வாசலில் வந்து வீழ்ந்தார் சங்கரன். குப்பென்று சாராய நெடிவீச அதிர்ச்சியான பிள்ளைகளினது ரீவிக்கனவுகள் கலைந்துபோக பயம் கொண்டவர்களாக தாயைத் தேடி குசினிக்குள் ஓடிப்போக வட்டிக்காரச் சம்புவுக்கு கடனாளியாகிவிட்ட கவலையோடு நின்றிருந்தான் சிவா.

இரகசியங்கள்

திருமலை.வீ.என்.சந்திரகாந்தி

"பெரிய ஆட்கள் கதைக்கின்ற இடத்திலை சின்ன பிள்ளைகள் இருக்கக்கூடாது என்று எத்தனைதரம் சொல்லியிருக்கிறன்!"

அம்மா அடிக்கடி கூறி என்னை எச்சரிக்கின்ற வார்த்தைதான் அது. நல்ல சுவாரசியமான கதை போய்க் கொண்டிருக்கையிலை, அம்மா என்னை இடைமறித்து துரத்திவிட்டால் எனக்கு கோபம் ஏற்படாதா?

அப்பாவென்றால் ஒரு நாளும் அப்படிச் செய்யமாட்டார். அப்பா நல்லவர்.

மற்றது... எனக்கும் இப்போ லேசுப்பட்ட வயதில்லை. பதினாறு முடிஞ்சது மட்டுமன்றி 'ஓ.எல்' எழுதிவிட்டேன்.

சில வருடங்களுக்கு முன்னர் அம்மாவே, "கௌதமி பெரிசாகி விட்டா!" என்று ஊர் பூராக சொல்லி எனக்கு பூப்புனித நீராட்டு விழாவும் எடுத்தா. நான் நினைத்தேன்... இனி நானும் பெரிய ஆள்தான் என்று!

ஆனால் அதற்கு பிறகுதான் ஆட்களுக்கு மத்தியில் என்னை இருக்க விடாமல், துரத்தும் அம்மாவின் செய்கை உச்ச கட்டத்தை அடைந்தது.

பாடசாலையிலும் சில அம்மாமார் இருக்கினம். அவை 'ஏ.எல்'ல்தான் அதிகம். "சின்ன பிள்ளைகள் நீங்கள் எங்கடை கதைகளைக் கேட்டு படிப்பைக் கோட்டைவிடாமல் அங்காலை போங்கோ பார்ப்பம்."

எனக்கு பத்திக் கொண்டுவரும். அம்மாவின் வாயிலிருந்து அடிக்கடி ஒரு வார்த்தை வரும். நான் மனதுக்கை அதைச் சொல்லித் தான் அவையளை ஏசுகிறனான்.

'பிஞ்சிலை பழுத்ததுகள்!'

வனஜா அன்ரி மாலையானதும் எங்களுடைய வீட்டுக்கு வந்து விடுவா. அந்த அன்ரி தன்னுடைய கஷ்டங்களை அழுதழுது அம்மாவுக்குச் சொல்லுவா. நானும் நல்ல வடிவாக கேட்டுக் கொண்டிருப்பன். ஒரு கட்டத்திலை அம்மா நான் எங்கை இருக்கிறன் என்று பார்வையாலை ஒரு துளாவு துளாவுவா! எனக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு போகும்.

"பெரிய ஆட்கள் கதைக்கிற இடத்திலை..." என்று தொடங்கி இழுத்துக் கொண்டே வலது கையை தூக்கி ஆட்காட்டி விரலை ஆட்டி காட்டுவா...

நான் மெல்ல நழுவி எனது அறைக்குப் போய் நிலைக் கண்ணாடியின் முன் நின்று முகத்தைச் சுழித்து அம்மாவுக்கு நையாண்டி காட்டுவேன். அப்போ எனது கோபம் கொஞ்சம் குறையும். நான் வடிவு என்ற எண்ணம் வரும். எனது பெரிய கண்களை கண்ணாடியில் உருட்டி முழித்துப் பார்ப்பேன். நாக்கு சிவப்பை நீட்டிப் பார்ப்பேன். இரு கைகளையும் தோளுக்கு சமாந்தரமாக நீட்டி தோள்கள் ஆடாமல் கழுத்துடன் சிரசை ஆட்டி பார்ப்பேன்.

வனஜா அன்ரியினுடைய கதையைக் கேட்டால் எனக்கு 'ரீ.வி.' நாடகம் பார்ப்பது போல இருக்கும். என்னதான் அம்மா எனக்கு ஓட்டம் காட்டினாலும் நான் வனஜா அன்ரியின் கதைகளை கேட்காமல் இருக்க மாட்டேன்.

வனஜா அன்ரிக்கு அண்மையில்தான் விவாகமாகியிருந்தது. அங்கிள் வெளிநாடு போயிட்டதுடன் அன்ரியையும் அங்கு அழைத்துக் கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தார். அன்ரிக்கு அங்கிளிடம் போய்விடவேண்டும் என்ற அவசரம். ஆனால் தனியாக பிரயாணம் போக வேண்டியிருப்பது அவாவுக்கு பெரிய பிரச்சனையாக இருந்தது.

அன்ரி அழகாக இருப்பா. எலுமிச்சை பழ நிறம். அம்மாவைப் போல அல்லாமல் சதைப்பிடிப்புடன் இருப்பா!

கொஞ்ச நாளைக்கு முன்னர்தான் வெளிநாடு போய் விடுவதற்காக அவா புறப்பட்டிருந்தா; இடையில் ஒரு நாட்டில் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஒரு 'ஹோட்டலில்' மேலும் சில பெண்களுடன் தங்கியிருந்தா. எல்லா ஒழுங்குகளும் இங்கு தலைநகரில் ஒரு 'ஏஜென்ஸி' மூலமாக நிறைவேற்றப்பட்டிருந்தது. அவன் மற்றொரு ஆடம்பர ஹோட்டலில் தங்கிருந்து இவர்களை அந்தந்த நாட்டுக்கு களவாக அனுப்பும் வேலைகளை கவனித்தும் கொண்டிருந்தான். அவனுடைய உதவியாள் அடிக்கடி வந்து இவர்களுடைய தேவைகளை கவனிப்பான். இடையில் அவர்களில் ஒருத்திற்கு பயண ஒழுங்கு சரிவந்துவிட்டதாக கூறி 'ஏஜென்ஸியிடம்' அழைத்து செல்வான். அவனை சில தினங்கள் காணக்கிடைக்காது! திடீரென்று ஒருநாள் வருவான். தனக்கு எல்லாம் 'ஓகே' என்று கூறி பயண பெட்டிகளை எடுத்துச் சென்றுவிடுவான். பெண்களுக்குள் ஒரு 'கசமுச' பேச்சு அடிபட்டுக் கொண்டிருந்தது. ஆனால் எவரும் தமது பயணத்தை தடங்கல் படுத்திக் கொள்ளவில்லை!

வனஜா அன்ரியும் இன்னுமொரு பெண்ணும் மட்டும் தங்களை அழைக்க வந்த உதவியாளிடம், "நாங்கள் 'ஏஜென்ஸியிடம் வருவதென்றால் இருவருமாக சேர்ந்தே வருவோம்; தனியே வரமாட்டோம்." என்று அடித்து கூறிவிட்டார்கள்.

இதனால் அன்ரி எமது நாட்டுக்கே திரும்பி வர நேரிட்டது. அங்கிளுக்கும் கடிதம் எழுதினா...

'நான் கற்புடன் உங்களிடம் வந்து சேர வேண்டுமாயின் நீங்களே என்னை வந்த அழைத்துச் செல்லுங்கள்.'

அங்கிள் அந்த கடிதத்தை தொப்பென்று போட்டுவிட்டு இருந்த மாதிரி மௌனம் சாதித்தார்...

அன்ரிக்கு அங்கிளிடம் போய்ச் சேர அவசரம்! அம்மாவிடம் கதை கதையாக சொல்லி அழுவா. அம்மா அன்ரியை தனது தங்கை போலவே ஆதரித்து அனுதாபம் காட்டினா.

தானுண்டு தனது வேலையுண்டு என இருந்த அப்பாவுக்கு தொந்தரவு கொடுத்து அன்ரியை தலைநகர் அழைத்துச் சென்று புதிதாக பயண ஏற்பாட்டை செய்ய தூண்டினாள்.

தொடக்கத்தில் அப்பாவும் அன்ரியும் ஓரிரு நாட்கள் தலைநகரில் தங்கியிருந்து பயண முயற்சிகளை மேற்கொண்டனர். அடுத்தடுத்த தடவைகளில் நாட்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. பயணம் மட்டும் சரிவரவில்லை.

அம்மாவுக்கு கவலையுடன் சலிப்பும் ஏற்படத் தொடங்கியது. ஆனால் வனஜா அன்ரி மேல் வைத்த அன்பு மட்டும் அவாவுக்கு குறையவில்லை.

அப்பாவுடன் பயணத்தால் திரும்பும் நாட்களில் அன்ரி களைத்திருப்பாள். அவள் குளிப்பதற்கு அம்மா சுடுநீர் வைத்துக் கொடுப்பாள்.

தனது கற்பு நெறியிலிருந்து பிறழக்கூடாது என்பதற்காகவே வெளிநாடு போய் கணவனுடன் இணையும் சந்தர்ப்பத்தை வனஜா அன்ரி தூக்கி எறிந்துவிட்டு நாடு திரும்பிவிட்டமை அம்மாவுக்கு அவள்மேல் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.

அம்மா என்னதான் என்னை "பெரிய ஆட்கள் கதைக்கிற இடத்திலை நில்லாதை நில்லாதை" என்று எச்சரித்தாலும் நான் ஊடுருவக்கூடிய இடங்களை முற்றாக தடை செய்ய மட்டும் அவாவால் முடியாமல் இருந்தது.

எனக்கு என்னென்ன கதைகள் எட்டக் கூடாது என்று அம்மா கருதி வந்தாளோ அப்படி அப்படியான கதைகளெல்லாம் பாடசாலையில் சரளமாக காதில் அடிபட்டன.

அன்று அப்பாவும் அன்ரியும் பயணத்தால் திரும்பியிருந்தார்கள். நன்கு மாலையாகிவிட்டிருந்தது. நான் 'ஹோல்' மூலையில் எனது மேசையில் படித்துக்கொண்டிருந்தேன்.

வனஜா அன்ரி வந்த வேகத்தில் அம்மாவை கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தார்.

"எல்லாம் சரி வந்துவிட்டது!" அம்மாவுக்கு மிகுந்த சந்தோசம். அப்பா சாதிக்க முடியாத காரியத்தை சாதித்துவிட்டு திருப்தியில் ஒய்வது போன்று 'சோபாவில்' சாய்ந்திருந்தார்.

அம்மா அன்ரிக்கு குளியலறையில் சுடுநீர் கலக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

வனஜா அன்ரி அப்பாவுக்கு மெதுமெதுவென்று ஏதோ இரகசிய தொனியில் கூறிக் கொண்டிருந்தா. அதே 'ஏஜென்ஸி' மூலமாகத்தான் இப்போதும் பயண ஏற்பாடு சரிவந்திருக்கின்றதென்பதை அம்மாவுக்கு காட்டிக் கொள்ளக்கூடாது என்பது பேச்சின் மூலப் பொருளாக இருப்பதை நான் அவதானித்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று அப்பா நான் இருப்பதை அவதானித்து விட்டார்.

"கௌதமி.. அம்மா சொல்லுகிறவா அல்லவா பெரிய ஆட்கள் கதைக்கிற இடத்திலை இருக்கக்கூடாது என்று. உங்களுடைய அறைக்கு போங்கோ!"

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பாவின் வாயால் மட்டும்தான் நான் இந்த வார்த்தையைக் கேட்காமல் இருந்தேன். இன்று புதினமாக அப்பா ஏன் இப்படி சொல்கின்றார்?

வனஜா அன்ரிக்கு அன்று பிழைகாரனாக தெரிந்த 'ஏஜென்ஸிக்காரன்' அப்பாவின் தொடர்பு ஏற்பட்ட பிறகு எப்படி சரிகாரனாக தெரிகின்றான்?

வெளிநாட்டு மோகம் அவளை படிப்படியாக மாத்திவிட்டதா?

அம்மா குளியலறையிலிருந்து குரல் கொடுக்கின்றாள்.

"வனஜா.. வா.. நானே வார்த்து விடுகின்றேன்"

அம்மாவுக்குத்தான் அன்ரிமேல் எவ்வளவு அன்பு... பாசம்.. நம்பிக்கை! எப்படி நிர்ச்சலனமாக அவள் இருக்கின்றாள்!

தனக்கு இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் துரோகம் பற்றி தெரிந்து கொள்ள சிறுதுப்புக்கூடவா அவளுக்குக் கிடைக்கவில்லை?

அப்படிக் கிடைக்குமாயின் ஏற்படக்கூடிய பாதகங்களை எண்ணிப் பார்க்கின்றேன்..

'பெரிய ஆட்களின் விடயங்களில் சின்ன பிள்ளைகள் தலையிடக்கூடாது'-எனக்கு நானே அறிவுறுத்திக் கொள்கின்றேன்!

தானம்

அ.கோகுலதீபன்-நற்பிட்டிமுனை

குடிசையின் கூரையில் வேயப்பட்டிருந்த கிடுகுகளின் சிறிய துவாரங்களினூடாக ஒளிப்பொட்டுக்கள் தெரியத் தொடங்கின. பட்சிகளின் கீச்சிடும் சத்தம் விடியலை உறுதிப்படுத்திக் கொண்டன. 'இனியும் நித்திரை கொள்ள முடியாது. தொழிலுக்குப் போக வேணும்.' என்று எண்ணிக்கொண்டு மணிமேகலை படுக்கையிலிருந்து எழுந்தபடி, பாயைச்சுருட்டி நிலத்தில் இரண்டு தட்டுத் தட்டியபடி மூலையில் கொண்டுபோய்ச் சாத்தினாள்.

அவளது பத்து மாதப் பச்சிளங் குழந்தை இன்னும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தது. குழந்தையைத் தூக்கி குடிசையின் விட்டத்தில் கட்டப்பட்டிருந்த சேலைத் தூளியில் போட்டுக் கொண்டு மண்குடத்திலிருந்த தண்ணீரை ஒரு கோப்பைக்குள் ஊற்றி முகம் கழுவிவிட்டு வந்தவள் கையோடு அடுப்பை மூட்டித் தேனீர் தயாரிக்கத் தொடங்கினாள்.

"புள்ள... மணிமேகல கொஞ்சம் வாமேன!" தகப்பனின் குரல் கேட்டு தேனீர் ஊற்றுவதற்காக எடுத்த வடியும் கையுமாக அவள்வந்ததும், "அந்தத் தடியை எடுத்துத்தா" என்றார். அவரது ஊன்றுகோல்கள் இரண்டும் மூலையில் சாத்தப்பட்டிருந்தன. அதை மணிமேகலை எடுத்துக் கொடுத்ததும், அவர் அதன் உதவியுடன் முற்றத்திற்குப் போனார். அங்கே நின்ற வேம்பு மரத்தின் குச்சியொன்றை ஒடித்து பல்துலக்கியபடி மணற்கும்பலில் குந்திக் கொண்டார்.

"எங்கப்பா இருக்கிறியள்... தேத்தண்ணி ஊற்றி வச்சிருக்கன். கெதியாய் வந்து குடியுங்கோ!" மணிமேகலை குசினிப்பக்கம் இருந்து கூப்பிட்டாள். பல் துலக்கிய கையோடு குடத்திலிருந்த நீரை வார்த்து முகம் அலம்பிக் கொண்டார்.

'என்ன இந்த மனுசன் இவ்வளவு அவசரமாக வெளிக்கிடுது... எங்க போகப் போறாரோ?' மணிமேகலை மனசுக்குள் எண்ணிக் கொண்டாள்.

"புள்ள நான் ஒருக்கால் ஆஸ்பத்திரிக்குப் போறன்... ஆப்பிரேசன் பண்ணியும் ஆறுமாசமாகுதல்லோ... டாக்டரிட்டக் காட்டினா நல்லது தானே..." அவளது வினாவிற்குரிய விடை கிடைத்தது.

மணிமேகலையின் கணவன் ஒன்றரை வருடத்திற்கு முன்னர் கருங்கல் உடைக்கும் ஓர் இடத்தில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் அந்த இடத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு இரையானான். அந்த வேதனையிலிருந்து மீள்வதற்கிடையில் தந்தையின் சர்க்கரை வியாதியின் காரணமாக அவரது ஒரு காலை துண்டிக்க வேண்டி ஏற்பட்டுவிட்டது. அதனால் அவரும் தான் செய்து வந்த மீன்பிடித் தொழிலைக் கைவிட்டார்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல அவளின் நிலை ஆகிவிட்டது. இருவரின் உழைப்பில் வாழ்ந்த அவள் குடும்பம் திடீரென வறுமையின் எல்லைக்குப் போய் நின்றது. அவளால் தன் வயிற்றை மட்டுமல்ல, அவள் குழந்தை, தகப்பன் என இருவரையுமே காப்பாற்ற வேண்டிய நிலை. தன் கணவன் வேலை செய்த இடத்தில் போய் தானும் தொழில் செய்யத் தொடங்கினாள். அதில் கிடைக்கும் வருமானம் தான் அவர்களது இப்போதைய குடும்ப வண்டியின் அச்சாணி.

"ஐயா... வெளிக் கிட்டியளோ?" வெளியிலிருந்து ஒரு குரல் கேட்டது. "நமமட குணம் வந்திடடான் போல... அவனோட சைக்கிளில போனால் ஆஸ்பத்திரியடியில இறங்கிடுவன்... உடம்புக்கு ஏலுமானளவு வேல செய் புள்ள. கனக்க கஸ்டப்படாத... நான் வாறன்" அவரது கவலையெல்லாம் மணிமேகலையைப் பற்றித்தான் இருந்தது. அவர் சென்று மறையும் மட்டும் வீதியில் வந்து நின்றவள் குழந்தை அழும் சத்தம் கேட்கவே குடிசைக்குள் புகுந்து மேசையில் ஊற்றி வைத்திருந்த தேனீரை எடுத்து பருகக் கொடுத்தாள். குழந்தை அதைக் குடித்து முடித்ததும் தோளில் போட்டு மெதுவாகத் தட்டி நித்திரையாக்கிவிட்டு, மீண்டும் தூளியில் போட்டுவிட்டு வேலைக்குப் போவதற்காக சேலை மாற்றிக் கொண்டாள்.

நேற்று இரவு வாங்கி வைத்திருந்த பாணில் துண்டொன்றை வெட்டி எடுத்து கடித்துக் கொண்டு தேனீரைப் பருகினாள். அப்பொழுது தேனீர் நன்றாகவே ஆறிப் போயிருந்தது. சாப்பிட்டு முடிந்ததும் இரண்டு சுண்டு அரிசியை அரிக்கன் சட்டியில் கொட்டி நன்றாக அரித்துவிட்டு அடுப்பை மூட்டி சோற்றை ஆக்க ஆரம்பித்தாள். 'இப்ப சோற்றை ஆக்கிவைத்துவிட்டுப் போனால், மதியம் வந்து ஏதாச்சும் ஒரு இலைக்கறியை ஆக்கிவிடலாம்' என்று எண்ணிக் கொண்டாள். சோறு நன்றாகப் புழுங்கியதும் உலை மூடியினால் மூடிவிட்டு, குழந்தையைத் தூக்கிக் கொண்டு குடிசைக் கதவைச் சாத்தி கயிற்றினால் கட்டிவிட்டு வீதிக்கு வந்தாள்.

"என்னடி மணிமேகல ஆஸ்பத்திரிக்கா போகப் போகிறா? அப்பாவுக்கு வருத்தம் உரமா? ஆப்பிரேசன் தியேட்டருக்குக் கொண்டு போறாங்க... நானும் ஆஸ்பத்திரியில இருந்துதான் வாறன். என்ர பேரப் பிள்ளைக்கு இரண்டு நாளா ஒரே சத்தியும் காய்ச்சலும். வாட்டில தான் வச்சிருக்கினம். இரவு முழுக்க அங்க தான் நிண்டுபோட்டு சாப்பாடு எடுக்க இப்பத்தான் வீட்ட போறன். நீ கெதியாப் போ!" அவளை ஒரு வார்த்தை கூடப் பேசவிடாமல் பக்கத்து வீட்டுப் பொன்னாச்சி ஒரு விளக்கத்தையே கதைத்து விட்டுப் போனாள். மணிமேகலைக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

'அப்பா நல்லாகத்தானே போனவர். யாரையோ இந்தக்கிழவி பார்த்திட்டுதுபோல' தனக்குள் அவள் சமாதானம் சொல்லிக் கொண்டாலும் அவளது இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. வேலைக்குப் போக நினைத்தவள் அந்த யோசனையைக் கைவிட்டு குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டு நன்றாக அணைத்தபடி விறுவிறுவென்று ஆஸ்பத்திரிக்குப் போனாள்.

அவளது கால்கள் ஆப்பிரேசன் தியேட்டரை நோக்கி நடந்தன. அங்கே கண்ணாடிக்குள்ளாக பார்வையை நோக்கிய போது தனது தகப்பனின் முகம் நன்றாகவே தெரிந்தது. அவரைச் சூழ முன்று பேர் நிற்பது தெரிந்தது. அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. என்ன விஷயமென்று கேட்பதற்கு எந்த டாக்டரும் அருகில் இல்லை. கண்களில் நீர் பெருக்கெடுத்தது. அருகிலிருந்த வாங்கில் குந்திக் கொண்டாள். அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த பெரியவர் தன் மனைவியிடம் பேசிக் கொண்டிருப்பது அவள் காதுக்கு மெதுவாகவே எட்டிக் கொண்டிருந்தது. "கவலைப்படாத கனகம். இவ்வளவு கெதியாக நம்மட மகனுக்குக் கிட்னி கிடைக்குமெண்டு எதிர்பார்க்கல்ல. இந்தப் பெரியவர் குடும்பக் கஸ்டத்தால தானாம் கிட்னியைத் தாறனெண்டு முடிவெத்தவராம். நம்ம கொடுக்கிற அறுபதினாயிரத்தை விட நேரத்திற்கு அவர் செய்கிற உதவிதான் கனகம் பெரிசு." அவரது ஒவ்வொரு சொற்களும் மணிமேகலையின் இதயத்தில் அம்பாய்த் துளைத்தன.

'ஏனப்பா இப்படியொரு முடிவு எடுத்தனீங்கள்?' ஓடிப்போய் அவரைக் கட்டியணைத்துக்கொண்டு அழவேண்டும் போல் இருந்தது அவளுக்கு!

இலக்கிய நயம்

கவிதை எழுதிச் செல்லும் காற்று

தருவது
முழுமதியன்

தனியே அமர்ந்திருந்தான் சஞ்சீவன். தனிமை அவனுயிரைத் தணலாகச் சுட்டது.

நேற்று நிலாமுகம் காட்டி நித்திரை யைக் கெடுத்தவளின் நினைவு நெஞ்சுக்குள் தகித்தது.

கொதிநீர்க் குமிழிகளெனப் பொங்கின எண்ணங்கள்.

நீராவியென வெளியேறியது ஒவ்வொரு மூச்சும்.

என்ன செய்வதென்று தெரியாமல் நிலத்தில் ஊன்றியிருந்த கைகளை எடுத்து உள்ளங் கைகளைத் தேய்த்துவிட்டு விரல்களைக் கோர்த்தபடி தலைக்கு மேலே தூக்கிச் சோம்பலை முறித்தான்.

"நீ
அழகாய் முறித்த
சோம்பலில்
ஒடிந்தவன் நான்"

யாருடையதோ கவிதை வரி ஞாபகத்தில் வந்தது.

பெருமூச்சை விட்டு, மீண்டும் கைகளைப் பின்புறமாக நிலத்தில் ஊன்றிக் கொண்டான்.

நேற்று இந்நேரம் அவளுடன் பேசிக் கொண்டிருந்தான்; பேசியவை என்னவென்று தெரியாமலே.

'அவன் காதலும் அவள் காதலும்தான் பேசிக் கொண்டிருந்தன. அவர்களிருவரும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவள் இதழ்களின் ஈரத்தைக் காற்றால் ஏன் காயச் செய்ய முடியவில்லை? என்று இவன் யோசித்துக் கொண்டிருந்தான்.

"ம்... போகவேணும். வந்து முப்பது நிமிஷமாச்சு!" என்று அவள் முணுமுணுத்தாள்.

'முப்பது' சொல்லையில் குவிந்த அவள் உதடுகளை... முத்தத்துக்கா என்று இவன் நினைத்தான்.

இருவருக்கும் இடையே சமுத்திரமும் நாகரிகமும் போட்டிருந்த வேலியைப் பிய்த்தெறிந்து விடுவோமோ என்று இவன் பயந்தான்.

இவனுள் நிகழ்ந்த அனல் மின் உலையின் வெப்பக் கதிர் இயக்கங்களை உணராதவள் போல அவள் கன்னம் மறைத்து விழுந்திருந்த கூந்தலை சிறு தலையசைப்பில் பின் தள்ளினாள்.

மாலைநேரப் பொன்மஞ்சள் நிறத்தில் மின்னிய அந்தக் கன்னங்களில் வீழ்ந்து தழுவிய சுகத்தை இழந்துவிட விரும்பாத கூந்தல் மீண்டும் விழுந்து கன்னம் மறைத்தது.

இப்போது விரல்களால் அதை ஒதுக்கினாள்.

வீணை வாசிப்பாள் போலும். நீண்ட விரல்களை வீணையோடு சேர்த்தே மனம் நினைக்க விரும்பியது.

'போக வேண்டாமா?" என்றாள் சிணுங்கலாக.

வீணையைப் பொறாய் எண்ணிய மனம் வெட்கப்பட்டது.

எந்தத் தேர்ந்த வாசிப்பாளன் விரல்களிலும் வீணை இப்படிச் சிணுங்க முடியாது.

சிவந்த இதழ்களின் ஈரத்தினூடு தோய்ந்து புறப்பட்டு வருகிற வார்த்தைகளைப்போல காற்றில் தேனைக் கலந்துவிட வீணை நரம்புகளுக்கு முடியுமா?

உயிர்ப்போடு மினுங்கித் துடித்த அந்த உதடுகளையே பார்த்திருந்தான் சஞ்சீவன்.

தன் இதழ்களைக் காற்றாக்கி விட முடியுமா என்று தவித்தான். அவள் அனுமதியின்றி சமுகத்தின் கட்டின்றி சென்று அதில் கவிதை எழுதலாமல்லவா!

மலர் இதழில், நீர்பரப்பில் தன் கவிதைகளை எழுதிச் செல்லும் காற்று. அவள் இதழ்களிலும் எழுதிக் களிக்கிறது.

நதியில் நீருறிஞ்சி, மலரில் தேனுறிஞ்சும் தென்றல் அவள் இதழ்களிலும் நீரெடுத்துத் தேன் குடிக்கிறது.

இவன் கண்களில் நிறைந்து விஸ்வரூபமெடுத்திருந்த அவள் இதழ்கள் பிரிந்து மெல்ல அசைந்தன.

"போக வேண்டுமா?"

"இல்லை, உன்னை எப்படிப் பிரிந்து நான் வாழ முடியும்? வெறும் உடல் எப்படித் தனித்துச் செல்லும்? நீரோடு சேர்ந்த நீராகக் கலந்து விட்ட உயிர்த் திரவத்திலிருந்து என்னுயிரை மட்டும் எப்படிப் பிரிக்க முடியும்...?"

அவன் சொல்லச் சொல்ல அவள் மேலும் ஏங்க ஆரம்பித்தாள். அவள் போகத்தான் போகிறாள் என்பது உணர்ந்து மேலும் கலங்கினான்.

"குவளை மலர்களின் மணம் வீசுகிற இருண்டடர்ந்த கூந்தலைக் கொண்டவளே! ஆம்பல் மலரின் வாசனையும் தேன் மொழியும் நீர் சுவறும் சுளையும் கொண்ட சிவந்த இதழ்களை உடையவளே! தாமரை மலரின் மகரந்தங்களை போல சிறிய சிறிய பல தேமல் புள்ளிகளுடைய மேனியெழில் நங்கையே! மாமை நிறங் கொண்டு என் மனதை அள்ளியவளே! 'நான் உன்னைப் பிரிய முடியாது. நீ அஞ்ச வேண்டாம்' என்ற என் சொல்லைக் கேட்டு நீ அஞ்சாதே!

உன்னை விட்டு எனக்கு வாழ்க்கை இல்லை.

குறுகிய கால்களையுடைய அன்னப் பறவைகள் மணல் முட்டிலே படுத்துறங்குகின்ற கரைகளைக் கொண்ட, கடலால் சூழப்பட்ட இந்த உலகமே கிடைத்தாலும் அதை மறுத்து நான் உன்னையே கேட்பேன். நீதான் கண்ணே எனக்கு முக்கியம். நீ கிடைத்தால் எனக்கு இந்த உலகமே கிடைத்த மாதிரிதானே!"

குவளை நாறும்
குலை இரும் கூந்தல்
ஆம்பல் நாறும்
தேம்பொதி துவர்வாய்க்,
குண்டு நீர்த் தாமரைக்
கோங்கின் அன்ன
நுண்பல் தித்தி மாஅ யோயே!
நீயே அஞ்சல் என்ற
என் சொல் அஞ்சலையே!
யானே, குறுங்கால் அன்னம்
குவவு மணல் சேக்கும்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்,
விடல் சூழலன், நான்
நின்னுடைய நட்பே.

(குறுந்தொகை : 300)

ஸ்போர்ட்ஸ்

சமநிலை டெஸ்ட் தொடர்

இந்தியா-ஸிம்பாப்வே அணிகளுக் கிடையே ஹராரேயில் நடந்த இரண்டா வது டெஸ்ட் போட்டியில் ஸிம்பாப்வே 4 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

இதன் மூலம் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமன் செய்யப்பட்டுள்ளது.

ஹராரேயில் தொடங்கிய இரண்டா வது டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 237 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்தியா சார்பாக ட்ராவிட் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும் தாஸ் 57 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸிம் பாப்வே 315 ஓட்டங்களை எடுத்தது. கிராண்ட் ஃபிளவர் சிறப்பாகத் துடுப் பெடுத்தாடி 86 ஓட்டங்களை எடுத்தார். ஆஷிஷ் நெஹ்ரா, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் ஸிம்பாப்வேயை விட 78 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 234 ஓட்டங் களை மட்டுமே பெற்றது. தாஸ் அதிகபட்ச மாக 70 ஓட்டங்களை எடுத்தார். டெண்டுல் கர் 69 ஓட்டங்கள் எடுத்தார்.

ஸிம்பாப்வே சார்பாக பிளிக்னோட் 5 விக்கெட்டுக்களையும், ஹீத் ஸ்ட்ரீக் 4 விக் கெட்டுக்களையும் வீழ்த்தினர். 156 எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற குறுகிய இலக் குடன் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய ஸிம்பாப்வே முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியை எட்டியது. கார்லிஸில் 62 ஓட்டங்களை எடுத்து வெற்றிக்கு வழிசமைத்தார்.

இந்த வெற்றி ஸிம்பாப்வேக்குக் கிடைத்த ஆறாவது வெற்றியாகும். இது வரை 52 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 26 தோல்விகளையும் 6 வெற்றிகளையும் கண்டுள்ள ஸிம்பாப்வே 20 போட்டிகளை வெற்றி தோல்வியின்றி முடித்துள்ளது.

ஸிம்பாப்வேக்கு முன்றாவது முறையாக விஜயம் செய்திருக்கும் இந்தியா இதற்கு முன் 92ம் ஆண்டும் (ஒரு டெஸ்ட் போட்டி. இது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது) 98ம் ஆண்டும் (ஒரு டெஸ்ட் போட்டி. இதில் ஸிம்பாப்வே வெற்றி பெற்றது) சுற்றுப்பயணம் மேற்கொண்டது.

தாஸுக்கு நிர்வாக அதிகாரி பதவி

ஸிம்பாப்வே அணிக்கெதி ரான முதல் டெஸ்ட் போட்டியில் ஆட்டநாயகன் விருதுபெற்ற சிவ் சுந்தர் தாஸுக்கு, இந்தியாவில் உள்ள செயில் நிறுவனத்தில் நிர் வாக அதிகாரி பதவி கொடுக்க விருப்பதாக மத்திய உருக்குத் துறை இணை அமைச்சர் பிரஜா கிஷோர் திரிபாதி அறிவித்துள் ளார்.

ஸிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி யிலும் நன்கு பிரகாசித்த தாஸ் ஒரிஸ்ஸா வைச் சேர்ந்தவர். ஒரிஸ்ஸா மாநிலத்தில் இருந்து இந்திய அணி யில் இடம்பெற்றுள்ள இரண்டாவது வீரர் இவ ராவார். இவருக்கு முன் இந்திய அணியில் இடம் பிடித்தவர் வேகப்பந்து வீச்சாளர் தெபஸிஷ் மொஹந்தி.

24 வயதான தாஸ் வலது கை மட்டை யாளர் ஆவார். 2000-01 பருவகாலத்தில் பங் களாதேஷிற்கெதிரான டெஸ்ட்டில் இவர் அறிமுகமானார்.

மலேரியாவால் மரணமான வீரர்

ஸிம்பாப்வே கிரிக்கெட் வீரர் ட்ரெவர் மடோன்டோ மலேரியா காய்ச்ச லால் கடந்த 11ம் திகதி மரணமானார்.

24 வயதான மடோன்டோ ஸிம்பாப்வே அணியில் விளையாடத் தேர்வு செய்யப்பட்ட முதலாவது கறுப்பின துடுப்பாட்ட வீரர் ஆவார்.

இதற்கு முன்னதாக ஹென்றி ஒலோங்கா, மடம்பனாட்லோ ஆகிய இரு கறுப்பின வீரர்கள் ஸிம்பாப்வே அணியில் இடம்பிடித்திருந்தாலும், இவர்கள் இருவரும் பந்துவீச்சாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட்டில் நவீன முறை

டென்னிஸ் போட்டிகளில் பந்துகள் கோட்டைத்தாண்டி விழுந்தால் ஒலி எழுப்பும்படி டென்னிஸ் மைதானங்களில் விசேட கருவி பொருத்தப்பட்டுள்ளன. இதே போல் பந்து வீச்சாளர் பந்து வீசும் போது கோட்டைத் தாண்டியவுடன் ஒலி எழுப்புமாறு கருவி பொருத்தப்படவுள்ள தாக இங்கிலாந்தின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் இயன் பொத்தம் தெரி வித்துள்ளார்.

அண்மையில் பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடந்த 2வது டெஸ்ட் போட்டியில் 4 இங்கிலாந்து வீரர்களுக்கு நோ-போலில் அவுட் கொடுக்கப்பட்டதை அடுத்தே இந்த நவீனமுறை பயன்படுத்தப்பட வுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிந்தியா பதில்கள்

★ "ஒரு பொண்ணு ஒண்ணு நான் பார்த்தேன். சென்டி மீற்றர் சிரிக்கச் சொல்லிக் கேட்டேன். அவ சிரிச்சா சிரிப்பில நூறு பேரு செத்துப் போயிட்டா" பாட்டுக் கேட்டீர்களா? இப்படியே சிரித்தால் நாட்டில் மக்களே இருக்க மாட்டார்களே, என்ன நினைக்கிறீர்?

ஐ.அஸ்மி அஹமட், திக்குவல்லை.

நான் அப்படி நினைக்கவில்லை. 'உம்' மென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிற பெண்களைப் பார்த்தால் எவ்வளவு வருத்தமாயிருக்கிறது! சென்டி மீற்றருக்கென்ன கிலோ மீற்றருக்கே சிரிக்கட்டும். என்னொத்த இளையவர்களை (ம்...ம்...!) சந்தோஷத்துடன் வாழவைக்கவும், சூழலுக்கு இதமூட்டி ஒளி துலங்கச் செய்யவும், இளம் பெண்கள் சிரித்தால்தான் முடியும். ஆதலினால் சிரித்து வைப்பீர் நங்கையரே! அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்.

⊙▣⊙

★ புலிகள் இயக்கத்தினரே பிரிந்து தங்களுக் குள் அடிபட்டுக் கொள்கிறார்களாமே?

எம்.ஐ.எம். முஹமட், கொழும்பு-10.

கவலைப்பட வேண்டிய அந்தச் செய் தியை உண்மைதானா என்று நிச்சயப் படுத்திக் கொள்ள முடியவில்லை. அமீபா பிளப்பதுபோல் கூறுகளாகப் பிரிந்து நமக் குள்ளேயே மோதிச் சீரழியும் வரலாறு ஒரு சாபம் போல நம்மைத் தொடர்வது மகிழ்ச்சிக்குரியது அல்ல.

⊙▣⊙

★ பதினொரு தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டு அறிக்கைகள் விட்டார்களே, இப்போது என்ன ஆகிவிட்டார்கள்?

ச. பாரதிதாசன், பதுளை.

புலிகள் அடங்கலாக ஒரு தமிழ்க் கட்சி அணி உருவாகலாம். அல்லது அதற்கு மாறாக ஓர் அணி உருவாகலாம். இரண்டும் கெட்டானாக உருவாக்கிக் கொள்ளப்படும் தமிழ்த் அணிகளுக்கு இன்றைய அரசியல் சூழலில் எந்த முக்கியத்துவமும் இல்லை. தவிரவும் அவர வர் இருப்பைக் காத்துக் கொள்ள வலிந்து ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகள் நிலைப்ப தில்லை. கட்டாயச் சூழலில் தோன்றும் ஒற்றுமை உணர்வு உளப்பூர்வ மானதல்ல. மற்றவர்களை மாட்ட வைத்து முதலில் எப்படி நாம் தப்பித் தலை நிமிரலாம் என்பதையே ஒவ்வொருவரும் முக்கியமாக நினைப்பார்கள். நமக்குத் தேவையான ஒற்றுமையை இன்று மக்கள்தான் கொண்டு வரவேண்டும்.

⊙▣⊙

★ சிந்தியாவுக்குப் பேச்சாற்றல் உண்டா?

கு.ரோகிணி, மட்டக்களப்பு.

இதன் மறை கருத்தாக 'எனக்கு ஏதோ கொஞ்சம் எழுத்தாற்றல். இருப்ப தாக நீங்கள் ஒப்புக் கொண்டிருப்பதற்கு என் மனங்கனிந்த நன்றி. மற்றப்படி, இலங்கையில் கேட்போரைக் கவர்ந்திழுக்கும் விதமாகப் பேசக்கூடிய பத்துப்பேரின் லிஸ்ட்டை எடுத்தீர்களானால், அதில் நான் பதினோராவது ஆளாய் வருவேன். போதுமா?

⊙▣⊙

★ நோர்வேக்காரர்கள் அரசை வழிக்குக் கொண்டு வந்து விடுவார்களா?

சி.சிவபாலன், உடப்பு-4.

ம்... நாம் நம்ப விரும்புவதைத்தான் நாம் நம்புகிறோம்.

⊙▣⊙

★ நம் நாட்டுக் கலைஞர்களுக்கு விடிவு எப்போது சிந்தியா?

ஏ.என்.எம். ஜவாத், புத்தளம்.

இரவல் படுக்கையிலிருந்து எழுந்திருக் கும்போது!

⊙▣⊙

★ மறுபிறவி உண்டென்றால், அடுத்த பிற வியில் நீங்கள் எதுவாகப் பிறக்க விருப்பம்?

ஆர்.எ.ப. நஸ்லியா, கோடிவளவு, நிககொள்ள.

அடுத்தவர் சுமைகளைச் சுமந்தபடி, பிறருக்குத் தீங்கு செய்ய நினைக்காத கழுதையாக!

⊙▣⊙

★ சிந்தியா, நான் ஒரு பாடகராக வேண்டு மென்று ஆசை. நான் பாடும் பொழுது பின்னணிக் குரல்களும் சேர்ந்துகொள் கின்றன. இதைத் தவிர்க்க லேசான வழி ஒன்று சொல்வீர்களா?

எம்.இமாஜ், கஹட்டகஸ்திகிலிய.

நீங்கள் பாடகராக வேண்டுமென் றால், பாடும் போது கேட்கும் பின்னணிக் குரல்களைத் தவிர்க்க வேண்டும். பின்ன ணிக் குரல்களைத் தவிர்க்க வேண்டுமா னால் பாடுவதை நிறுத்த வேண்டும். பாடுவதை நிறுத்த வேண்டுமென்றால் பாடகராகும் ஆசையை....

(இப்படி பல்வேறு ஆசைகளைக் கை விட்ட அனுபவத்தில் சொல்கிறேன். 'ஆசை அறுமின் ஆசை அறுமின்' என்று சொல்லிய பெரியோர்களின் வாக்குக்கு மதிப்பளிப்ப தாக நீங்கள் உங்கள் மனதுக்குச் சொல்லிக் கொள்ள வேண்டும்)

⊙▣⊙

★ மிருகங்களைவிட மனிதன் மேலானவனா?

சி. சதாசிவம், கட்டுநாயக்கா.

ஓர் உதாரணம்: குடிப்பது எல்லா உயிர்களுக்கும் பொது. குடிகாரனாவது மனிதன் மட்டும்தானே!

⊙▣⊙

★ அஜீத்தின் 'சிட்டிசன்' எப்படி?

மௌ. மனோ, ஹற்றன்.

அஜீத்தை இனி கல்லூரி மாணவனாய்

★ இரவு எட்டரைக்கு சனி, ஞாயிறில் சுவர்ணவாகினியில் தமிழ் நாடகம், ரூபவாஹினி 'ஐ'யில் எந்நாளும் தமிழ் நாடகம். எப்படியிருக்கிறது சிந்தியா?

இ. மாலதி, கொழும்பு-13.

சூரியனும் தமிழ் ஒளிபரப்பை ஆரம் பிக்கவிருக்கிறதாம். சபாஷ், சரியான போட்டி!

⊙▣⊙

வந்து காதல் செய்யும் ஹீரோவாய் கற் பனை பண்ண முடியாது என்று தோன்றி யது.

குணாவாக, அவ்வை சண்முகியாக, இந்தியனாக வருவதற்கு கமல் எவ்வளவு காலத்தின் பின் துணிந்தார்! அந்த இடத் திற்கு வர அஜீத் கொஞ்சம் அவசரப் பட்டு விட்டாரோ!

⊙▣⊙

மன்னன் மகேந்திரனுக்கு ஏற்பட்ட மோகம்

மன்னாதி மன்னன் 63

விக்கிரமாதித்த மன்னன் காடாறு மாதம் புறப்பட்ட வேளையில் அவரை ஏழரைச் சனியன் பீடித்துக் கொண்டது. காளி காம்பாளின், கடாட்சத்தினால் சனி பகவானுடைய பாதிப்பு விக்கிரமாதித்த மன்னனுக்கு அதிகமாக இருக்கவில்லை. மதுராபுரி மன்னனின் அரண்மனையில் போய்ச் சேர்ந்து, ஏழரையாண்டுகள் அங்கேயே வசிக்கும்படி சனி பகவான் விக்கிரமாதித்தனிடம் கூறுகிறார்.

மதுராபுரி மன்னனின் தளபதியான விக்கிரமாதித்தனுக்கு தினசரி ஆயிரம் பொன் வேதனமாக மன்னரால் கொடுக்கப்பட்டது.

முன்பொருமுறை விக்கிரமாதித்தன் தேவேந்திரனின் சபைக்கு போயிருந்தபோது, விக்கிரமாதித்தன்மீது மோகம் கொண்ட இரத்தினமாலை, தேவேந்திரனால் சபிக்கப்பட்டு, விக்கிரமாதித்தன் மதுராபுரி செல்லும் வழியில் அவருடன் இணைகிறாள். ஆனால் அவளுடைய உருவம் பகலில் அருவருக்கத்தக்க ஒன்றாக இருந்தது. இரவானதும் அழகான இளம் பெண்ணாக மாறி விடுவாள்.

மதுராபுரியில் விக்கிரமாதித்தன் தங்குவதற்கு கொடுக்கப்பட்ட மாளிகையில் இரத்தினமாலையுடனும் வேதாளத்துடனும் தங்கியிருந்தார். இடையில் முற்பிறவியில் மன்னர்களாகவிருந்து ஒரு முனிவரின் சாபத்தால் பாம்பாகவும் தவளையாகவும் மாறியிருந்து விக்கிரமாதித்தனால் சாப விமோசனம் பெற்ற அனந்தன், ஜலந்திரன் ஆகிய இருவரும்கூட விக்கிரமாதித்தனுடன் வசித்து வந்தார்கள்.

தளபதியாகவிருந்த விக்கிரமாதித்தன் ஆதித்தன் என்ற பெயரில் அழைக்கப்பட்டார்.

இரவு வேளையில் மாளிகைக்கு வெளியில் வேதாளம் காவல்காக்கும். அனந்தன் மாளிகையின் வாயிலில் பாம்புருவமாக வாயைத் திறந்து கொண்டு காவல்காப்பான். ஜலந்திரன் ஒரு கூடாரத்தைப் போல தன்னை மாற்றிக் கொண்டு வாயிற்புறத்தில் அமர்ந்திருப்பார்.

மன்னருடைய மெய்காப்பாளர்களான

கார்க்கோடகன், மற்றும் அவனுடைய சகோதரனான கோடகன் என்பவனும் விக்கிரமாதித்தனிடம் நெருங்கிப்பழகி வந்தார்கள். அரசன் அன்றாடக் கடமைகளை முடித்துவிட்டு இரவில் அந்தப்புரம் சென்றதும், மெய்காப்பாளர் இருவரும் விக்கிரமாதித்தனுடன் அவருடைய மாளிகைக்கு வந்து சற்று நேரம் உரையாடி விட்டுத் திரும்புவார்கள். விக்கிரமாதித்தன் இல்லாதபோது, கார்க்கோடகனையும் கோடகனையும் அனந்தனும், ஜலந்திரனும் உள்ளே அனுமதிப்பதில்லை. இதனையிட்டு அனந்தன் விக்கிரமாதித்தனிடம் புகார் சொன்னான்.

"தளபதியாரே! ஒருநாள் தாங்கள் அரண்மனை வருவதற்கு தாமதமாகியது. தங்களை அழைத்து வரும்படி மன்னர் கட்டளை விட்டார். நானும் என் தம்பியும் தங்களுடைய மாளிகைக்கு வந்தபோது, அனந்தனும் ஜலந்திரனும் எங்களை உள்ளே அனுமதிக்காமல் பயங்காட்டி துரத்திவிட்டனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தங்களை அவசரமாக நாங்கள் காண வேண்டி வந்தால், தயவுசெய்து எங்களை உள்ளே அனுமதிக்கும்படி அனந்தனிடமும் ஜலந்திரனிடமும் தயவு செய்து சொல்லி வையுங்கள்" என்று கேட்டுக் கொண்டான்.

விக்கிரமாதித்தனும் அனந்தனிடமும் ஜலந்திரனிடமும் அவ்வாறே கூறிவைத்தார்.

மற்றுமொருநாள் கார்க்கோடகனும் அவன் தம்பியும் விக்கிரமாதித்தனின் மாளிகைக்கு வந்திருந்தபோது, மாளிகையின் உள்ளே நடமாடிய இரத்தினமாலையை கண்டு அவளுடைய பேரழகில் மயங்கிவிட்டனர். அரண்மனைச் சென்று மன்னன் மகேந்திரனைக் கண்டு, தாங்கள் தளபதியின் வீட்டில் கண்ட பெண்ணின் அழகைப்பற்றி விவரித்தனர்.

"அப் பெண் நிச்சயமாக ஒரு மானிடப் பெண்ணாக இருக்க முடியாது. அவள் தேவ கன்னியாகத்தான் இருக்க வேண்டும்" என்று கூறினார்கள். அவர்களிருவரும் வர்ணித்த முறையைக் கேட்டு, மன்னன் மகேந்திரன் அந்தப் பெண்ணைக் காணாமலே அவள்மீது மோகம் கொண்டான்.

உடனடியாக அவ்வழகியை தான் போய் பார்க்க வேண்டும் என்று துடித்தான். அடுத்த நாள் மாலையாகும்வரை பொறுத்திருக்கும்படி இருவரும் கூறி வைத்தனர்.

அடுத்தநாள் மாலையில், கோடகனுடைய உடைகளை மன்னனுக்கு அணிவித்து, கார்க்கோடகன் மன்னனையும் அழைத்துக் கொண்டு விக்கிரமாதித்தனின் மாளிகைக்கு போய்ச் சேர்ந்தனர்.

அங்கு உரையாடிக் கொண்டிருக்கும்போது கோடகன் போல் வேடமிட்டிருந்த மன்னன் அரண்மனையினுள்ளே தன் பார்வையைச் செலுத்திலும அந்த அழகிய பெண்ணைக் காண முடியவில்லை.

விக்கிரமாதித்தன் நீண்ட நேரம் உரையாடிவிட்டு தான் படுக்கைக்குச் செல்லப் போவதாகக் கூறிக்கொண்டு மாளிகையின் உள்ளே சென்றார். கார்க்கோடகனும் மன்னனும் தாங்களும் தங்கள் இருப்பிடம் திரும்பப் போவதாகக் கூறிக்கொண்டு பாசாங்கு செய்தார்களேயல்லாமல் அவ்விடத்தைவிட்டு வெளியேறவில்லை. ஒரு மூலையில் பதுங்கியிருந்துவிட்டு விக்கிரமாதித்தனும் இரத்தினமாலையும் பள்ளியறை சென்றதும், ஒரு சாளரத்தினூடாக மன்னனுக்கு அந்தப் பெண்ணைக் காட்டினான். அவளுடைய அழகைக் கண்டதும் மன்னன் மகேந்திரன் காமவெறி தலைக்கேறி தடுமாறத் தொடங்கிவிட்டான். அவரை ஆசுவாசப்படுத்தி அங்கிருந்து, அரண்மனைக்கு மன்னனை அழைத்துச் செல்வது கார்க்கோடகனுக்கு பெரும் பாடாகி விட்டது.

அரண்மனை வந்ததும் மன்னர் தனது தலைமை அமைச்சரை அழைத்தார். ஆதித்தனின் மனைவியினுடைய பேரழகில் தான் மதிமயங்கி விட்டதாகவும், எப்படியாவது அவளைத்தான் அடைவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு கேட்டான். மந்திரியோ எவ்வளவோ கதைகளை மன்னனுக்குச் சொன்னான்.

"ஆதித்தன் மாபெரும் வீரன். அவன் மனைவி மீது மோகம் கொண்டு தகாதவுறவு வைத்துக் கொண்டால், அதனால் பேராபாயம் ஏற்படும்" என்றும் அறிவுறுத்தினான்.

அமைச்சனுடைய அறிவுரையை அரசன் கேட்கத் தயாராயில்லை. "அவளை அடைந்தால் உயிர் வாழ்வேன். இல்லாவிட்டால் நான் உயிர் வாழ மாட்டேன். ஆகவே அவளை நான் அடைவதற்கு உரிய ஏற்பாட்டைச் செய்வது உன் பொறுப்பு" என்று மன்னன் கூறிவிட்டான்.

அமைச்சர் பலவாறாகச் சிந்தித்து "ஆதித்தனை சில நாட்களாவது மதுராபுரியை விட்டு வெளியே எங்கேயாவது அனுப்பி வைத்தால், அந்த இடை வெளியில் மன்னன் அந்த அழகியை அடைவதற்கு முயற்சி எடுத்து பார்க்கலாம்" என்று அறிவுரை கூறினான்.

இவ்வாறு கூறி மன்னனுடைய காதில் இரகசியமாக ஒரு தகவலையும் கூறி வைத்தான்.

அடுத்தநாள் அரண்மனைக்கு ஆதித்தன் வந்ததும், அவரைத் தன்னிடம் அழைத்து "ஆதித்தா! இன்னும் சில நாட்களில் எனது மனைவியின் பிறந்த நாளன்று அவளுக்கு ஒரு முத்து மாலையை பரிசளிக்கப் போகிறேன். ஆனால் இங்கு பெறுமதியான முத்துக்கள் கிடைப்பதில்லை. சற்றுத் தொலைவில் முண்டக நகரம் என்றொரு ஊர் இருக்கிறது. ஓரக்கண் செட்டி என்ற ஒரு வர்த்தகன் இருக்கிறான். அவனிடம் தான் நல்ல முத்துக்கள் இருக்கின்றன என்று கேள்விபட்டிருக்கிறேன். உன்னிடம் ஓரிலட்சம் பொன் தருகிறேன். அங்கு சென்று அந்தச் செட்டியிடம் முத்துக்களையுப் பெற்று திரும்பி வரலாம்" என்று கூறினான்.

இதனைக் கேட்ட ஆதித்தன், "அரசே நாற்பது நாட்களில் நான் தங்களுக்கு வேண்டிய முத்துக்களைப் பெற்று வருகிறேன்." என்று கூறிவிட்டு அரண்மனைவிட்டு வெளியேறினான்.

அரசன் ஒரு இலட்சம் பொன்னும் ஆதித்தனக்குரிய நாற்பது நாள் சம்பளமான நாற்பது ஆயிரம் பொன்னும் கொடுத்து அனுப்பினான். அவற்றைப் பெற்றுக் கொண்டு மாளிகைக்கு வந்த ஆதித்தனாகிய விக்கிரமாதித்தன் இரத்தினமாலையிடமும் அனந்தன், ஜலந்திரன் ஆகியோரிடமும் அரண்மனையில் நடந்த சம்பவம் முழுவதையும் கூறி அவ்விருவரையும் இரத்தினமாலைக்கு காவலாயிருக்கும்படி சொல்லிவிட்டு வேதாளத்திலேறிக் கொண்டு முத்துக்கள் வாங்கிவரப் புறப்பட்டான்.

(மன்னன் வருவான்..)

இராஜகுமாரன்

காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை முடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:..... பெயர்:..... ஒப்பம்:.....

நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி

அபிமான வாசகர் போட்டியில் ஐந்தாவது: தருமர் சொன்ன பொய் எது? முடிவுத் திகதி ஜூன் 30. பெறுபேறுகள் ஜூலை இறுதிவாரத்தில்.

இப்பப்பாருங்கோ இப்பத்தையச் செய்திகளப் பாத்தால் செய்தியெண்டால் என்னவெண்டே குழம்பிப்போக வைக்குது. திருடனிட்டயே போய் திருட்டைப்பற்றிக் கேக்குமாப்போல யாரிட்டையும்போய் மைக்க நீட்டிட்டு செய்தி தயாரிக்கிற குறுக்கு வழியொண்டு இப்ப வந்திட்டுது. அதால பாருங்கோ, சுடச் சுடச் செய்தி தரலாமெண்டு நானும் பாத்துப் பாத்துக்கொண்டிருந்தால், வீஷயம் ஒப்பேறாது. இப்ப யாரும் சுடுறதாக் காணேல்ல. அதால, நானே ஒரு மைக்கத் தூக்கிக்கொண்டு களத்தில இறங்கிறதா முடிவுசெய்திட்டன். அப்பிடி எடுத்த செய்திகள் சிலதைச் சொல்லுறன் கேளுங்கோ.

இடக்கரையால ஓவடேக் பண்ணி, சிக்னல் பொயிண்டில மடக்கி வெட்டி, பேய்மெண்டால ஏறி வீழுந்து, யூ டேர்ன் எடுத்த ஓட்டோக்காரனிட்ட மைக்கை நீட்டிக் கேட்டன், "மாண்புமிகு ஓட்டோக்காரர் அவர்களே, தாங்கள் எங்கள் நாட்டு போக்குவரத்து வீதிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

அந்தக் கனவான் கௌரவமாகச் சொன்னார் "ஓய், எங்கய்யா வீதியிருக்கு? நா ஏரோடு ஓட்டோ, ஏம்பீழைப்புன்னு ஏம்பாட்டில ஓடுறேன். நீ இடையில குறோஸ்பண்ணி போக்குவரத்து வீதிகிதியின்னா நா எங்கசார் போறது? த்தா பார்! நா எனக்கின்னு ஒரு வீதி வைச்சிருக்கேன். அதுபடி நா ஓடிக்கிறேன். இந்த நாட்டுக்கு ஏதும் போக்குவரத்து வீதிகிதி இருந்தா நீ வேணுண்ணா அதுப்படி போய்க்க. ஆளவுட்டுட்டு சோளியப்பாரு, போ!"

"தங்கள் கருத்து மிகவும் அர்த்தபுஷ்ட்டியானது. தங்கள் சேவையை திறம்பட ஆற்ற அரசாங்கம் என்ன ஏற்பாடுகளைச் செய்து தரவேணுமெண்டு கருதுகிறீர்கள்?"

"மொதல்ல, உந்த சிக்னல் லைட்டுகளையெல்லாம் புடுங்கி எறிய்யா போய்யா. அப்புறமா, ஏதேனும் உருப்படியாப் பண்ணணுண்ணா..., இந்த கோல்றோட்டுக்கு நடுவுல, அதென்னய்யா ஏதோ புருஷன் பெண்சாதியப் பிரிச்சுப் போடறமாதிரி ஒரு சீமேந்துத் திட்டி? அதப்போய் வெட்டி எறி. மனுசனுக்கு நெனச்சவாக்குல ட்டேனெடுக்க ஏலாம நிண்டு தாச்சி மறிக்குது."

நல்லது நேயர்களே, நாம் இப்போது போக்குவரத்து சீர்கேடுகள் பற்றிய செய்தித் தொகுப்பைக் கேட்டோம். அடுத்து சுகாதாரப் பிரச்சனைபற்றி,... தள்ளுவண்டில்காரனிட்ட இளநீரைக் குடிச்சிட்டு கோம்பையை தெருவில போட்ட பொதுமகனிட்ட மைக்கை நீட்டினேன்.

"ஐயா, பொதுமகனே, தாங்கள் ஏன் கோம்பையைத் தெருவில் போட்டீர்கள்?"

"இளநி குடிச்சு முடிஞ்சதால"

"நல்லது, நான் கேட்பது என்னவென்றால், நீங்கள் இளநீரைக் குடித்துவிட்டு ஏன் கோம்பையை தெருவிலே போட்டீர்கள் என்றுதான்."

"பின்ன, கோம்பையை வைச்சுக்கொண்டு இளநியத் தெருவில ஊத்தச் சொல்லுறீரா?"

"அதுவும் சிந்திக்க வேண்டிய விடயம்தான். நீங்கள் போங்கள். ஐயா இளநீர் வியாபாரியே, தங்கள் விற்கும் இளநீர்க் கோம்பைகள் இப்படித் தெருவில் எறியப்படுகின்றனவே?"

"எறிஞ்சா எறியட்டும் உடு. காசத் தந்துட்டானுல்ல. ஏம் பொழைப்பு சரியாப் போச்சு. ஒனக்கு வேணுண்ணா தேவையான கோம்பைய அள்ளிக்கிட்டு ஊருக்குப் போய்ச்சேரு."

"இளநீர் கோம்பைகளுக்குள் நீர் சேர்ந்து நுளம்பு பெருகுவதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"இளநி வித்தப்புறம் கோம்பை என்னதில்லையே? நாம்போய் நொளம்புகிட்ட குடியிருப்பு வரியா வாங்க முடியும்? ஏதோ, தன்பாட்டுல வளருதுக. நமக்கென்ன வம்பு?"

இறுதியாக எங்கட அரசியல்வாதியொருவரைச் சந்திச்சன். "ஐயா, தாங்கள் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?"

"அரசியல்"

"அப்போ, சும்மா இருக்கிறீர்கள்...?"

"அதுதான் அரசியல்"

"தாங்கள் யாழ்ப்பாணத்திலல்லவா வாக்குப் பெற்றீர்கள். ஏன் கொழும்பில் இருக்கிறீர்கள்?"

"தம்பீ, நீர் யாழ்ப்பாணத்திலயெல்லே படிச்சீர். பின்ன ஏன் கொழும்பில வேலைபாக்கிறீர்?

"அது தொழில்..."

"இதுவும் தொழில்தான்."

"அரசியலும் தொழிலா?"

"தொழிலெண்டபடியால்தானே சம்பளம் தாறான்."

"அப்படியானால் மக்கள் சேவை எண்டு தாங்கள் சொல்லிக்கொள்வது....?"

"இங்க பாரும். ரெயில்வே சேவையெண்டுதான் சொல்லுறான். உம்மை டிக்கட் இல்லாமலோ ட்ரெயினில ஏத்துறான்? சேவைக்குத்தான் சம்பளம் வாங்கிறம்."

செய்யாத சேவைக்குச் சம்பளம் வாங்கும் தங்கள் சேவையை வாழ்த்தி விடைபெறுகிறேன். கொழும்போடு வாழ்ந்தாலும் கோட்டும் கேசுமாய் கொழும்போடு வாழ அந்த வினாயக மூர்த்தி என்றும் தங்களுக்கு அருள் பாலிப்பானாக!

யாவும் கலப்படமற்ற கற்பனை

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன.

கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்-06 [illegible]

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.[illegible]

கிரிக்கெட் விளையாட்டில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு இப்போதெல்லாம் கூரையைப் பிய்த்துக் கொண்டு பணம் கொட்டத் தொடங்கி விடுகிறது. அதிலும் அவுஸ்திரேலிய வீரர்கள் தான் அதிக பணம் பெறும் வீரர்களாக இருந்து வருகிறார்கள்.

அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வோர்ன் சிறந்த பந்து வீச்சாளராக இருந்து பணத்தை பெற்று வருவதோடு, இடைவிடையே நடிப்பதன் மூலமும் பணம் சம்பாதிக்கிறார். இவர் நடிப்பது திரைப் படங்களில் அல்ல, விளம்பரப்படங்களில்.

அவுஸ்திரேலிய அணி சார்பாக விளம்பரங்கள் மூலம் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களில் ஒருவரான ஷேன் வோர்ன் அண்மையில் ஐரோப்பிய சப்பாத்து நிறுவனமான 'மிற்ரே'யுடன் 5 இலட்சம் அமெரிக்க டொலர் (நம்நாட்டு மதிப்பில் சுமார் 1 கோடியே 53 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா) பெறுமதியான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

உதைபந்தாட்ட வீரர்கள் அணியும் சப்பாத்துக் களை அணிந்த வண்ணம் கிரிக்கெட் மைதானங் களில் வண்ண உருவப் படமாக ஷேன் வோர்ன் காட்சியளிக்கவுள்ளார்.

ஷேன் வோர்ன் கடந்த 7 வருடங்களாக தைக் நிறுவன விளம்பரங்களுக்கு ஒப்பந்தம் செய்யப் பட்டிருந்தார். அந்த ஒப்பந்தம் முடிந்த பின் 'மிற்ரே'யுடன் செய்து கொண்ட புதிய ஒப்பந்தம் இதுவாகும்.

உடையலங்காரி

'பச்சை நிறமே பச்சை நிறமே...' என்று பாடாத குறையாக பச்சை வண்ணத்தில் அதிக வேலைப்பாடுகள் கொண்ட உடையலங் காரத்தில் வரும் இந்த அழகி இப்படி காட்சியளித்தது உடையலங் காரக் கண்காட்சியில் அல்ல, உலக அழகிப் போட்டியில்.

அண்மையில் நடந்த 50வது மிரபுஞ்ச அழகி (மிஸ்-யுனிவேர்ஸ்) கலந்து கொண்ட ஹொண்டுராஸ் நாட்டு அழகிதான் இவர். அழகிப் பட்டம் வென்றவர் மியூட்டோரிக்கா அழகி என்பது தெரிந் ததே.

மிகப் பெரிய விமானங்களான போயிங் ரக விமானங்களுக் குரிய பாகங்களை ஒன்றிணைக்கும் பிரதான மையம் அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் உள்ள எவரெட்டில் அமைந்துள்ளது.

இதன் பிரதான கட்டடமும் மிகப்பரந்த அமைப்பினைக் கொண்டது. இதன் உள்ளகப் பிரதேசத்தின் நிலப்பரப்பு 98.3 ஏக்கரும் மத்திய பகுதியின் பரப்பளவு 1925 ஏக்கரும் கொண்டது.

இவ்வளவு விஸ்தீரண இடத்தைக் கொண்டிருப்பதால் தான் இங்கு ஒரே நேரத்தில் பல பிரமாண்டமான விமானங்கள் உருவாக் கப்படுவதை இப்படத்தில் பார்க்கிறீர்கள்.

இணைப்பு

கிக்கு ஏறுதே!

சிறார்களை மட்டுமன்றி சில பெரியவர்களையும் வாயூற வைக்கும் ஐஸ் பழங்கள் தான் இவை. ஆனால் இவற்றை சிறார்கள் கண்டிப்பாக வாங்க முடியாதவாறு தடை விதிக்கப்பட்டுள் ளது.

16 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே வாங்கி சுவைக்கக் கூடிய இந்த ஐஸ் பழங் கள் 1.5 சதவீத அல்கஹோல் கொண்ட பியர் பானத்தை மூலமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டது.

ஜெர்மனியில் தயாரிக்கப்பட்ட சுவைத் தால் 'கிக்கு ஏறும்' இந்த ஐஸ் பழம் ஒன்றின் விலை 1.10 அமெரிக்க டொலர். நம் நாட்டு மதிப்பில் சுமார் 99 ரூபாம்.

வது பிறந்தநாள் வாழ்த்து

27 ✻ 06 ✻ 2001

துர்க்கா விஷந்தி

தெகிவளையைச் சேர்ந்த திருமதி சத்தியதாஸ் (சதீஸ்)-நுஷ்யந்தினி (துளசி) தம்பதியினரின் செல்வப் புதல்வி துர்க்கா விஷந்தி தனது முதலாவது பிறந்தநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் துர்க்கை அம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழிவாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: (பேரன், பேத்தி) மாமா-கவிஸ்.

இப்பத்திரிகை கொழும்பு-02, வெள்ளவத்தை, தெஸ்ஸன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் வதாபனத்தால் பொரளைகருவலில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஜூலை 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.